657

குண்டூசி

செப்டம்பர் 54. எட்டு அணா

MADRAS
22 ... 1954

Remy
SNOW
" ஸ்நானத்திற்கு ரெமி சோப்,
ஸ்நானத்திற்குப் பின் ரெமி ஸ்னோ, பவுடர்.
முக கவர்ச்சிக்குக் கேட்பானேன்!"
என்று பிரபல தென்னிந்திய நடிகை
மிஸ். மீனாக்ஷி கூறுகிறார்.
A. V. R. A. & CO.
MADRAS I
BOMBAY

மற்றும் ஒரு சிறந்த பிஸ்கோத்து

பிரிட்டானியா...

Glaxo

கிளாக்ஸோ பிஸ்கோத்துகள்

இவை உலகப்பிரசித்தி பெற்ற பாலுணவான கிளாக்ஸோ வின் புஷ்டியான போஷாக்கு சத்து முழுவதும் அடங்கி யிருக்கும்படி தயாரிக்கப்பட்டு, உபரிவிடமின்களும் சேர்க்கப் பட்டவை.

சிறந்த பிஸ்கோத்துகள்

பிரிட்டானியா

FBMI
FEDERATION OF BISCUIT MANUFACTURERS OF INDIA

BBX-11 TM

GUNDOOSI, CINEMA MONTHLY

செப்டம்பர்
முதல் வாரத்தில்
வெளிவருகிறது.....
சமுதாயம் முழுவதிலும் எழும் கேள்வி!
தனிமனிதனின் அன்றாடப் பிரச்சினை!
மாடர்ன் தியேட்டர்ஸ்
சுகம் எங்கே!
கதை, வசனம்
A.K. வேலன் · கண்ணதாசன்
டைரக்ஷன்
கே. ராம்நாத்.
தயாராகிக் கொண்டிருக்கிறது!
"மகேஸ்வரி" ஓர் சரித்திர கற்பனைச் சித்திரம்"

RALEIGH
The ALL STEEL BICYCLE
THE RALEIGH
RALEIGH
RALEIGH
The ALL STEEL BICYCLE
உங்கள் வியாபாரியிடம் கேட்டு வாங்குக
ராலே
உலகில் மிகச் சிறந்த சைகிள்
இந்தியாவில் தயாரிப்பவர்கள் :
ஸென்-ராலே
ஒவ்வொரு ராலே உறுப்பும் தரம், உழைப்பு, அழகு, மூன்றிலும் மிகச் சிறப்பாக இருப்பதை உறுதிப் படுத்துவதான விசேஷ விவரணத் திட்டப்படி தயாரிக்கப்படுகின்றது.
ராலிண்ட் என்ற பெயரை ஸென்-ராலே ஸைகிள்களில் பொருத்தப்படும் ஒவ்வொரு அசல் ராலே உறுப்பிலும் காண்க.
SRX-21TM

குண்டூசி

ஆசிரியர்:
பி.ஆர்.எஸ்.கோபால்

காப்பிக் கலை

காப்பி தயாரிப்பது சர்வ சாதாரண விஷயம்தான். ஆனால் கலக்கப்படும் காப்பியில்தான் எவ்வளவு வித்தியாசம்! காப்பிக்கொட்டையில் பலரகம் உள்ளது இருக்கட்டும்; ஒரே காப்பிப்பொடி, சர்க்கரை, பால் இவைகளைக்கொண்டே ஒருவர் தயாரிக்கும் காப்பிக்கும் இன்னொருவர் தயாரிக்கும் காப்பிக்கும் எவ்வளவு மாறுதலான ருசி! உண்மையில் காப்பி தயாரிப்பதே ஒரு தனிக் கலை. நீங்கள் ஒப்புக்கொண்டாலும் ஒப்புக்கொள்ளாவிட்டாலும், தியாகராயநகர் "காப்பி பாலஸி"ல் காப்பி அருந்துவோர் இந்த அபிப்பிராயத்தை அழுத்தமாகத் தெரிவிப்பர்கள். காப்பி தயாரிப்பது மட்டுமல்ல; காப்பி அருந்துவதுகூட ஒரு கலைதான்! ஊரிலுள்ள எந்த ஹோட்டலில் நல்ல காப்பி கிடைக்கிறது என்று தெரிந்து வைத்துக்கொண்டு எவ்வளவு பேர்கள் பல மைல்கள் பிரயாணம் செய்து சென்று காப்பி அருந்திவிட்டு வருகிறார்கள்!

ஆனால், நான் இங்கு எழுத முற்பட்டது இந்தக் காப்பிக் கலையைப் பற்றி அல்ல; சினிமாவில் காப்பியடிக்கும் விஷயத்தை ஒரு பிரத்தியேகக் கலையாக விருத்தி செய்திருக்கிறார்களே, அதைப்பற்றியே எழுதப்போகிறேன்.

படமுதலாளிகள் புராணப் படங்களைத் தயாரித்துக் கொண்டிருந்த வரையில் 'கதைக் காப்பி' ஏற்படாமல் இருந்தது. சமூகப் படங்களைத் தயாரிக்கத் தொடங்கியதும் மெதுவாக பிரபல நாவலாசிரியர்களின் கதைகளிலிருந்து முக்கிய சம்பவங்களையும், அருமையான பகுதிகளை பெயர்த்தெடுத்துக் கொண்டனர். பிறகு மேனாட்டுப் படங்களில் கை வைக்கத் தலைப்பட்டனர். இதில் நல்ல அனுபவம் ஏற்பட்டு, இப்பொழுது பூராக் கதைகளையே திருடும் நிலைமைக்கும் வந்துவிட்டனர்.

ஒரே பிரபல ஆங்கிலக் கதையை ஒரு படமுதலாளி ஹிந்தியில் தயாரிப்பார்; தமிழில் ஒருவர் தயாரிப்பார்; இன்னொருவர் தெலுங்கில் தயாரிப்பார். பிறகு ஹிந்தியில்தயாரித்தவர் அதே கதையை தமிழ், தெலுங்கு பாஷைகளில் தயாரிப்பார். இதேபோல தமிழ், தெலுங்குப் பாஷைகளில் தயாரித்தவர்களும் இக்கதையை ஹிந்தியில் வெளியிடுவார்கள்! நம் படங்களில் கருத்துகளும், கதைகளும், ஒரேமாதிரி இருப்பதற்கு இதுவே காரணம்.

கதைகள் மட்டுமன்றி பாட்டுகளும், மெட்டுகளும்கூட ஆதிகாலம் முதலே தமிழ் தெலுங்குப் பட முதலாளிகளால் காப்பியடிக்கப்பட்டு வருகின்றன. ஒரு ஹிந்திப் படத்தில் ஒரு புது மெட்டைக் கேட்டவுடன், அது தமக்காகவே அமைக்கப்பட்டதாகக்கருதிக் கழுகுப் பாய்ச்சலில் கவ்வி, அதைத் தம் படங்களில் புகுத்திவிடுகிறார்

பட்டை-7 ஊசி-12 பிரதி-84
செப்டம்பர் – 1954

கள் தமிழ் தெலுங்குப் பட முதலாளிகள். பாவம், அந்த மெட்டை அல்லது பாட்டை உருப்படுத்துவதற்கு அதன் சங்கீத டைரெக்டர் எவ்வளவு நாள் சிரமப் பட்டிருப்பார்? இந்தக் காப்பியைப் பார்த்தவுடன் அவர் எவ்வளவு வயிறெரிந்திருப்பார்?

கதைகள், புஸ்தகங்கள் இவைகளின் உரிமைகளைப் பதிவு செய்து பாதுகாப்பதுபோல் சங்கீதமெட்டுகளையும் உரிமை பதிவு செய்ய வழி காணவேண்டுமென்று பிரபல வட இந்திய சங்கீத டைரெக்டரான நௌஷத் தெரிவித்திருக்கிறார்.

'தட்டிப்பேச ஆள் இல்லாதவரையில் தம்பி சண்டப் பிரசண்டன்'க விளங்கலாம். ஒருவரும் உரிமை வழக்குகள் தொடராத வரையில், படமுதலாளிகள் 'அதிர்ஷ்டசாலிகள்'தாம். ஆனால், வழக்குகள் ஏற்பட்டால், லக்ஷக்கணக்கான ரூபாய்கள் செலவு செய்து தயாரித்த படத்தை வெளியிட முடியாமலே போய் விடலாம்.

ஒருவருடைய உழைப்பை—அது கதையாயினும், மெட்டு ஆயினும், இன்னும் எதுவாயினும் — அதைத் தக்க ஊதியம் அளிக்காமல்—திருடிக் கொள்ளுவது மிக மிக அற்பத்தனமான கொடூரச் செய்கையாகும். இவ்விதக் கொடூரத்தை — நீதிபதிகள் குறிக்கிட்டுத் தடுக்கு முன்—படமுதலாளிகள் தாங்களாகவே நிறுத்தி விடுவது நல்லது.

வருஷ சந்தா

இந்தியா, இலங்கை ...	ரூ. 6
வெளி நாடுகள் ...	... ரூ. 9

தனிப் பிரதி

இந்தியா	8 அணா
இலங்கை ...	... 50 சதம்
வெளி நாடு ...	... 12 அணா

கட்டுரையாளர்களுக்கு

'குண்டூசி'யில் வெளியிடுவதற்கு நல்ல சிறு கதைகள், கட்டுரைகள், ஹாஸ்யத் துணுக்குகள் முதலியவை வரவேற்கப் படுகின்றன. வெளியிடப்படுபவைகளுக்குத் தக்க சன்மானம் அளிக்கப்படும்.

அங்கீகரிக்கப்படாத விஷயங்களைத் திரும்பப் பெற வேண்டுபவர்கள் போதிய ஸ்டாம்ப் உள்ள கவர்களை முன்னதாகவே வைத்து அனுப்பவேண்டும்.

குண்டூசி காரியாலயம்,
26, கிடங்குத் தெரு,
சென்னை—1.

குறிப்பு:—"குண்டூசி"யில் வெளியாகும் கட்டுரைகள் கதைகள், விகடத் துணுக்குகள் முதலியவைகளில் காணப்படும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே. அவைகள் நிஜ நபர் எவரையும் குறிப்பிடுபவை அல்ல. —ஆசிரியர்.

சினி டெக்னீஷியன்கள் சங்க ஆண்டு விழா

விதிகளைத் தளர்த்தக் கோரிக்கை

தியாகராயநகர், ஹிந்தி பிரசார சபா மண்டபத்தில் தென் இந்திய சினி டெக்னீஷியன்கள் சங்கத்தின் பத்தாவது ஆண்டு விழா சென்ற மாதம் 8-ம்தேதி நடைபெற்றது. பி. வி. ராஜமன்னார் தலைமை வகித்தார். இந்திய பில்ம் பெடரேஷன் தலைவர் எஸ். எஸ். வாஸன் பிரசங்கம் நிகழ்த்தினார். கண்டசாலா வெங்கிடேஸ்வரராவின் பிரார்த்தனைக்குப் பின் சினி டெக்னிஷியன்கள் சங்கத் தலைவரான ஏ. கிருஷ்ணன் எல்லோரையும் வரவேற்றுப் பேசினார். சினிமாத் துறையில் வாஸன் செய்துள்ள சேவையையும் நுண்கலைகளில் பிரதம நீதிபதி காட்டும் அக்கறையையும் பாராட்டினார். சங்கக் காரியதரிசி ரஜனிகாந்த் பின்பு ஆண்டு அறிக்கையைப் படித்து அச்சங்கத்தின் நடவடிக்கைகளை விளக்கினார்.

எஸ். எஸ். வாஸன் பேசுகையில் தன்னைக் கூப்பிட்டு கௌரவித்ததற்காக சினி டெக்னீஷியன்கள் சங்கத்தினருக்கு நன்றி தெரிவித்தார். பிரதம நீதிபதி சினிமாக் கலையிலும், இதர நுண்கலைகளிலும் அதிக அக்கறை செலுத்துகிறார் என்று கூறி, டில்லி சங்கீத அகாடமியில் அவர் நிகழ்த்திய பிரசங்கத்தை மேற்கோள் காட்டினார். வாஸன் மேற்கொண்டு பேசுகையில் சினி டெக்னீஷியன்கள் தொழில் நிபுணர்கள் என்றும் ஆகையால் பாக்டரிகள் சட்டத்தின் கீழ் அவர்களை சேர்க்கக் கூடாதென்றும் சொன்னார். உயர்ந்த ரகப்படங்கள் தயாரிக்கப்படுவதை அவர் பாராட்டிப் பேசுகையில், இளைஞர்களைக் கெடுத்துவிடுவதாக கண்டித்த காலமெல்லாம் மலையேறிவிட்டதென்றும், பம்பாய் முதன் மந்திரி மொரார்ஜி தேசாய்கூட தம் மனதை மாற்றிக் கொண்டு குழந்தைகளின் அறிவைப்பெருக்கும்வகையில்சினிமாப்படங்கள் வளர்க்கப்பட வேண்டுமென்று கூறியுள்ளதை எடுத்துக்காட்டினார்.

சினிமாத் தொழிலுக்கு சர்க்கார் விதித்துள்ள கட்டுப்பாடுகளை குறிப்பிட்டு அவர் பேசுகையில் அனேகமாக எல்லா ஐரோப்பிய நாடுகளிலும் சினிமாத் தொழிலைசர்க்கார் நேரடியாக கண்காணிப்பதில்லை என்றார். படங்களைத் திரையிட எவ்வித விதிமுறைகளும் அந்த நாடுகளில் கிடையாதென்றும், தமாஷா வரி வசூலிப்பில் தான் அந்த நாட்டு சர்க்கார்கள் கவனம் செலுத்துகின்றனர் என்றும் சொன்னார்.

“இப்பொழுதுள்ள சினிமாப் படத் தணிக்கை முறை பிரிட்டிஷ் ஆட்சியின் போது கொண்டு வரப்பட்டது. ஆகையால் அது நிலைமைக்கு ஏற்றபடி மாற்றியமைக்கப்பட வேண்டும். பழைய கெடுபிடி முறைகளே கையாளப்படுவதால் பழைய புராணக் கதைகளையே படமாக்கவேண்டியிருக்கிறது. இப்பொழுதுள்ள தீவிரமான சினிமாப் பட தணிக்கையில், நவீனகருத்துக்களைக் கொண்ட படங்கள் எடுப்பதே கஷ்டம்” என்று ஸ்ரீ வாஸன் கூறி, இக்காலத்தவருக்குத் தேவையான படங்களைத் தயாரிக்க ஏதுவாகும் வகையில் படத் தணிக்கையைத் தளர்த்த வேண்டும் என்றார்.

பிரதம நீதிபதி பி.வி. ராஜமன்னார் அடுத்துப் பேசுகையில் சினிமா தொழில் ஒரு தனிப்பட்ட சிறப்புடைய தென்றும் அவர் கூறினார். சினிமாக் கலையின் சிறப்புப்பற்றி அவர் பேசுகையில் பல கலைஞர்களும் தொழில் நிபுணர்களும் சேர்ந்து வேலை செய்து தயாரித்த ஒரு படத்தை ஒரு கலைச் சிறப்புள்ள பொருளாகவே கருத வேண்டுமென்றும், அது போன்ற கூட்டு முயற்சியில் ஈடுபட்டுள்ளவர்களிடத்தில பூரண ஒற்றுமை இருக்க வேண்டுமென்றும் அவர் சொன்னார். நாட்டுக்குப் பெருமை தரக்கூடிய படங்களை சினிமா டெக்னீஷியன்கள் உற்பத்தி செய்வார்களென்று ராஜமன்னார் நம்பிக்கை தெரிவித்தார். இப்பொழுதுள்ள சினிமா தணிக்கை பற்றி எஸ். எஸ். வாஸன் கூறியதைத் தான் பூரணமாக அங்கீகரிப்பதாக பிரதம நீதிபதி சொன்னார். தனிப்பட்ட ஹோதாவில் அவர் பேசுகையில் லளித கலை வளர்ச்சிக்கு வெளியிலிருந்து கட்டுப்பாடு விதிப்பது போன்ற கெடுதலே வேறு இருக்க முடியாதென்றார். சட்டங்களை இயற்றுவதன் மூலம் நுண்கலை வளர்ச்சிக்கு சர்க்கார் தடையாக உள்ளதென்றும் இதனால் உண்மையில் தொழிலுக்கு எவ்விதமான உதவியும் கிடையாதென்



நீங்கள்

இன்று

உங்கள் பற்களை

மக்ளீன்

செய்தீர்களா?

ஆம், அதன் இரகசியம் இதுதான் . . .

பற்களைத் தவறாமல் சுத்தம் செய்து வருவதால் அவை நெடு நாளைக்கு ஆரோக்யமாக இருக்கின்றன என்பதைத் தெளிவாக்கி விடுவோம். பிரதி தினமும், இருவேளையும் மக்ளீன்ஸ் பெராக்ஸைட் பற்பசை உபயோகிப்பதால், அதிக வெண்மையான பற்களும், உறுதியான ஈறுகளும், நறுமணமுள்ள சுவாசமும் நிச்சயமாக உண்டாகின்றன. இவ்வித்தியாசத்தை நீங்களே காணலாம். மக்ளீன்ஸிலுள்ள ஒரு ப்ரத்யேகமான பொருள் பற்களின் மேல் படிந்துள்ள மங்கலான பூச்சை மாற்றி பற்களின் மேல் இயற்கையாக ஒளிரும் வெண்மையை வெளிக்கொணர்கிறது.

“... என்னைப் போலவே தங்களது பற்களைப் பற்றிப் பெருமைப் படுபவர்களுக்கு மக்ளீன்ஸ் பற்பசையையே சிபார்சு செய்கிறேன்”

க்ளோரோபில் சேர்ந்தும் கிடைக்கும்.

MTY-38-TAM.

உங்கள் குடும்பங்களுக்கு
தேவையான

எவர்சில்வர்

அலுமினியம், பித்தளை
பாத்திரங்களுக்கு

**M. A. எத்திராஜுலு
நாயுடு**

7/4, ஈவினிங் பஜார் ரோடு,
சென்னை—3

றும் கூறினார். சினிமாப்பட தணிக்கை விதிகள் ஏன் ஏற்படுத்தப் பட்டன வென்று அவர் விரிவாக விளக்குகையில் இதற்கு முக்கிய முதல் காரணம் ஆபாசக்காட்சிகள் பரவுவதைத்தடுக்கவென்றும் இதனால் பொதுவாக ஒழுக்கத்துக்குப் பாதகம் ஏற்படுமென்றும் மற்றொரு காரணம், நாட்டில் அரசியல் சமநிலையை பலாத்காரத்தின் மூலம் மாற்ற முயற்சிப்பதைத் தடுக்கவும் ஆகுமென்றார். "இவைகளைத் தடுக்க சினிமாப் படத் தணிக்கை விதிகளே தேவையில்லை; வேறு சட்டங்கள் உள்ளன. ஆபாச பிரசுரங்களோ, புத்தகங்களோ சென்ஸார் போர்டுக்கு முன் கூட்டியே அனுப்புவதில்லை. ஆனால் பொதுஜன பந்தோபஸ்துக்கும் ஒழுக்கத்துக்கும் ஆபத்தானதென்று தெரிந்தால் பின்பே நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுகிறது. அதே முறையையே சினிமாப் படங்களுக்கும் கடைப்பிடிக்கலாம். சினிமாப்படங்கள் பொது மக்களை பலாத்காரத்தில் இறங்க, நெருக்கடி ஏற்படுத்தக் கூடுமானால் அதைத் தயாரித்தவர்மீது சர்க்கார் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம்" என்றார்.

"எவ்வித படத் தணிக்கையும் தேவைஇல்லை என்பதே என் அபிப்பிராயம்; தணிக்கையைக் கைவிட முடியவில்லை யென்றால், மிகவும் குறைந்த அளவில் அதை வைத்துக் கொள்ளலாம். சினிமாப் படத் தொழிலின் இரண்டு பிரதிநிதிகளை அவர்களுடைய கருத்துக்களை எடுத்துக்கூற தணிக்கை போர்டில் சேர்த்துக் கொள்ளலாம். பொது மக்களின் ஒழுக்கத்தை சினிமாப் படங்கள் கெடுத்து விடுகின்றன என்று கூறுவது பொருந்தாது" என்று அவர் கூறினார்.

பின்பு கமிட்டி தேர்ந்தெடுத்த சிறந்த டெக்னீஷ்யன்களுக்கு பிரதம நீதிபதி சங்கத்தின் சார்பில் பரிசுகளை வழங்கினர்.

தென் இந்திய சினிமா டெக்னீஷ்யன்கள் சங்கத்தின் பத்தாவது ஆண்டு விழாவை ஒட்டி அன்றுகாலை ஹிந்தி பிரசார சபையில் நடந்த டெக்னிகல் கூட்டத்தில் டி. ஜானகிராமனும், சினிமா நடிகர், சங்கீத டைரெக்டர் பாலசந்தரும் முறையே, 'படமெடுப்பது பற்றியும், சினிமா சங்கீதத்தைப் பற்றியும் பிரசங்கம் நிகழ்த்தினார்கள்.

வாழ்க்கை வண்ணம்

ஆந்திர சாம்ராஜ்யத்தை ஆண்டு வந்த பழங்கால மன்னர்களில் கிருஷ்ணதேவராயர் சரித்திரச் சிறப்புப் பெற்றவர். அவர் காலத்தில் ஓவியம், சிற்பம், இலக்கியம், சங்கீதம் முதலான அருங் கலைகள் தழைத்தோங்கி வளர்ந்தன. ஆந்திரர்கள் அந்த நாட்களில் அபாரமான நாகரிக வளர்ச்சி பெற்று வாழ்ந்து வந்தனர்.

கிருஷ்ண தேவரின் ஆட்சி மறைந்து பல நூற்றாண்டுகள் ஆகிவிட்டன. இருந்த போதிலும் தற்போது கூட துங்க பத்ரா நதிக் கரையில் தலை நிமிர்ந்து நிற்கும் பாழடைந்த ஹம்பி நகரமும், அதன் மகோன்னதச் சிற்பங்களும் அவரது ஆட்சியின் பெருமையைப் பறை சாற்றிக் கொண்டிருக்கின்றன. சரித்திர

ஜமுனா



ரோஹிணியின் "பணம் படுத்தும் பாடு" என்ற ஒரே ஒரு படத்தில் மட்டுமே சந்தித்திருக்கிறார்கள். இருந்த போதிலும், அவர் தமிழ்ப் பட உலகில் விரைவில் புகழ் பெறப் போகும் ஒரு இளம் நக்ஷத்திரம் என்பதை நாம் அறிகிறோம்.

கலாவல்லி ஜமுனாவை பெற்றோர் சீரும் சிறப்புமாய் வளர்த்தனர். தக்க வயது வந்ததும் துக்கிராலாவில் உள்ள பெண் பாடசாலையில் ஜமுனா சேர்க்கப்பட்டார். அதே பள்ளியில் அவர் படித்து எஸ். எஸ். எல். ஸி. பரீக்ஷை எழுதித் தேறினார். ஜமுனாவுக்கு சங்கீதம் இயற்கையாக அமைந்து போன விஷயம். அவரிடம் இனிய சாரீரம் பொருந்தியிருப்பதை அறிந்த ஸ்ரீநிவாச ராவ் ஜமுனா வாய்ப்பாட்டிலும், வீணையிலும் பயிற்சி பெறுவதற்கு ஏற்பாடு

செய்தார். ஜமுனா சிரத்தையுடன் இக்கலையில் நல்ல பயிற்சி பெற்றிருக்கிறார். ஜமுனா வீட்டில் ஒரு செல்வப் பெண்; அவர் எதைச் செய்தாலும் பாராட்டக் கூடியவர்களான பெற்றோர்கள். இந்த நிலையில் அவர் துறுதுறுவென்று எதையாவது செய்து கொண்டிருக்கும் குணத்தைப் பெற்றதில் ஆச்சரியமென்ன. பள்ளிக்கூடத்தில் ஏதேனும் நாடகம் நடத்தும் யோசனை ஏற்பட்டால் ஜமுனா "நான்" என்று முன் நிற்பார். நல்ல முக அழகும், பாடும் திறமையும் பெற்ற ஜமுனா ஒரு வேளை ஒளிந்து கொண்டால் கூட பள்ளிக்கூட நிர்வாகிகள் சும்மா விட்டிருப்பார்களா என்ன! பள்ளிக்கூட நாடகங்கள் அவர் மனதில் நடிப்பு உணர்ச்சியை வெகுவாகத் தூண்டி விட்டன. ஆதலால், சில வெளி நாடகங்களிலும் **[தொடர்ச்சி 81-ம் பக்கத்தில்]**

செப்டம்பர்
வெளியீடு
அசோகா பிக்சர்ஸ்
என் மகள்
ரஞ்சன். தி.வரலட்சுமி. நம்பியார்
மைனாவதி. மீனாட்சி
முதலியோர் நடித்தது
அசோகா பிக்சர்ஸ் மைலாப்பூர் மதறாஸ்-4

இன்ஜேசியைக் கேளுங்கள்

சினிமா, நாடகம், நடனம், சங்கீதம் ஆகிய கலைகள் சம்பந்தமாக உங்களுக்குள்ள சந்தேகங்களைத் தீர்ப்பதற்கே இந்தப் பகுதி ஏற்பட்டிருக்கிறது. யாருடைய மனமும் நோகாதபடி தமாஷாகவே பதில் அளித்து, மேற்சொன்ன கலைகளைச் சீர்திருத்துவதே என்னுடைய நோக்கமாகும்.

டி. எஸ். உமாபதி (திருச்செங்கோடு)

என்னுடைய ஜாதகத்தை நாகேந்திரராவிடம் கொடுக்கலாமா? கே. சாரங்கபாணியிடம் கொடுக்கலாமா?

வேறு ஒரு ஜோஸியரிடம் கொடுத்து "இவ் விருவரில் யாரிடம் கொடுக்கலாம்?" என்பதைக் கேட்டுத் தெரிந்து கொள்ளும்.

அம்பிகை ரங்கனாதன் (மடுல்கலை, இலங்கை)

நான் அநேக நடிகைகளுக்கு புகைப்படம் அனுப்புமாறு கடிதம் எழுதினேன். ஆனால், பானுமதி ஒருவர்தான் இரண்டு புகைப்படங்களை அனுப்பிவைத்தார். நம் இதர நடிகைகளுக்குத் தங்கள் ரஸிகர்கள் மீது அபிமானமே கிடையாதா?

தலையைச் சுற்றி மூக்கைத் தொடுவது நம் நடிகைகளுக்குப் பிடிக்காது. கடிதமும் போட்டோவும் அனுப்பி ரஸிகர்களின் அபிமானத்தை வளரச் செய்து, அதன் மூலம் பட முதலாளிகள் அவர்களுக்கு அதிக மதிப்பும், பணமும் அளிப்பது எவ்வளவு சுற்றுப்போக்கான முறை? அதற்குப் பதில் பட முதலாளிகளின் கவனத்தையே நேரிடையாகவே கவர்ந்தால்........?

ஆர். ஏ. நாடார் (காலி, இலங்கை)

ஒரு குடும்ப ஸ்திரிக்கும், ஒரு கல்யாணமான நடிகைக்கும், ஒரு கல்யாணமாகாத நடிகைக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகள் என்னென்ன?

குடும்ப ஸ்திரீ (அருந்ததி) நக்ஷத்திரப் பதவியைப் பெறும் நோக்கத்துடன் வாழ்க்கையில் ஈடுபட்டவள். விவாஹமான நடிகையோ நக்ஷத்திரப் பதவியைப் பெற்றபின் குடும்ப வாழ்க்கையை நாடுபவள். கல்யாணமாகாத நடிகையோ நக்ஷத்திரப் பதவிக்காக குடும்ப வாழ்க்கையை வெறுப்பவள். ஆனால், இந்த மூன்று தரத்தாரிடமும் காதலன் அல்லது கணவன் என்ற ஒரு ஆண் சிக்கித் தவிக்க வேண்டியதாயிருக்கிறது.

எஸ். மருதலிங்கம் (கிளி நொச்சி)

"ஜாதகம்" புகழ் சூர்யகலாவை எங்கே காணலாம்? அவருடைய விலாஸம் என்ன?

திரையில் விசாலமாகக் காட்சியளிக்கும் அவரது விலாஸம்:—நெ. 5, வில்லேஜ் ரோடு, நுங்கம்பாக்கம், சென்னை.

டி. டபிள்யு. எம். குஸுமா (யாழ்ப்பாணம்)

அஞ்சலி தேவிக்குக் கடிதம் எழுதினால் அவர் பதில் எழுதுவாரா?

அந்தமாதிரியான கெட்ட வழக்கத்தை அவர் வைத்துக் கொள்ளுவதில்லை.

கே. செல்வராஜன் (கிளி நொச்சி)

பி. யு. சின்னப்பா உயிரோடு இருந்தால் இதுவரையில் எத்தனை படங்களில் நடித்திருப்பார்?

இதை என்னிடம் கேட்கிறீரே; சித்ரகுப்தனிடம் கேட்க வேண்டிய கணக்கல்லவா இது!

எம். எல். ஏ. மஜீத் (ரேப்பனை)

எம். வி. ராஜம்மா தற்போது எந்தப்படத்தில் நடிக்கிறார்? முதன் முதலில் நடித்த படம் எது?

ராஜம்மா முதன் முதலில் நடித்த படம் கன்னட "சம்சார நௌகா". தற்போது "சந்தேகி" தமிழ் தெலுங்குப் படங்களிலும், "மனைவியின் மகள்" தமிழ்ப் படத்திலும் நடித்து வருகிறார்.

கே. சங்கரன் (வேலூர், சேலம்)

ஒரு காலத்தில் மிகப் புகழுடன் விளங்கிய எம். கே. டி. பாகவதரும், டி. ஆர். மஹா லிங்கமும் இப்பொழுது புகழ் குன்றிப் போயி ருப்பதன் காரணம் என்ன?

ரஸிகர்கள் பாட்டையே பிரதான மாய் கருதி வந்த காலம் மாறி நடிப் பையே பிரதானமாய் கருதும் காலம் இப்பொழுது வந்திருப்பது தான் கார ணம்.

எம். எஸ். எம். சிராஜி (கொழும்பு)

எம். ஜி. ராமச்சந்திரன், வீரப்பா, ரஞ்சன், சிவாஜி கணேசன், எம். கே. ராதா—இவர் களில் கத்திச் சண்டையில் சிறந்தவர் யார்?

முதல் மூவருக்கு மட்டுமே உண்மை யில் கத்திச் சண்டை தெரியும். மற்ற இருவரும் சண்டையிடுவதாக நடிக்கத் தான் செய்கிறார்கள். முந்தின மூன்று பேர்களுள் யார் சிறந்தவர் என்று தீர்மானிக்க வேண்டியது கத்தி முனையில்; பேனாமுனையில் அல்ல!

நாகராஜன் (பட்டுக்குடி)

நவாப் ராஜமாணிக்கம் தற்போது எங்கிருக்கி றார்? அவரது விலாஸத் தைத் தெரிவிக்கவும்.

'நவாப்' தற்போது சென்னையில் 'தர்பார்' நடத்திக் கொண்டிருக் கிறார். விலாஸம்: காங் கிரஸ் மைதானம், தேனாம்பேட்டை, சென்னை-6.

ஜி. நரசிங்கம் (செங்கற்பட்டு)

எந்த நக்ஷத்திரத்தில் பிறந்தால் சினிமா உல கில் சிறந்த நக்ஷத்திரம் ஆகலாம்?

ஒன்று அல்லது சில குறிப்பிட்ட நக்ஷத்தி ரங்களில் பிறந்தவர் கள் தான் சினிமாவில் சிறந்த நக்ஷத்திரங்களாக முடியும் என்று நினைப்பது தவறு. ஆனால் ஒரு (சினிமா) நக்ஷத்திரத்தின் வயிற்றில் பிறப்பவர்கள் அநேகமாக நக்ஷத்திர மாகி விடுவார்கள் என்று கூறலாம்.

இயேசுதாஸன் (மதுரை)

படத் தயாரிப்பிற்கான ஒத்திகை நடை பெறும் விதத்தை விளக்கவும். நாடக ஒத் திகைக்கும் அதற்கும் உள்ள வேற்றுமை என்ன?

முன் நாளிலெல்லாம் படம் தயாரிக் கப் படுவதற்கு முன்னராக இரண்டு மாதங்களுக்கு கம்பெனி வீட்டில் ஒத் திகை நடைபெறும். பிறகு ஸ்டுடியோ வில் கேமிரா முன்பாக சில தடவைகள் ஒத்திகை நடைபெறும். பின்னர் படம் தயாரிக்கப்படும். ஆனால், இந்த முறை மாறி வெகு காலம் ஆகிறது. டைரெக் டர் கொடுக்கும் சம்பாஷணைகளை நடி

''என்னிடம் உனக்கேன் அவ்வளவு பயம்?'' என்று ''என் மகள்'' படத்தில் ரஞ்சன் மைனாவதியிடம் கேட்கிறார் போலும்.



"சுகம் எங்கே ?" உள்ளதென உங்களுக்கு உண்மையில் தெரியாதா ?—இப்படி சாவித்திரி கே. ஆர். ராமசாமியிடம் கேட்டிருந்தால் பொருத்தமாக யிருக்கும் அல்லவா ?

கர்கள் வீட்டில் மனனம் செய்து கொள்ளுவார்கள். கேமிரா முன் சில தடவை நடிப்புடன் கூட ஒத்திகை ஆனவுடன் படத் தயாரிப்பு தொடங்கும். சம்பாஷணைகள் பாடமாகா விட்டாலும் கூட மேடையில் சமாளித்துக் கொண்டு விடலாம். ஆனுல் சினிமாவில் இது சாத்தியமல்ல. சினிமாவில் ஒளி, ஒலிப்பதிவு சாதனங்களையும் அநுசரித்து நடிக்கவும், பேசவும் வேண்டிய நிர்ப்பந்தம் உண்டு.

பி. கே. ஜவஹர்
(நஞ்சைப்புளியம்பட்டி)

நான் சினிமாவில் சேர மிக ஆவலாயிருக்கிறேன். இதற்கு நான் முதலில் "என்ன செய்ய" வேண்டும்?

சினிமாவில் சேர்ந்திருப்பவர்களைவிட நீர் மிக புத்திசாலி என்று கருதுகிறேன். ஏனென்ருல், அவர்கள் சினிமாவில் சேர்ந்த பின்னர் தானே "என்ன செய்வது?" என யோசித்துக் கொண்டிருக்கிருர்கள்!

* * *

நடனத்திற்கு ஏற்றவர்கள் ஆண்களா? அல்லது பெண்களா?

"நடனத்திற்கு ஏற்றவர்கள் நாரியரே" என்பது என் கருத்து.

ஏ. எஸ். மனேன்மணி (கொழும்பு)

ஜெமினி ஸ்டுடியோவின் விலாஸத்தை கட்டாயமாய் தெரிவிக்கவும்.

"ஜெமினி ஸ்டுடியோ, செகிட்ரல் போஸ்ட், சென்னை" என்று எழுதினல் கடிதம் சேர்ந்து விடும்.

எஸ். வளையாபதி (செருவாமணி)

வைஜயந்திமாலாவுக்குப் பாடத் தெரியுமா? அல்லது இரவல் குரலா?

வைஜயந்திக்கு சாதாரணமாய்ப்பாடத் தெரியும். ஆனுல், படங்களில் பாடும் போது பிரபல பின்னணிப் பாடகிகளின் குரலையும், நேரில் பேசும் போது தன் பாட்டியின் குரலையும் வைஜயந்திமாலா இரவல் பெறுவது வழக்கம்.

மிஸ். கே. சந்திரா (விஜயவாடா)

யூ. ஆர். ஜீவரத்தினம், எம். எஸ். சரோஜினி ஆகியவர்கள் இப்போதெல்லாம் ஏன் சினிமாவில் நடிப்பதில்லை?

சினிமா உலகம் அதி வேகமாய் "வளர்ச்சி" பெற்று வருகிறதல்லவா இப்பொழுது!

ஜே. சக்ரவர்த்தி (வேதாரண்யம்)

"பிளாஷ் பேக்" (Flash-back) என்ருல் என்ன?

அசல் கதையை ஒரு கட்டத்தில் நிறுத்திக் கொண்டு, இறந்த கால சம்பவங்களைக் காட்டுவது "பிளாஷ் பேக்" எனப்படும்.

'கண்ணன்' (கும்பகோணம்)

எம். எஸ். எஸ். பாக்கியத்தின் விலாஸத்தைத் தெரிவிக்கவேண்டுகிறேன்.

பாக்கியத்தின் விலாஸம்:—"25, பர்க்கிட் ரோடு, தி. நகர், சென்னை-17" என்பது.

கே. ராமச்சந்திரன் (கண்டி)

குண்டுசியாரே! தங்கள் தகப்பனுரான "கோணி ஊசி" யார்? என்ன செய்துகொண்டிருந்தார்?

சரக்குகளைப் பாதுகாக்கும் சாக்குத் தைக்கும் வேலைக்குப் பதில் சாலைகளைச் செவ்வனே காக்கும் 'ஓவர்ஸீயராக' இருந்தார் அவர்.

எம். வி. மாயாண்டிப் பிள்ளை (கான்சாபுரம்)

என் போன்ற ரஸிகர்களைப் பித்தனுக்கி வரும் உங்களிடம் அப்படி என்ன சொக்குப் பொடி வைத்திருக்கிறீர்கள்?

சொக்குப் பொடி ஒன்றுமில்லை; மூக்குப் பொடி வேண்டுமானுல் என்னிடம் இருக்கிறது.

பி. கே. உமாகாந்த் (பொன்னுப்பூர்)

நடிகை.........யை நான் அடைவதற்கு ஓர் உபாயம் சொல்லும். அவரை அடைந்த பின் உமக்கு ரு. 500 பரிசளிக்கிறேன்.

நீர் கேட்கும் உபாயம் எனக்குத் தெரிந்திருந்தால், நீர் அளிப்பதாகக் கூறும் ஐந்நூறு ரூபாய் பரிசுக்குப் பதில் அந்த நடிகையையே நான் பரிசாய் அடைந்திருப்பேனே!

எஸ். எம். ஷரீப் (கிளி நொச்சி)

எழுதப் படிக்கத் தெரியாதவர்கள் சினிமாவில் சேர முடியுமா?

முடியும்; ஆனல், எழுதப் படிக்கத் தெரியா விட்டாலும் ரூபாய் நோட்டுகளை எண்ணிப் பார்க்க நிச்சயம் தெரிந்திருக்க வேண்டும்.

கே. கே. முத்துசாமி (கரூர்)

'சௌகார்' ஜானகிக்கு மணமாகிவிட்டதா? எனின், அவரது கணவன் யார்? குழந்தைகள் உண்டா?

ஜானகி ஸ்ரீநிவாஸ ராவ் என்பவரை மணந்து கொண்டிருக்கிருர். இவர்களுக்குக் குழந்தைகளும் பிறந்துள்ளன.

"சாவித்திரி தாஸன்" (திருச்சி)

பானுமதி, மாதுரி தேவி, அஞ்சலி தேவி, கிரிஜா, சாவித்திரி, வனஜா—இவர்களுள் அழகில் சிறந்தவர் யார்?

அஞ்சலி தேவி என்பது என் அபிப்பிராயம்.

'ராஜன்' (தியாகராயநகர்)

விறுவிறுப்பான சம்பவங்களும், சிறந்த நடிப்பும் நிறைந்த "அந்த நாள்" படம் அதிகம் வெற்றி பெருததற்குக் காரணம் என்ன?

"அந்த நாள்" போன்ற நல்ல படங்

ஸ்பாட் லைட்

பாட்ரீஸ்

○

எல்லாவித

மோட்டார், லாரி, டிரக்

முதலியவைகளுக்கு மிகச் சிறந்தது

○

விபரத்துக்கு:

ஸ்ரீதர் & கோ

மவுண்ட் ரோடு :: சென்னை-2

நரசு ஸ்டுடியோஸின் ''துளி விஷம்'' படத்தில் கே. ஆர். ராமசாமி, டி. வி. நாராயணசாமி. கிருஷ்ணகுமாரி தோன்றும் காட்சி.

கலை ரஸிக்கக்கூடிய அந்த நாள் இன்னும் வந்துவிடவில்லை என்பது தான்.

என். வி. ராஜன் (பங்களூர்)

''அசோக் குமார்'' படத்தில் புத்த பிக்ஷுவாக நடித்தவர் யார்?

தற்போது தலைமறைவாக இருந்து வரும் நாகர்கோவில் மஹாதேவன் தான் அந்த பிக்ஷுவாக நடித்தவர்.

எஸ். மாசிலாமணி மேஸ்திரி
(வால்பாரை)

சிவாஜி கணேசனுக்கு விவாஹம் ஆகிவிட்டதா?

ஆகிவிட்டது; கமலா என்ற பெயருடைய பெண்மணியை அவர் மணந்து கொண்டுள்ளார்.

கு. ப. கந்தசாமி முதலியார்
(தலவாக்கொலை)

நான் சினிமாவில் சேரத் தீர்மானித்திருக்கிறேன். யாரிடம் கேட்பது? யாருக்கு எழுதுவது?

சினிமாக் கம்பெனிகளுக்கும் ஸ்டுடியோக்களுக்கும் விண்ணப்பம் அனுப்பி முயற்சி செய்யும். அதிர்ஷ்டம் உள்ளபடி ஆகட்டும்.

அ. செ. சிவசுப்ரமண்யம்
(காலி. இலங்கை)

டி. எஸ். பாலையாவின் விலாஸம் என்ன?

நெ. 1/1, அருளம்மாள் தெரு, தியாகராயநகர், சென்னை-17.

துரை. சண்முகம்
(பெரியநாயக்கன்பாளையம்)

தெருப் பாடகனுக்கும் சினிமாப்பாடகனுக்கும் என்ன வித்தியாசம்?

தெருப்பாடகனுக்கு ஒரு காலணாவை விட்டெறிந்தால் தலை வேதனை தீர்ந்துவிடும். ஆனால் சினிமாப் பாடகனின் பாட்டை நம்மால் நிறுத்த முடியாது. மூலைக்கு மூலை கிராமபோன்கள் மூலம் அலறி தலை வேதனை தரும்.

எம். சுந்தரம் (பாளையங்கோட்டை)

பிரபல நடிகர் ஸ்ரீராம் அவர்களின் விலாஸத்தைத் தெரிவிக்கவும்.

நெ. 1/6, கிருஷ்ண அய்யர் தெரு, நுங்கம்பாக்கம். சென்னை-6.

"ரத்தபாசம்"—ஒரு நல்ல படம்

அஞ்சலி, ஷண்முகம், பாலய்யா நன்கு நடித்துள்ளனர்

அவ்வை புரடக்ஷன்ஸின் "ரத்த பாசம்" பல நற்கருத்துக்கள் கொண்ட நீதிபுகட்டும் முறையில் எழுதப்பட்ட ஒரு நல்ல கதையாகும். ரகுவும் சரளாவும் அன்னியோன்னியமாக வாழ்ந்து வரும் தம்பதிகள். ரகுவின் கம்பெனி மானேஜர் மதுவும், அவன் காதலி மனோரமாவும் செய்த சூழ்ச்சியின் பலனாக அத்தம்பதிகள் பிரிக்கப்படுகின்றனர்.

சிறு வயதிலேயே வீட்டை விட்டு ஓடிய ரகுவின் தம்பி ராஜா திருட்டுத் தொழில் மூலம் வாழ்ந்து வருகிறான். அவன் தற்செயலாய் அண்ணியைச் சந்திக்கிறான். பெருமுயற்சிக்குப் பின் அண்ணியை அண்ணனிடம் சேர்க்கிறான். தான் காதலித்து வந்த ராணியை மணந்து கொள்கிறான். வஞ்சகர்கள் மடிகின்றனர். இதுவே "ரத்த பாச"த்தின் சாராம்சம்!

என்னதான் ஒரு கள்ளக் காதலி ஏற்பட்டுவிட்ட போதிலும் கணவன் திடீரென்று தன் மனைவியையும் குழந்தையையும் துறக்கும் கட்டம் நம்பக்கூடிய முறையில் அமைக்கப்படவில்லை. மேலும், முற்பகுதி படத்தில் விறுவிறுப்பே இல்லை. ஆனால் பிற்பகுதி இதற்கு முற்றும் மாறாக நன்கு அமைந்திருக்கிறது.

கதாசிரியர் ஸ்ரீதர் வசனங்களையும் பொருத்தமாய் எழுதியிருக்கிறார்.

டி. கே. ஷண்முகம் இதற்கு முன் சில படங்களில் நடித்திருக்கிறார். ஆனால் இப்படத்தில் அவரது நடிப்பு ஒரு தனி ரகமாய் உள்ளது. 'பிக்பாக்கெட்' கள்ளனின் குணங்களை அவர் நன்கு நடித்திருக்கிறார். அஞ்சலிதேவியின் நடிப்பும் அபாரமாய் இருக்கிறது. ஆனால் டி. கே. பகவதியின் நடிப்பு "மனிதன்" படத்திலுள்ள அளவிற்கு இந்தப் படத்தில் சோபிக்கவில்லை.

எம். எஸ். திரௌபதி வழக்கம் போலவே அழுது தீர்த்திருக்கிறார். அவர் தம் பாகத்தை நன்கு நடித்திருக்கிறாரென்றாலும், ஒரே மாதிரிப் பாத்திரத்தில் தோன்றி வருவது வெறுப்பையே உண்டுபண்ணுகிறது.

டி. எஸ். பாலய்யாவின் நடிப்பு நடிப்பாகவே தோன்றவில்லை; அவ்வளவு இயல்பாக இருக்கிறது. அவருடன் ஜோடியாக நடித்துள்ள வித்யாவதியும் திறம்பட நடித்திருக்கிறார். ராணியின் தகப்பனாராக நடித்திருக்கும் பி. எஸ். வேதாசலத்தின் நடிப்பும் பரவாயில்லை.

எம். எஸ். கருப்பையாவின் பேச்சும், பாட்டும் தலைவேதனையாக இருக்கிறது. வெறும் உடற்பருமனைப் பார்த்து ரஸிக்கும் காலம் மலையேறிவிட்டது. டி.எஸ். தட்சிணாமூர்த்தியின் நடிப்பு பரவாயில்லை. மற்றவர்கள் சாதாரணம்.

ஜம்பனா—நந்தியின் தயாரிப்பான "குடும்பம்" தமிழ்ப் படத்தில் நடிக்கும் சாவித்திரி

டைரெக்டர் ஆர். எஸ். மணியின் டைரெக்ஷன் பொதுவாக நன்ருயிருக்கிறது. ஆனல் முற்பகுதியில் இன்னும் அதிக கவனம் செலுத்தியிருக்கலாம்.

படத்தில் பாட்டு விசேஷ கவனத்தைக் கவரவில்லை யென்ருலும் பாடியுள்ளவை ரஸிக்கக் கூடியதாயுள்ளன. "ஜாக்கிரதை", "டல்லு டல்லு", "பணமிருக்கிற மனுஷங்கிட்ட" ஆகிய பாட்டுகள் தமாஷாகவும் கருத்து நிறைந்ததாகவும் உள்ளன.

வழிப்பறியாளர்களிடமிருந்து ராஜா சரளாவைக் காப்பாற்றும் காட்சியும், பகவதி-திரௌபதி சம்பந்தப்பட்ட காதல் காட்சியும் சப்பென்றிருக்கின்றன. ராஜாவின் "பிக்பாக்கெட்" வாழ்க்கையை இன்னும் கொஞ்சம் அபாயமும், கண்டங்களும் நிறைந்ததாகக் காட்டியிருக்க வேண்டும். ஆனல் ராணியின் வாய் மொழி மூலம் "பிக்பாக்கெட்" தொழில் கேவலமானது என்பதை வற்புறுத்திக் காட்டியுள்ளது பாராட்டத் தக்கது.

படத்தின் டெக்னிக் அம்சங்கள் திருப்திகரமாக உள்ளன. மொத்தத்தில், "ரத்தபாசம்" பார்க்கவேண்டிய ஒரு நல்ல பொழுது போக்குப் படம். வேறெதற்காக இல்லை யென்ருலும், அஞ்சலி, ஷண்முகம், பாலய்யா இவர்களின் சிறந்த நடிப்பிற்காகவேனும் பார்க்கத்தக்கது.

—"நிழல்"

உபசரிப்பு

போனிக்ஸ் விசிறிகளைத் தயாரிக்கும், இன்ஜினியரிங் ஒர்க்ஸ் இந்தியா லிட், ஸ்தாபனத்தைச் சேர்ந்த பி. பி. நிவாதியா சென்ற மாதம் சென்னை வந்திருந்தார். அவருக்கும் அவரது மனைவியாருக்கும் சென்ற மாதம் 8-ம் தேதி, சாரி அட்வர்டைஸிங் ஸ்தாபனத்தார் தேநீர் விருந்து அளித்து உபசரித்தனர்.

பி. கே. சரஸ்வதி

தற்பொழுது தமிழ் நாடெங்கும் நடைபெற்று வரும் நரசுவின், துளி விஷம் தமிழ்ப் படத்தில், நன்ருக நடனமாடி நடித்திருக்கிருர்.

ஜமுனா

"மிஸ் அம்மா", "சந்தேகி" தமிழ்ப் படங்களில் நடிக்கிறார்.



இந்த மாதிரி ஒரு நிலைமையில் . . .

சதுரங்கத்தில் மிக்க சுவாரஸ்யமான கட்டம் ராஜா மடக்கப்படுவதுதான் ; ஏனெனில். இச்சமயத்தில், ஒன்று, ராஜாவை அப்புறப்படுத்தவேண்டும், அல்லது காலாட்களைக்கொண்டு பாதுகாக்கவேண்டும்.

ஆட்ட நிபுணர் இப்போது தன் முழு சாமர்த்தியம், தீர்க்கதிருஷ்டி முதலியவற்றை உபயோகிக்கவேண்டும். இம் மாதிரி சந்தர்ப்பத்திற்கு ஒரு கோப்பை தேநீருக்குச் சமமானது எதுவும் இல்லை.

தேநீர்

புத்தி விறுவிறுப்புக்கு மிக்க சாதகமானது.

தேயிலை போர்டு வெளியிட்டது

PSTB 123

துணிப்புல்

வெட்டுக்கிளி

"பழையன கழிதலும் புதியன புகுதலும் வழு அல; கால வகையினனே" என்பது திருவள்ளுவரின் வாக்கு. அதை ஓரளவுக்குப் பின்பற்றி வந்த நம் படத் தயாரிப்பாளர்களில் சிலர், தற்போது ஏட்டைத் திருப்பி பழமை மோகம் கொண்டு அதை நாடி வேகமாக முன்னேறி வருகின்றனர். விஷயம் புரியவில்லையா? பேசும் பட ஆரம்ப காலத்தில் இருந்து புராணக் கதைகள், கிராமியக் கதைகள் இவைகளையே படமாகத் தயாரித்து வந்த நம் படத் தயாரிப்பாளர்கள், வள்ளுவரின் மேற்கண்ட வாக்குக்கு மதிப்புக் கொடுப்பதே போல் புதுப் பாதையில் புகுந்து சமூகப் படங்களைத் தயாரிப்பதில் முனைந்து வந்தனர். கடந்த நான்கைந்து ஆண்டுகளாகத் தயாராகி வெளி வந்துள்ள படங்களின் ஜாப்தாவைப் புரட்டிப் பார்த்தால் இந்த உண்மை தெரிய வரும். புராணப் படம் மருந்துபோல அரிதாயிருந்திருப்பதைக் காணலாம். இன்னும் சொல்லப் போனால், "இடை இடையே ஒரு மாறுதலுக்காகவாவது ஒன்றிரண்டு புராணப் படங்களும் தயாரித்து வெளியிடக் கூடாதா?" என்று சினிமா ரஸிகர்கள் ஏங்கும்படி கூடச் செய்துவிட்டனர் நம்முடைய பட முதலாளிகள்.

* * *

ஆனால், இப்பொழுது சில காலமாக நிலைமை முற்றிலும் மாறுபட்டு விட்டது. ஜெமினி, எந்த வேளையில் "ஔவையார்" படத்தை வெளியிட்டதோ தெரியவில்லை! அது முதல் நம் படத் தயாரிப்பாளர்களின் கிருபை புராணக் கதை, ராஜாராணிக் கதை, கிராமியக் கதை, இவைகள் மீது திரும்பி விட்டது. அதுவும் "ஔவையார்" ஒரு வெற்றிப் படமாக அமையவே தான் இந்த மாற்றம். அது மட்டும் ஒரு படு தோல்வியாக முடிந்திருந்தால் நமது பட முதலாளிகள் அனைவருமே பழைய ரோதையிலேயே தான்—சமூகக் கதைகளைத் தேடியே தான்—போய்க் கொண்டிருந்திருப்பார்கள். "ஔவையாரி"ன் வெற்றி, "புராணக் கதைகளைத் தான் மக்கள் விரும்புகின்றனர்" என்ற ஒரு அபிப்பிராயத்தை அவர்கள் மனதில் ஏற்படுத்தி விட்டது. இந்த அபிப்பிராயம் சரியானதா, தவறானதா என்பது ஒரு பக்கம் இருக்கட்டும். அதன் விளைவாக புராண, கிராமியக் கதைகளுக்கு மீண்டும் யோகம் அடிக்க ஆரம்பித்திருப்பது என்னவோ கண்கூடான விஷயம்.

* * *

இன்று தயாரிப்பில் இருக்கும் படங்கள், தயாரிக்கப் போவ

எப். நாகூர் தயாரித்து வரும் "சந்தேகி" படத்தில் எம். வி. ராஜம்மா.

"வெண்மையான, சுத்தமான

லக்ஸ் டாய்லட் சோப்பின்

நுரை மிகவும் மிருதுவானது, நறுமணம் கமழ்வது."

என்கிறார் எம்.வி.ராஜம்மா

இந்தியாவில் தயாரித்தது.

இந்த வெண்மையான, சுத்தமான சோப்பின் பாதுகாப்பை உங்கள் சருமத்திற்கு அளித்து யௌவன காந்தியைப் பெறுங்கள். எம். வி. ராஜம்மா கூறுவதாவது: "சருமத்தை பட்டுப்போல் மிருதுவாகவும், அழகாகவும் வைத்துக்கொள்ள லக்ஸ் டாய்லட் சோப்பின் மிக மிருதுவான, நறுமணம் கமழும் நுரையைப் போல் வேறெதுவுமில்லை. அது உங்கள் இயற்கை எழிலை மலரச் செய்கிறது. அன்றியும் அதன் நீடித்திருக்கும் நறுமணத்தையும் நீங்கள் மிகவும் விரும்புவீர்கள்."

"... அதனால்தான் என் வதனத்தை அழகாக வைத்துக்கொள்ள லக்ஸ் டாய்லட் சோப்பையே நம்பியிருக்கிறேன்."

முக்கிய செய்தி!

தலைமுதல் கால்வரை கவர்ச்சி அளிக்க

புதிய பெரிய சைஸிலும்

இப்பொழுது கிடைக்கிறது. இன்றே வாங்குங்கள்!

சினிமா நட்சத்திரங்களின் அழகுதரும் சோப் ★

LTS. 420-50 TM



வைத்யா பில்ம்ஸார் தயாரித்து வரும் ''வைரமாலை'' என்ற தமிழ்ப் படத்தில் இந்தக் காட்சி சேர்க்கப்பட்டிருக்கிறது.

தாக அறிவிக்கப்பட்டுள்ள படங்கள்—ஆகியவைகளின் மொத்த எண்ணிக்கை சமார் தொண்ணூறு ஆகும். இதில் ஆறில் ஒரு பாகம்-புராண, கிராமிய, ராஜா ராணிக் கதைகளைக் கொண்டவை. கடந்த நான்கைந்து ஆண்டுகளில் வெளிவந்துள்ள பட ஜாப்தாவை கண்ணோட்டம் விட்டால், நூற்றுக்கு ஒன்றிரண்டு கூட அம்மாதிரிக் கதைகளைக் கொண்டது இல்லை. அநேகமாக எல்லாமே சமூகக் கதைகள் தாம். இப்பொழுதெல்லாம் புதிதாக ஒரு படத் தயாரிப்பின் அறிவிப்பு வெளிவருகிறது என்றால் அது இம்மாதிரிக் கதைகளாகவே இருப்பதையும் பார்க்கிறோம்.

* * *

இந்த திடீர் மாற்றத்திற்குக் காரணமாக ஒவ்வொரு சாராரும் ஒவ்வொரு காரணம் காட்டுகின்றனர். "பொது மக்களுக்கு இப்பொழுது அம்மாதிரிக் கதைகள் தான் பிடிக்கின்றன'' என்று ரஸிகர்களைப் பொறுப்பாளியாக்கப் பார்க்கிறவர்கள் ஒரு சிலர். எதற்கு எடுத்தாலும் தணிக்கை போர்டுதான் காரணம் என்று அதன் மீது சீற்றமாக இருக்கும் ஒரு கோஷ்டியினர், "அதன் கடுமையான சட்ட திட்டங்கள் தான் பட முதலாளிகளை மீண்டும் புராணக் கதைகளை நாடிப் போகும்படி செய்து விட்டன'' என்று தணிக்கை போர்டை ஒழித்துக் கட்டும் முறையில் பிரசங்கம் செய்கிறார்கள். ஆனால், படங்கள் யாருக்காகத் தயாரிக்கப்படுகின்றனவோ அந்த ஸ்ரீமான் ரஸிகன் என்ன சொல்கிறான் தெரியுமா? "சமூகப் படங்கள் என்ற பெயரில் ஒரே மாதிரிக் கதைகளைப் பார்த்துப் பார்த்து அலுத்து விட்டோம்'' என்று. இது சம்பந்தப் பட்டவர்கள் காதில் எங்கே விழப்போகிறது. ஒன்று மட்டும் நிச்சயம். இந்த மாற்றத்திற்குக் காரணம் ராஜாஜி இல்லை. அதாவது, கடந்த வருஷம் வாஹினி ஸ்டுடியோவில் நடைபெற்ற பில்ம் பெடரேஷன் தின விழாவில் கலந்து கொண்டு ஒரு பரபரப்பை உண்டுபண்ணிய அவர், அது சமயம், "புராணப் படங்களைப் பிடியுங்கள்'' என்று புத்திமதி சொன்னாரே, அதன்

விளைவு இல்லை இந்த மாற்றம். நிற்க, சமீப காலமாக ஏற்பட்டுள்ள மாற்றத்தின் போக்கைக் கொஞ்சம் ஆராய்ந்து பார்ப்போம்.

* * *

ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரம்-"பூம்புகார்" என்ற நாமகரணத்துடன் படமாக வரப் போகிறது. பெயர் தான் புதிது. ஏற்கெனவே இருமுறை இக்கதை படமாக வெளி வந்திருக்கிறது. "கோவலன்" என்ற பெயரில் பேசும்பட ஆரம்ப காலத்தில், முதல் தடவையாக வெளி வந்தது. பிறகு "கண்ணகி" என்ற பெயரில் ஜூபிடரின் முத்திரையுடன் வெளி வந்து பிரமாதமான வெற்றியை அளித்தது. இப்படத்தை ரஸிகர்கள் பெரிதும் ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர். படம் வெளி வந்தால் முக்கியமாக ஒரு விஷயத்தை அம்பலப்படுத்தும். "இளங்கோவன்", மு. கருணாநிதி இவ்விருவரில் சிறந்த வசனகர்த்தா யார் என்ற அவர்களிடை உள்ள சர்ச்சை, தீர்ந்து விடக் கூடுமல்லவா? "அம்பிகாபதி"யையும் மீண்டும் படமாக்கப் போவதாக அறிவித்திருக்கின்றனர். இதுவும் மேல் கண்ட பிரச்னையைத் தீர்க்க உதவப் போகிறது என்பதில் ஐயமில்லை.

* * *

"பட்டினத்தார்" ஏற்கெனவே இருமுறை படமாக வெளிவந்து விட்டது. ஒரே சமயத்தில் இரு கம்பெனிகள் (லோடஸ்—வேல்) இக்கதையைப் போட்டி போட்டுக் கொண்டு வெளியிட்டன. மீண்டும் ஒரு பட்டினத்தார் வெளிவரப் போவதாக இப்பொழுது ஒரு செய்தி அடிபடுகிறது. அதுவும் பட்டினத்தடிகளாக நடிக்கப் போவது யார் தெரியுமா? பக்திமான்களின் பாத்திரங்கள் அனைத்தையும் அநேகமாக நடித்து விட்ட சாக்ஷாத் வி. நாகய்யா தான். போகிறது, சிவாஜி கணேசனை அந்தப் பாத்திரத்திற்கு ஏற்பாடு செய்யாமல் விட்டார்களே, அந்த மட்டில் ரஸிகர்கள் பிழைத்தார்கள்.

* * *

"பால நாகம்மா" தமிழில் படமாக வெளிவரப்போகிறதாம். ஏற்கெனவே, ஜெமினியால் தெலுங்கில் தயாரித்து

வெளியிடப்பட்டுள்ள இந்த "அம்மா", அவர்களாலேயே இப்பொழுது "பஹூத் தின் ஹூவே" என்ற பெயரில் ஹிந்திப் படமாகவும் உரு மாறி வருகிறாள். ஏற்கெனவே இரண்டு தடவைகள் தமிழில் படமாக வெளிவந்து ரஸிகர்களை கண்ணீர் விட வைத்த "நல்லதங்கா"ளைக் கூட ஒரு படக் கம்பெனியார், ரேவதி ஸ்டுடியோவில் படமாக்கப் போகிறார்களாம்.

* * *

பல வருஷங்களுக்கு முன் நம் பட முதலாளிகளிடை ஒரு போட்டி மனப்பான்மை இருந்து வந்தது. அதாவது, ஒரு பட முதலாளி தயாரிக்கும் அதே கதையை மற்றொரு பட முதலாளியும் போட்டி போட்டுக் கொண்டு தயாரிக்க முற்படுவார். இப்படி இரட்டை இரட்டையாக எவ்வளவோ படங்கள் வெளி வந்திருக்கின்றன. தென்னிந்திய பிலிம் சேம்பா முன் வந்து இந்த வழக்கத்தை நிறுத்தியது. ஆனால் மீண்டும் இப்பொழுது அப்பழக்கம் தலைதூக்கி யிருப்பது நல்லதற்கோ கெட்டதற்கோ தெரியவில்லை. ஏற்கெனவே ஒரு முறை டி. பி. ராஜலக்ஷ்மி, வி. ஏ. செல்லப்பா ஜோடி நடித்து படமாக வெளி வந்துள்ள "மதுரை வீரனை"ப் படமாக்க இப்பொழுது இருவருக்குள் போட்டி ஏற்பட்டிருக்கிறது. நடிகர் டி. ஆர். மஹாலிங்கம், சங்கீத டைரெக்டர் ஜி. ராமநாதன் இவ்விருவரும் "மதுரை வீரனை"த் தயாரிக்கப் போவதாக அறிவித்திருக்கிறார்கள். இப்படி 'அண்டை வீட்டுக்காரர்கள்' (கம்பெனி) சண்டை போட்டுக் கொள்வது நன்றாகவா இருக்கிறது?

* * *

தென்னிந்தியாவில்தான் இந்த நிலை என்று இல்லை. வடநாட்டிலும் இப்பொழுது பலர் இதிகாச, கிராமியக் கதைகளையே தேடிப் போகின்றனர். அவர்கள் தயாரித்து வரும் படங்களில் கூட அநேகம் இம்மாதிரிக் கதைகளைக் கொண்டிருக்கின்றன. பம்பாயிலுள்ள ஒரு பிரபல படத் தயாரிப்பாளரான கர்தார் "இந்திர சபா"வை ஹிந்தியில் மட்டுமின்றித் தமிழிலும் தயாரிப்பதில் முனைந்திருக்கிறார்.

* * *

இவர்கள் போகிற போக்கைப் பார்த்தால் இன்னும் கொஞ்ச காலத்திற்குள் சமூகப் படங்களே மறைந்து மீண்டும் புராணப் படங்கள் படையெடுத்து நம்மைத் திக்குமுக்காட வைக்குமோ என்ற ஐயம் யாருக்குமே ஏற்படக் கூடும். மூர்மார்க்கெட் பழைய புஸ்தக வியாபாரிகளே! எச்சரிக்கையாக இருங்கள்! உங்களிடமுள்ள "பெரிய எழுத்து விக்ரமாதித்தன் கதை", போன்ற கிராமியக் கதைப் புத்தகங்களையும், "திருவிளையாடற் புராணம்" போன்ற புராணப் புத்தகங்களையும் பத்திரப்படுத்தி வையுங்கள். தமிழ்ப் பட கதாசிரியர்கள் சீக்கிரமே அவைகளை நாடி வருவார்கள். தேடி வரும்போது ஒன்றுக்கு மூன்றாக நல்ல விலைக்கு அவர்களுக்கு அவைகளை விற்கலாம்.

பார்வேர்டு ஆர்ட் பிலிம்ஸார் தயாரித்து வரும் "நல்ல தங்கை" படத்தில் சுலோசனா, எஸ். ஏ. நடராஜன், ஏ. கருணாநிதி.

வசனமும், நடிப்பும்

மு. புரட்சிப்பித்தன்

நம் தமிழ்ப் படங்கள் நடிப்புத் துறையில் முன்னேற்ற மடைந்திருக்கின்றனவா? நமது நடிக நட்சத்திரங்கள் நடிப்புக் கலையில் தேர்ச்சி பெற்றிருக்கின்றனரா—என்பதைப்பற்றி சற்று சிந்திக்கத் தொடங்கினல் கலைப் பற்றுள்ள எந்தத் தமிழ் மகனும் வெட்கித் தலை குனிய வேண்டியதுதான்! ஆம்; இன்றைய தமிழ்ப் படங்கள் நடிப்புத் துறையில் வளர்ச்சியடைவதற்குப் பதிலாக நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகத் தேய்ந்து வருகின்றன. சமீப காலமாக திரையிடப் பட்ட தமிழ்ப் படங்கள் அனைத்துமே பெரும் "பிரசங்கங்களின் தொகுப்பாக"வே காட்சி யளிக்கின்றன! அவசியமிருக்கிறதோ, இல்லையோ, தற்போதைய தமிழ்ப் படக் கதாநாயகர்கள் அனைவருமே படங்களில் நீண்ட பிரசங்கங்கள் நிகழ்த்தி வருகின்றனர். உணர்ச்சி பாவமான நடிப்பை வெளியிடுவதற்குப் பதிலாக வார்த்தைகளை — வசனங்களை 'வாந்தி' எடுக்கிருர்கள் இன்றைய நடிகர்கள்.

இக் குற்றம் நடிகர்களுடையதல்ல; வசன கர்த்தாதான் இதற்குப் பொறுப்பாளியாவார். வசனங்கள் சிறப்பாக அமைந்துவிட்ட காரணத்தால், ஒரு சில படங்கள் அமோக வெற்றி யடைந்ததைக் கண்டு விட்டு, நீண்ட நேர வசனங்களை எழுதிக் கொடுத்து நடிகர்களை மணிக் கணக்கில் பேச வைத்தால் தனக்குப் புகழும், தயாரிப்பாளருக்குப் பொருளும் கிடைக்கும் எனக் கருதுகிருர்கள் சில வசனகர்த்தாக்கள். ஆனல், இது உண்மையல்ல. கருத்தற்ற வெறும் வார்த்தை அலங்காரத்தை — சொல்லடுக்கைக் கண்டு ரஸிகர்கள் மயங்கி நின்ற காலம் மலையேறி விட்டது. வசன அமைப்பில்—தமிழ் நடையில் எளிமையும், புதுமையும் தவழ வேண்டும் என்பதையே நாம் எதிர்பார்க்கிருேம். எழுத்தாளன் தன் மனதில் தோன்றும் எண்ணங்களை சுருங்கச் சொல்லி விளங்க வைக்க வேண்டும்; கதா பாத்திரங்களை நீண்ட நேரம் பேச வைத்து அவர்களை 'மேடைப் பிரசங்கி'களாக மாற்ருமல், முக பாவ உணர்ச்சி மூலம் தன் நடிப்புத் திறமையை வெளிப்படுத்த வாய்ப்பளிக்க வேண்டும் வசன கர்த்தாக்கள். வசனம் ஒரு படத்தின் வெற்றிக்கு வழி வகுத்துத் தரும் முக்கியமான அம்சம் தான்; ஆனல் அது ஒரு அளவைக் கடந்து விட்டால் அதனல் ஒரு படமே படுதோல்வியடையக் கூடும். உணவுப் பதார்த்தத்திற்கு சுவை சேர்க்க உப்பு அவசியம்தான். ஆனல், அது சற்று அதிகமாகி விட்டால் உணவுப் பண்டம் உதவாக்கரையாகி விடும்; உட்கொள்ளத் தகுதியற்றதாகிவிடும்.

அண்மையில் வெளி வந்த இரு படங்களில் இவ்விதக் குறைபாடுகள் இருந்ததால் அவை படுதோல்வி யடைந்தன. ஒரு படத்தில் நாடகக் காட்சி ("அனர்க்கலி") ஒன்று வருகிறது; கதாநாயகி உயிர் துறந்து விடுகிருள்; சோகம் சூழ்ந்த இந்தக் காட்சியில்—கதாநாயகிக்கு நேர்ந்த முடிவைக் கண்டு படம் பார்ப்போரின் மனங்கலங்கும்அளவுக்கு சோக ரசம் ததும்பும் இந்தக் கட்டத்தில் கதாநாயகன் ஓடிவந்து கால் மணி நேரம் கதறுகிருன்; அவளைப் பற்றி வர்ணித்து மிகப் பெரிய பிரசங்கம் செய்கிருன்! இது முற்றிலும் அந்த நாடகத்திற்கே இழுக்கு ஏற்படுத்துகிறது. இத்தகைய காட்சிகளில் வார்த்தைகளைக் குறைத்து கதாநாயகனின் பேச்சைச் சுருக்கி, நடிகன் உணர்ச்சி பாவங்களினல் நடிப்புத் திறனைக் காட்ட அனுமதிக்க வேண்டும் வசனகர்த்தாக்கள். சிவாஜி கணேசன், எம். ஜி. ராமச்சந்திரன், கே. ஆர். ராமசாமி, ராஜேந்திரன் போன்ற நடிகர்கள் இதுவரை எத்தனையோ படங்களில் மிகவும் அழகாக அருமையாக வசனம் பேசியிருக்கிருர்கள். ஆயினும், அவர்கள் நடித்த படங்கள் பெரும்பாலும் நம் நினைவில் நிற்பதேயில்லை. காரணம், அப்படங்களில் **பேச்சு** அதிகம்; பிரசங்கம் இருக்கும். ஆனல், ஜீவன் ததும்பும் **நடிப்பு இருக்காது.** ஆனல், அதே சமயத்தில் இத்தகைய நீண்ட உரையாடல்கள் இல்லாத—உயர்தர வசன அமைப்பு இல்லாத—தெலுங்கு வாடை வீசும் தமிழில் தயாரிக்கப்பட்டுள்ள "தேவதாஸ்" நம் நெஞ்சில் நீங்கா இடம் பெற்று நிலைத்து நிற்பதேன்? நாகேஸ்

வரராவ் மற்ற நம் தமிழ நடிகர்களைப் போல வார்த்தைகளைக் கொட்டவில்லை அருவிபோல! ''தேவதாஸி''ல் பேச்சு குறைந்து, **நடிப்பு நிறைந்து** நிற்கிறது. இப்படத்தில் கலைஞர் நாகேஸ்வரராவ் பேசுவது நறுக்குத் தெறித்தாற்போல சில வார்த்தைகளே. இறுதிக் கட்டங்களை கவனியுங்கள்: "சீக்கிரமாப் போப்பா!........எம்பா, வண்டி நின்னுட்டுது?....துர்க்காபுரம் இன்னும் எவ்வளவு தூரமப்பா இருக்கும்?" இந்தக் காட்சியில் கலைஞர் நாகேஸ்வரராவ் நடித்திருப்பதை நாம் மறக்க முடியுமா? பாத்திரத்தின் தன்மையை நன்கு உணர்ந்து, தன் முகத்தில் உணர்ச்சித் தேக்கத்தை உருவகப்படுத்தி, உலக மகா கவிகள் அனைவரும் ஒன்று கூடினால் கூட வர்ணிக்க முடியாதபடி சோகத்தின் சிகரத்தைத் தொட்டு நிற்கிறார். இது அல்லவா நடிப்பு? நடிப்புக் கலை நாகேஸ்வரராவிடம் இருக்கிறது. ஆனால் நம் நடிகர்களோ நீதி மன்றக் காட்சியோ, மன்னனின் அவையோ இருந்தால் மணிக்கணக்காகப் பேசித் தீர்ப்பார்கள்! இதை உயர்ந்த நடிப்பு என்று கூட நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்; இது நம் பொறுமையைத் தான் சோதிக்கும்.

ரஸிகர்களால் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட—பிரபல எழுத்தாளர் ஒருவர் எழுதிய கதை, வசனங்களைக் கொண்ட ஒரு படம் அண்மையில் திரையிடப்பட்டது. இதில் கதாநாயகன் ஒரு கட்டத்தில் மன்னனிடம் வாதிக்கிறான். இதை விட மிகப் பெரியதொரு பிரசங்

[தொடர்ச்சி 82-ம் பக்கத்தில்]

முன் கதைச் சுருக்கம்

நம் கதாநாயகி நர்மதாவே தன் சோகக் கதையைக் கூறுகிறாள். கொங்கணத்துக் கடற்கரை கிராமம் ஒன்றில், மீன் வியாபாரம் செய்து வந்த ஒருவரின் மகள் அவள். அவளுக்குப் பதினறு வயது பெரியவனான தமையன் காசிநாத்தும், அத்தை மகன் ரங்காராமும், தாயாரும் ஒன்றாகவே வசித்து வருகின்றனர்.

சிறு பெண்ணாக இருந்தபோது ஒரு நாள் நர்மதா மின்னல் தாக்குதலால் இரு கண்களையும் இழக்கிறாள், இதைத் தொடர்ந்து அவள் தகப்பனார் படகு மூழ்கி சமுத்திரத்திற்கு இரையாகிறார். அப்பா இறந்ததும், காசிநாத், தாம்லே என்ற பணக்காரரின் புத்திரி சரயூவை மணந்துகொண்டு வேட்டகத்தோடு ரத்னகிரியில் தங்கிவிடுகிறான். நாளாவட்டத்தில் அவனுக்கும், தாயார், தங்கை, அத்தான் இவர்களுக்கும் உறவு அறவே ஒழிந்துவிடுகிறது. தாயார் கங்காமாயி குடும்பத்தை மிக கஷ்டத்தோடு நிர்வகிக்கிறாள். வளர்ப்புப் பிள்ளையான ரங்காராம் நன்றியறிதலுடன் நடந்து கொள்ளுகிறான். அவன் சம்பாத்தியத்திலேயே குடும்பம் நடக்கிறது. நர்மதா கல்யாண வயதை அடைகிறாள். அந்தக் குருடியை ரங்காராமே மனமுவந்து மணந்து கொள்ளுகிறான். கல்யாணத்தைத் தொடர்ந்து நர்மதா கர்ப்பிணியாகிறாள். பிறகு ஒரு ஆண் குழந்தைக்குத் தாயாகிறாள். ரங்காராமின் உள்ளூர் வியாபார வருமானம் குடும்பச் செலவுக்குப் போதவில்லை. ஆதலால், அவன் பம்பாய்க்குச் சென்று ஒரு வேலையில் அமருகிறான். அவன் பம்பாய் சென்றதும் கங்காமாயிக்கு கடும் ஜுரம் ஏற்படுகிறது. அக்கம் பக்கத்தினரின் உதவியுடன் நர்மதா அம்மாவுக்கு சிசுருஷை செய்து வருகிறாள். சில தினங்களில் ரங்காராம் பம்பாயிலிருந்து வந்து சேருகிறான். ஆனால், அவன் உள் நுழைந்ததும் நுழையாததுமாய் கங்காமாயி உயிர் துறக்கிறாள்.

அண்ணன் காசிநாத் ஈமக்கிரியைகளுக்குக்கூட வரவில்லை. ரங்காராமே கிரியைகளைச் செய்துவிட்டு, நர்மதா, குழந்தை திவாகரன் இவர்களுடன் கப்பலில் பம்பாய்க்குப் புறப்படுகிறான்.

பம்பாயில் ரங்காராம் தங்கி யிருந்த வீட்டுக்காரக் கிழவி ஹரிமாயி அவன்மீது பிள்ளைப் பாசம் கொள்ளுகிறாள். அவள் நர்மதாவின் வரவை ஆவலோடு எதிர்பார்த்திருக்கிறாள். புதுத் தம்பதி உல்லாஸமாக கப்பல் பிரயாணம் செய்து கொண்டிருக்கையில், திடீரெனப் புயல் அடிக்கிறது. நர்மதா, திவாகரன், ரங்காராம், எல்லோரும் நீரில் மூழ்குகின்றனர். கடலில் மூழ்கியவர்களை சில செம்படவர்கள் காப்பாற்றுகின்றனர். நர்மதா ஒரு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்படுகிறாள். அவளுக்குக் கண் ஆபரேஷன் செய்யப்பட்டு, பார்வையைப் பெறுகிறாள். ஆனால் கணவனும் குழந்தையும் என்ன ஆனார்களோ தெரியவில்லை. நர்மதா வாழ்க்கையில் வெறுப்புற்று கடலுக்கு இரையாகத் தீர்மானிக்கிறாள் இடையில் தெய்வாதீனமாய் ஹரிமாயி எதிர்ப்படுகிறாள். தான் எதிர்

பார்த்திருந்த நர்மதா அவளே என்பதை அறிந்த ஹரிமாயி அவளைத் தன் வீட்டிற்கு அழைத்துச் செல்லுகிருள். அவளை வீட்டில் இருக்கச் செய்து, தானே உழைத்து அவளைக் காப்பாற்றி வருகிருள்.

நர்மதா குழந்தை ஏக்கம் மிகக் கொண்டிருக்கிருள் என்பதை ஹரிமாயி உணர்ந்து அவளுக்கு பிரபாகர கோட்ஸே என்ற தனவந்தரின் வீட்டில், அவரது ஸ்வீகாரப் புத்திரனை வளர்க்கும் வேலையைத் தேடித் தருகிருள். அந்தக் குழந்தையின் பெயரும் திவாகரன்தான்! இனி, மேலே படியுங்கள்.

அத்தியாயம் 4

நான் சிறு குழந்தையாக இருந்தபோது, இரவில் என்னைத் தூங்கப் பண்ணுவதற்காக அம்மா கதைகள் சொல்லுவது வழக்கம். ராமாயணம், பாரதம், பாகவதம போன்ற புராணங்களின் பகுதிகளை அவள் பக்தி சிரத்தையோடு சொல்லும்போது கேட்க இன்பமாக இருக்கும். அப்பொழுது அவள் சொன்ன ராமாயணத்திலுள்ள கதை ஒன்று இப்பொழுது என் ஞாபகத்துக்கு வருகிறது!

ராமன் அப்பொழுது மூன்று வயதுக் குழந்தை. ஒரு நாள இரவு பௌர்ணமிச் சந்திரன் பால் நிலவு பொழிந்து கொண்டிருந்தான். ராணி கோசலை, அரண்மனையின் நிலா முற்றத்தில் குழந்தை ராமனை மடியில் வைத்துக் கொண்டு அவனோடு கொஞ்சிக் கொண்டிருந்தாள். "நிலா, நிலா வா! வா! நில்லா மலே ஓடி வா!" என்ற குழந்தைப் பாட்டைப் பாடி, குழந்தையின் பார்வையைச் சந்திரனிடம் இழுத்தாள். அவனுடைய பிஞ்சுக் கைகளை உயர்த்தி வானத்துச் சந்திரனை "வா! வா!" என்று அழைக்கச் செய்தாள். இந்த விளையாட்டு இறுதியில் வினையாக முடிந்தது. சந்திரனைப் பார்த்த ராமன, "அதைப் பிடித்துத் தா" என்று அழ ஆரம்பித்தான.

குழந்தையின இந்த விநோத

மான கோரிக்கையை மறக்கடிக்க வே லை அவனுக்கு வேறு எது, ஏதோ விளையாட்டுப் பொருள்களைக் கொடுத்துக் கவனத்தைத் திருப்ப முயன்றாள். ஆனால், ராமன் அந்த விளையாட்டுப் பொருள்களை வீசி எறிந்துவிட்டு, சந்திரன்தான் வேண்டுமென்று வீரிட்டான்.

குழந்தையின் அழுகுரல் அரண்மனையையே அதிர வைத்தது. தசரதர் வந்தார்; மற்ற ராணிமார்கள் வந்தனர்; மந்திரி, பிரதானிகள் எல்லோரும் வந்தனர். ஆனால், எவராலும் ராமனின் அழுகையை நிறுத்த முடியவில்லை.

கடைசியில், பிரதம மந்திரி சுமந்திரர் ஒரு யுக்தி செய்தார். அந்த மதியூக மந்திரி ஒரு நிலைக் கண்ணாடியைக் கொண்டுவரச் சொன்னார். அதில் சந்திரனின் பிரதிபிம்பம் விழுமாறு சாய்த்துப் பிடித்து ராமனின் கைகளில் கொடுத்தார்; யுக்தி பலித்தது. குழந்தையின் அழுகை பறந்தது; அவன் முகத்தில் சிரிப்புத் தவழ்ந்தது.

கடவுள் என்னை ராமனைப் போன்ற ஒரு குழந்தையாக எண்ணி ஏமாற்றப் பார்த்தாரே, அதை நினைத்தபோதுதான் இந்தக் கதை என் ஞாபகத்துக்கு வந்தது.

ஆமாம்; பத்து மாதம் சுமந்து பெற்ற பாலகனைப் பறிகொடுத்துப் பரிதவித்து நின்ற என்னை ஏமாற்ற, அவன் பிரதிபிம்பத்தை அவர் கொடுத்தார். ஆனால் நான் ராமனைப் போல் பச்சைக் குழந்தையா என்ன, உண்மை வஸ்துவுக்கும் பிரதிபிம்பத்துக்கும் வித்தியாசம் தெரியாமல் இருப்பதற்கு? அகவே, எவ்வளவுதான், இந்த திவாகரனை, என் திவாகரனாக நினைத்து வளர்த்து, ஆறுதல் அடைய முயன்றபோதிலும், மனசு விழித்துக்கொண்டு, "நான் ஏமாறமாட்டேன்; நீ உரிமை கொண்டாடக் கூடிய திவாகரனல்ல, இவன்" என்று அலறிற்று.

இந்த தெய்வங்களே இப்படித்தான் போலும்! நாம் ஏங்குவது ஒன்றிருக்க, அது வேறொன்றைக் கொடுத்து, நம்மை ஏமாற்றப் பார்க்கிறது. அன்று சத்தியவானின் உயிருக்காக மன்றாடிய சாவித்திரிக்கு யமன் அதைத் தவிர பாக்கி எல்லாவற்றையும் கொடுக்கச் சித்தமானானே, அதுபோல, கடலோடு கலந்துவிட்ட என் கண்மணிக்காக நான் கதறிக் கொண்டிருக்கையில், கட

வுள் என்னிடம் இந்த திவாகரனை ஒப்படைத்தது போதாதென்று, இன்னொரு பெண் சிசுவையும் ஒப்படைத்து, "இதுதான் இச் சமயம் நான் செய்யக் கூடிய உதவி" என்று காட்டி விட்டார். ஆனால், அதையாவது அவர் நேரும் கூறுமாகச் செய்திருக்கக் கூடாதா ?

நான் திவாகரனை வளர்க்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டு ஏறக்குறைய இரண்டு ஆண்டுகள் சென்ற பின்பு, ஒரு நாள் மாலையில் கோட்ஸே மாமா வெளியே போய்விட்டுத் திரும்பிய போது தம்முடன் நடுத்தர வயதுடைய ஒரு மனிதரை அழைத்து வந்தார். அவருடைய தோளில் ஆறு-ஏழு மாத வளர்ச்சியுடைய ஒரு பெண் குழந்தை தூங்கிக் கொண்டிருந்தது. வீட்டுக்குள் நுழைந்ததும் கோட்ஸே மாமா என்னை விளித்து, "இந்தக் குழந்தையை வாங்கிக் கொள், நர்மதா; இனி இவளுக்கும் நீதான் தாய். ஆம், நர்மதா, இந்த யமுனை இனி நம்முடையவள். இவளை நான் ஏற்றுக்கொள்ளத் தீர்மானித்து விட்டேன்" என்றார்.

"அப்படியா ? ரொம்ப சந்தோஷம்" என்று கூறிவிட்டுத் குழந்தையை வாங்கிக் கொண்டு நான் உள்ளே சென்று விட்டேன். 'வந்திருப்பவர் யார் ? எதற்காக, எப்படித் தம் பச்சைக் குழந்தையை இவருக்குக் கொடுக்க உடன்பட்டார் ? குழந்தைக்குத் தாய்-தந்தை இல்லையா ?' என்பன போன்ற சாதாரணக் கேள்விகளைக் கேட்கக்கூட எனக்குத் தோன்றவில்லை.

ஆனால், வந்திருந்தவர் என்னையே வெகு நேரம் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார் ; சரிதான் ; 'இவள் குழந்தையைச் சரியாக வளர்ப்பாளா ?' என்று எடைபோடுகிறார் போலிருக்கிறது' என்று அவர் பார்வையை நான் மதிப்பிட்டது போலவே, கோட்ஸே மாமாவும் மதிப்பிட்டிருக்க வேண்டும். "என்ன அப்படிப் பார்க்கிறீர்கள்? இவளைக் குழந்தைகள் வளர்க்கும் தாதியோ என்று எண்ணிவிடாதீர்கள் ; நர்மதா என் மகள் ஸ்தானத்தில் இருப்பவள்" என்று அவர் வந்திருந்தவரிடம் சொல்லிக் கொண்டிருந்தது, திரும்பிச் உள்ளே சென்று கொண்டிருந்த என்னுடைய செவிகளில் நன்றாக விழுந்தது.

ஆனால் அந்த மனிதர் அப்படிச் சந்தேகித்தா என்னை அவ்வாறு பார்த்தார்? அவர் மனதில் எழுந்த சந்தேகம் முற்றிலும் மாறுபட்டதல்லவா ? ஐயோ நான் ஏன் அவரைப் பற்றி அல்லது அக் குழந்தையைப்பற்றி உடனே விசாரியாது இருந்தேன் ? கோட்ஸே மாமாவாவது, 'அவர் யார் ? என்ன ?' என்பது பற்றி ஏதேனும் சொன்னாரா ?

குழந்தையுடன் வந்த மனிதர் மறு நாளே கிளம்பிப் போய்விட்டார். அதன் பிறகுதான் நான் சாவகாசமாக மாமாவிடம் அவரைப் பற்றி விசாரிக்கப் புகுந்தேன். ஆனால், அவர் சொன்ன செய்தி :—

"உலகம்தான் எத்தனை விசித்திரமானது நர்மதா ; ஒரு பொருளுக்காக சிலர் படாதபாடு படுகின்றனர். ஆனால் சிலருக்கோ அதே பொருள் வேண்டாப் பண்டமாகி விடுகிறது. அவர்களுக்கு வேண்டாத பண்டம் வேண்டியவர்கள் கையில் கிடைக்கிறதா ? அதுதான் இல்லை. நேற்று, தெய்வச் செயலாக இந்த மனிதரைச் சந்தித்தேனே, இந்தக் குழந்தை பிழைத்ததோ ! இல்லாவிட்டால் நேற்று அவர் இருந்த மனமுறிவுக்குக் குழந்தையைக் கடலில் தள்ளிவிட்டுத் தானும் தற்கொலை செய்து கொண்டிருப்பார்."

"யார், அவர்? அவருடைய குழந்தை தானா இவள் என்பதை நிச்சயமாகத் தெரிந்து கொண்டீர்களா ? ஒரு வேளை வேறு எவர் குழந்தையையாவது நகை நட்டுக்காக அபகரித்து வந்து, அவைகளை எடுத்துக் கொண்ட பின்னர், குழந்தையைக் கொல்ல மனம் வராமல் உங்கள் தலையில் சுமத்தி, ஆபத்தில் மாட்டிவிட்டுப் போய் விட்டிருக்கப் போகிறார்" என்றேன் நான்.

"சே! நீ சந்தேகிக்கிறபடியில்லை நர்மதா; குழந்தை அவருடையதேதான். பாவம், ஏதோ ஒரு வீம்புக்காக, தாயற்ற இந்தச் சேயை, வளர்க்கக் கூடியவர்களிடமிருந்து பிரித்து வாங்கி வந்து விட்டார்."

"வாங்கி வந்து, அவளைக் கடலில் தள்ளிவிட்டுத் தானும் தற்கொலை செய்து கொள்ளத் தீர்மானித்தாரா?"

"இல்லை; அப்படியில்லை. குழந்தையை

[தொடர்ச்சி 51ம் பக்கத்தில்]

தலத் முகம்மத்

"தஸ்வீர் டெரி டில் மேரா பெஹ்லா நா ஸஹேகி." (பாட்டு)

இந்தியாவிலுள்ளோருக்கு, இந்திய சங்கீதத்தில் பிரியம் கொண்டவர்களுக்கு, இந்தக் குரல் நன்கு பரிச்சயமானது. இந்தப் பாட்டின் மூலம் தான் தலத் மகமத் புகழுக்குப் பாத்திரமானார். இந்தப் பிரபல பின்னணிப் பாடகரை லிப்டன் புரோகிராம் மூலம் அறிமுகப் படுத்தும்படி எனக்குப் பல கடிதங்கள் வந்தன. தலத் மகமத் பின்னணிப் பாடகர் மட்டுமல்ல; நடிகரும் கூடத் தான். "டில்-இ-நடன்", "டக்-பாபு" ஆகிய இரு படங்களிலும் அவர் கதாநாயகனை நடித்திருக்கிறார். அவர் இப்பொழுது நதிரா, சுரய்யா இருவரும நடிக்கும் ஒரு படத்தைத் தயாரித்து வருகிறார். நான் கூட அவரைப் பேட்டி கண்டு, உங்களுக்காக இரண்டு பாட்டுகள் பாடும்படி கேட்க இருந்தேன். அவரது வாழ்க்கை ருசிகரமான நிகழ்ச்சிகளாக் கொண்டதாக இருக்குமென நினைக்கிறேன். பின்னணிப் பாடகரான அவர் எப்படி சினிமா நடிகரானார்? பல நக்ஷத்திரங்களை விட அவரது பாட்டுகள் பிரபலமாக இருக்கின்றன. பழகுவதற்குத் தங்கமானவர்; நல்ல தோற்றம் உள்ளவர். அவர் பேசுவதைக் கேட்கும் போது அதை நீங்களே அறிவீர்கள்.

— பால்ராஜ்.

(கதவு திறக்கப்படுகிறது. தலத் பிரவேசிக்கிறார்.)

தலத்:—வந்தனம், பால்ராஜ்!

பால்:—ஓ, தலத்! வந்தனம், வாருங்கள், உட்காருங்கள்.

தலத்:—உங்களை அதிக நேரம் காக்க வைத்துவிட வில்லையே!

பா:—மேலும் காத்திருக்கவும் நான் தயார்.

தலத்:—ஏன்?

பா:—தலத் ஸாஹிப், எதிலும் தேடிப் போவதில்தான் அதிகமான பலனும் ரஸனையும் இருக்கிறது.

தலத்:—சரி, நீங்கள் கேட்க விரும்புவதைக் கேளுங்கள்.

பா:—தலத் ஸாஹிப், நீங்கள் பட உலகில் பின்னணிப் பாடகராகப் பிரவேசித்தீர்களா? நடிகராகப் பிரவேசித்தீர்களா? இந்த சந்தேகத்தை தயவு செய்து முதலில் நிவர்த்தி செய்யுங்கள்.

தலத்:—நான் நியூ தியேட்டர்ஸில் ஒரு நடிகனைத்தான் ஒப்பந்தம் செய்து கொள்ளப் பட்டேன். ஆனால் பின்னணிப் பாடகனானேன். பம்பாய்க்கு வந்ததும் மீண்டும் நான் நடிப்பதில் இறங்கினேன்.

பா:—அப்படியா அது? அப்படியானால் குழந்தை முதலே உங்களுக்குப் பாடுவதில் அதிக விருப்பம் இருந்திருக்க வேண்டுமே?

தலத்:—ஆம், அதில் எனக்குப் பைத்தியம்.

பா:—நீங்கள் சகோதர சகோதரிகள் எவ்வளவு பேர்கள்?

தலத்:—ஆறு பேர். மூன்று பிள்ளைகள், மூன்று பெண்கள்.

பா:—சிறு பிராயத்தில் நீங்கள் எங்கு கல்வி கற்றீர்கள்?

தலத்:—என்து கல்வி லக்நௌ நகரில் ஆரம்பமாயிற்று. அலிகார் முஸ்லிம் சர்வகலாசாலையில் மெட்ரிக் பரீக்ஷையில் தேறினேன்.

பா:—பள்ளிக்கூட நாடகங்களில் நடிப்பதில் உங்களுக்கு விருப்பம் இருந்ததோ?

தலத்:—அவைகளில் பங்கெடுத்துக் கொள்வதை விட அவைகளை அதிகம் பார்ப்பதிலேயே எனக்குப் பிரியம் இருந்தது.

பா:—படிப்பு தவிர வேறு எதில் உங்களுக்குப் பிரியம் உண்டு?

தலத்:—காலஞ் சென்ற சைகாலின் இசைத் தட்டுகளை அடிக்கடி கேட்பேன். அவருடைய கவர்ச்சியான குரல் தான் எனக்குப் பாடத் தூண்டுகோலாக



நரஸூ ஸ்டுடியோ வெளியிட்டுள்ள "துளி விஷம்" படத்தில் இதுபோன்ற உன்னதக் காட்சியமைப்புகள் பலவற்றைக் காணலாம்.

யிருந்தது. என்னுடைய ஆசை அதிகமாகப் போய் நான் ஸைகாலின் பாட்டுகளை பள்ளிக்கூட விழாக்களில் பாடுவது வழக்கம்.

பா:—அதாவது, ஸைகாலை நீங்கள் உங்களது குருவாக மதித்தீர்கள்!

தலத்:—அவரைச் சந்திக்கும் அதிருஷ்டம் அந்த நாளில் எனக்குக் கிடைக்கவில்லை. ஆனால், ஹிருதயபூர்வமாக அவரையே எனது குருவாகக் கருதுகிறேன். அவரைப் போல் பாட வேண்டும் என நான் எவ்வளவு தூரம் ஆசைப்பட்டிருக்கிறேன், தெரியுமா?

பா:—பாடுவதைத் தவிர உங்கள் பொழுதுபோக்குகள் எவை?

தலத்:—கிரிக்கெட் அடிக்கடி விளையாடுவேன். பந்து வீசுவதில் நான் சமர்த்தனாக இருந்தேன். பல்வேறு வேலைகளினால் இப்பொழுது நான் அந்த விளையாட்டில் சிரத்தை காட்டுவது இல்லை.

பா:—மெட்ரிக் பரீட்சையை முடித்த பின் நீங்கள் என்ன செய்தீர்கள்?

தலத்:—லக்னௌ இஸ்லாமியா காலேஜில் சேர்ந்து இண்டர்மீடியட் பரீட்சை தேறினேன்.

பா:—கல்லூரியில் பாடித் தீர்த்திருப்பீர்களே?

தலத்:—ஆம்; இண்டர்மீடியட் பரீக்ஷை தேறியதும் எச். எம். வி. இசைத் தட்டுகளில் பாடினேன்.

பா:—அப்படியானால் கல்லூரியில் நீங்கள் பிரபல புள்ளியாக இருந்திருக்க வேண்டுமே!

தலத்:—எந்த விதத்தில்?

பா:—உங்கள் பாட்டுகளில் பலரும் மயங்கியிருப்பார்கள்; முக்கியமாக மாணவிகள் உங்களையே சூழ்ந்து கொண்டிருந்திருப்பார்கள்.

தலத்:—பால்ராஜ், இந்த மாதிரியான இக்கட்டான கேள்விகளைக் கேட்க வேண்டாம். நான் மணமானவன். மணமானவனிடம் இம்மாதிரியான கேள்விகளைக் கேட்பது நியாயமில்லை.

பா:—கல்யாணம் என்றதும் நினைவுக்கு வருகிறது. உங்களது திருமணம் பற்றி பத்திரிகைகளில் நிறையச் செய்திகள் அடிபட்டனவே?

தலத்:—ஆம், நானும் படித்தேன்.

பா:—உங்களுடையது காதல் மணம்' இல்லையா?

தலத்:—ஆம்.

பா:—நீங்கள் ஏன் அதை ரொம்ம காலம் ரகஸ்யமாகவே வைத்திருந்தீர்கள்?

தலத்:—பத்திரிகைகள் வெளியிட்டிருந்த நோக்கத்திற்காக நான் அதை ரகஸ்யமாக வைத்திருக்க விரும்பவில்லை. நான் துணிச்சலாக மணந்து கொண்டேன். இந்தத் திருமணம் பவித்திரமானது. இந்த மாதிரி எங்கள் மீது அவதூறு ஏற்படுமென நாங்கள் நினைக்கவே யில்லை. அதை ரகஸ்யமாக வைத்திருந்ததற்குக் காரணம், குடும்ப விஷயம். அதை வெளியிட முடியாமைக்கு வருந்துகிறேன். ரஸிகர்கள் அதற்காக என்னை மன்னிக்கட்டும்.

பா:—சரி, அதை மறந்து விடுவோம். அந்த விஷயம் பற்றிப் பேசி உங்கள் மனத்தைக் குழப்பி விட்டமைக்கு நான் வருந்துகிறேன்.. உங்கள் கல்லூரி நாட்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம் அல்லவா? இண்டர்மீடியட் பரீட்சை முடிந்ததும் இசைத் தட்டுகளில் பாடினதாகச் சொன்னீர்கள்.

தலத்:—ஆம், என் பாட்டுகளைப் பதிவு செய்ய என்னை கல்கத்தாவுக்கு அழைத்தார்கள்.

பா:—பதிவான உங்கள் முதல் பாட்டு எது?

தலத்:—"ஸெப் டின் ஏக் சமான் நகின் தா" என்று ஆரம்பிக்கும் பாட்டு.

பா:—இந்தப் பாட்டு மிகவும் பிரபலப் பட்டது இல்லையா? உங்களுக்கு ஆக்ஷேபணை யில்லாவிட்டால் ஒரு வேண்டுகோள்.

தலத்:—என்ன, அந்தப் பாட்டை நான் பாடிக் கேட்க வேண்டுமோ?

பா:—ஆம். மிகவும் மகிழ்ச்சி அளிக்கும்.

தலத்:—அந்தப் பாட்டை நான் பாடி வெகு காலமாகி விட்டது. சரி, முயற்சித்துப் பார்க்கிறேன்.

(அந்தப் பாட்டு பாடப்படுகிறது)

பா:—ரொம்பப் பிரமாதம். இதுதான் முதலில் பதிவாகிய உங்கள் பாட்டா? நீங்கள் எப்படிப் பட உலகில் பிரவேசித்தீர்கள்?

தலத்:—எனக்கு அப்பொழுது வயது பதிமூன்று. ஒரு பம்பாய் பட முதலாளி ஒருவர் லக்நௌவுக்கு வந்தார். மாதம் ஆயிரம் ரூபாய் சம்பளத்தில் என்னை நிரந்தர நடிகனாக ஒப்பந்தம் செய்து கொள்ள விரும்பினார். என் கல்விக்கு இடையூறு இன்றி அதையும் கவனித்துக் கொள்வதாக உறுதி கூறினார். ஆனால் எனது தமையன் மறுத்து விட்டார். நான் இண்டர்மீடியட் பரீக்ஷை தேறிவிட்டு, பாடல் பதிவுக்காக கல்கத்தா போன போது நியூதியேட்டர்ஸில் ஒரு நடிகனாக ஒபபந்தம் செய்து கொள்ளப் பட்டேன்.

பா:—தலத், அந்த விஷயத்தில் உண்மையில் நீங்கள் அதிருஷ்டக்காரர் தான்.

தலத்:—எப்படி?

பா:—கஷ்டப்படாமல் நடிகராகி விட்டீர்களே?

தலத்:—சுலபமாக நடிகனாக ஒப்பந்தமாகி விட்டது என்னவோ உண்மை தான். ஆனால் நான் அதன் பிறகு பட்ட கஷ்டம் உங்களுக்குத் தெரியாது.

பா:—ஏன், அந்த ஒப்பந்தத்திற்குப் பின் என்ன நடந்தது?

தலத்:—வருஷங்கள் இரண்டு ஓடிவிட்டன. படம் ஒன்றும் தயாரிக்கப்பட வில்லை. நான் சோம்பேறித் தனமாகப் பொழுது போக்கினேன். நான் ஏதோ ஒரு படத்திற்காக இரண்டு பின்னணிப் பாட்டுகள் பாடினேன். ஆனால் அவைகளும் அந்தப் படத்தில் வரவில்லை. சும்மா உட்கார்ந்திருப்பது ரொம்பவும் சங்கடமாக இருந்தது. எச். எம். வி. இசைத்தட்டுகளிலும் பாடாமல் இருந்திருந்தால் எனக்குப் பைத்தியமே பிடித்திருக்கும். அந்த சமயத்தில் தான் "தஸ்வீர் டெரி டில்மே ரா பெஹலா நாசஹேகி" என்ற எனது பாட்டு பதிவாகியது.

பா:—பின் நீங்கள் எப்பொழுது தான் பட உலகில் காலடி வைத்தீர்கள்?

தலத்:—இரண்டு வருஷ ஒப்பந்தத்திற்குப் பிறகு நான் பாரதி

"துளி விஷம்" படத்தில் கே. ஆர். ராமசாமியும், கிருஷ்ணகுமாரியும்.

யுடன் "சமபதி" என்ற படத்தில் நடித்தேன். அது பிரமாத வெற்றிப் படம் என்று சொல்ல முடியாது. இப்படியாக கல்கத்தாவில் ஒரு நடிகனாகவோ, பின்னணிப் பாடகனாகவோ எனக்குப் பெயரும் புகழும் கிடைத்து விடவில்லை.

பா:—அதன் பின் என்ன செய்தீர்கள் ?

தலத்:—எனது அதிருஷ்டத்தைப் பரிசோதிக்க 1949ம் வருஷம் பம்பாய்க்கு வந்தேன். நாலைந்து மாதங்கள் வெட்டியாகப் போயின. அங்குமிங்குமாகப் பல இடங்களுக்கு

"துளி விஷம்" படத்தில் சிவாஜி கணேசன், ராதாகிருஷ்ணன்.

அலைந்ததுதான் மிச்சம். கடைசியாக அனில் பிஸ்வாஸ் "ஆர்ஸூ" படத்தில் பின்னணிப் பாடகராக சந்தர்ப்பம் கொடுத்தார். பிறகு "பாபுல்" படத்தில் நௌஷத்தின் பாட்டுகளைப் பாடினேன். அது முதல் பின்னணியில் பாட எனக்கு நிறைய சந்தர்ப்பங்கள் கிடைக்க ஆரம்பித்தன.

பா:-நீங்கள் எப்படி நடிகரானீர்கள்?

தலத்:—"ஆராம்" படத்தில் நான் 'விருந்தாளி நடிகனாக'த் தோன்றினேன். அதன் பின் கர்தார் ஸாகிப் "டிலி-ஏ-நடன்" படத்தில் எனக்கு முக்கிய கதாபாத்திரத்தைக் கொடுத்தார். ஒரு மாதத்திற்குப் பின் "டக்-பாபு" படம் திரையிடப்பட்டது. இப்பொழுது நான் "வாரிஸ்" படத்தில் சுரய்யாவுடனும், நதீராவுடனும் நடிக்கிறேன். (இப்படம் இப்பொழுது திரையிடப்பட்டு விட்டது.) ஷோராப் மோடிக்காக நிதின் போஸ் டைரெக்ஷனில் தயாராகியுள்ள படம் இது.

பா:—படத்தில் புகுவதற்கு முன் யார் உங்களது அபிமான நக்ஷத்திரம்?

தலத்:—மோதிலாலும், சைகாலும் தான். இப்பொழுது திலீப் குமார்.

பா:-ஆங்கிலப் பட நக்ஷத்திரங்களில்?

தலத்:—டைரன் பவர், ஆட்ரே ஹெபர்ன், கிரிகிரி பெக், கிரீர் கார்ஸன்.

பா:-ஏது உங்களுக்கு விருப்பமானது? நடிப்பதா? பின்னணியில் பாடுவதா?

தலத்:—இரண்டையுமே தான் விரும்புகிறேன். இரண்டிலுமே நான் புகழ் அடைய விரும்புகிறேன். எனது முதல் படமான "டில்-ஏ-நடானை"ப் பற்றிப் பல ரஸிகர்கள் எழுதியிருந்தார்கள்.

பா:—என்ன எழுதியிருந்தார்கள்?

தலத்:—ஒரு உதாரணம் கூறுகிறேன். ஒரு பெண், 'நான் பாடுவதுடன் நிறுத்திக் கொண்டால் நன்றாயிருக்கும் என்றும், நடிப்பதன் மூலம் எனது புகழ் அதிகரிக்காது. ஏனெனில் என் நடிப்பு சுகமில்லை' என்றும் எழுதியிருந்தார்.

பா:—நீங்கள் அதற்கு என்ன பதில் எழுதினீர்கள் ?

தலத்:—'தாயின் வயிற்றில் இருந்து பிறக்கும் பொழுதே யாரும் எதையும் தெரிந்து கொண்டே பிறந்து விடுவதில்லை' என்று எழுதினேன். "தோல்வியைக் கண்டு கலங்காதவனே உண்மை வீரன்; தவழும் குழந்தைக்குத் தோல்வி என்றால் என்ன தெரியும்" என்ற இந்த

அடிகளை நீங்கள் கேட்டதில்லையா? நான் சோர்ந்து விடவில்லை. "டாக்-பாபு" வெளியான் பிறகு ரஸிகர்கள் என்னைப் பாராட்டுகிருர்கள். அவர்களுக்கு என் நன்றி.

பா:—நீங்கள் உங்கள் ரஸிகர்களின் கடிதங்களுக்கு பதில் எழுதுவதுண்டா?

தலத்:—தவருமல், பதில் எழுதத் தகுதியான கடிதங்களுக்கு பதில் எழுதுவதை நான் கடமையாகக் கொண்டிருக்கிறேன். ஏனெனில் அவர்கள் தானே எங்களது ஆதரவாளர்கள்.

பா:—சரி, தங்களுடைய விலாஸத்தைக் கொடுங்கள், ரஸிகர்களுக்கு சௌகரியமாக இருக்கும்.

தலத்:—அவசியம் தருகிறேன்: "மேஹதி வில்லா" 105, வாட்டர் பீல்ட் ரோட், பந்த்ரா, பம்பாய்.

பா:—வந்தனம், தங்களுடைய வாழ்க்கையின் அபிலாஷை என்ன?

தலத்:—என் விருப்பங்களைப் பற்றிப் பேச வேண்டும் என்ருல் ஏராளமாகப் பேசலாம். பள்ளியில் படிக்கும்பொழுது ஒரு சிறந்த கிரிக்கெட் ஆட்டக்காரனுக விரும்பினேன். அதன் பின், ஒரு ஆகாய விமானியாக ஆசைப்பட்டேன். இப்பொழுது சினிமா உலகில் பிரவேசித்ததிலிருந்து, என் ஆசைகளும் குறைய ஆரம்பித்தன. நான் விரும்புவதெல்லாம் என்னுடைய மீதி நாட்களை என் குழந்தைகளுடன் சந்தோஷமாகவும் கௌரவமாகவும் கழிக்க வேண்டும் என்பதே.

பா:—உங்களுக்கு ஒரு குழந்தை இருக்கிறதென்று எண்ணுகிறேன்.

தலத்:—ஆம், நாங்கள் அவனை 'கபீத்' என்றழைக்கிருேம்.

பா:—தங்கள் குழந்தைக்கு என் ஆசிகள்.

தலத்:—சரி.

பா:—தலத் ஸார், நான் இப்பொழுது என்ன விரும்புகிறேன் என்பதை ஊகித்தறிய முடியுமா?

தலத்:—என்ன?

பா:—எங்களுக்காக இப்பொழுது ஒரு 'கஜல்' பாடுவீர்கள் என்று விரும்புகிறேன்.

தலத்:—எது?

பா:—"ஷமே கம் கி க்வாஸம்."

தலத்:—நிஜமாகவே! உங்களுக்கென்ன? எதவலாவது நீங்கள்........?

பா:—இல்லை, இல்லை, அது மாதிரி இல்லை. உண்மையில் நீங்கள் நன்ருகப் பாடியிருந்தீர்கள்!

(பாட்டு)

உங்களுக்கு எப்படி வந்தனம் கூறுவது என்பது தெரியவில்லை. நல்லது, தலத் சாஹேப்! தங்களுக்கு என் நன்றியை எவ்வாறு தெரிவிக்க வேண்டும்? நீங்கள் விரும்பினல் நான் ஒரு பாட்டுப் பாடுகிறேன்.

தலத்:—வேண்டாம், தங்களுக்கு சிரமம் வேண்டாம். என்னைப் போக அனுமதித்தீர்களானல் நான் உங்களுக்கு நன்றி உள்ளவனுக இருப்பேன்.

பா:—சரி, சரி.

தலத்:—நல்லது, நான் ரஸிகர்களுக்கு நன்றி கூற வேண்டும்; அவர்கள் என் சம்பாஷணையை ரஸித்தார்களென்றே நினைக்கிறேன், வந்தனம்.

பா:—வந்தனம்.

[நீங்கள் மேலே வாசித்தது. பிரபலமான லிப்டன் டீ கம்பெனியாரது ஏற்பாட்டின் பேரில் ரேடியோ ஸிலோன் மூலம் ஒலி பரப்பப்பட்ட நக்ஷத்திர பேட்டியாகும்.]

மனோரஞ்சிதம்

[ஆசிரியர்: அரு. ராம நாதன்; விலை: ரூ. 1-0-0: கிடைக்குமிடம்: பழனி பிரசுரம்; மணிக்கூண்டு, புதுக்கோட்டை.]

விறுவிறுப்பான சிறு கதைகள் எழுதுவதில் தேர்ச்சி பெற்றவர்களில் அரு. ராமநாதன் ஒருவர் என்பது இப் புத்தகத்திலுள்ள அவரது நான்கு சிறு கதைகளிலிருந்தும் தெரிய வருகிறது. "மாங்கல்யம் மங்கையருக்கு அவசியம்" என்பது ஒரு சாராரின் கொள்கையாக இருக்க, "எமன் ரூபம்", என்ற சிறு கதையில், மனைவியின் மனதில் பதிவிரதா தர்மம் வேரூன்றுவது மாங்கல்யத்தால் மட்டுமல்ல என்பதைச் சித்தரிக்கிறார். நான்கு கதைகளும் படித்து ரஸிக்கும்படி இருக்கின்றன.

கட்ட பொம்மன் வீர வரலாறு

[ஆக்கியோன்: செ. அமலன்; விலை: ரூ. 2-8-0; கிடைக்குமிடம்: ஸ்ரீ வாணி விலாச அச்சகம், திருப்பாதிரிப்புலியூர்.]

நம் நாட்டை ஆக்கிரமித்துக் கொண்ட வெள்ளையனை வெளியேவிரட்டி இன்று நாம் சுதந்திரமாகவாழ்கிறோமென்றால், முதல் முதல் அதற்கு வித்திட்டுப் போராட்டம் தொடங்கிய வீரன் கட்ட பொம்மன். அவனது வீர சரித்திரத்தை நாடகமாக எழுதியிருக்கிறார் ஆசிரியர். நாடகம் விறுவிறுப்பாகப் படிக்க சுவாரஸ்யமாக இருக்கிறது. ஆனால், ஆங்காங்கே சில இடங்களில் ஆசிரியருக்கு ஒரு குறிப்பிட்ட கட்சி மீதுள்ள பற்றுதல் வெளிப் படுகிறது. அதைத் தவிர்த்திருக்கலாம். அனைவரும் படித்து ரஸிக்க வேண்டிய புத்தகம்தான் இது.

அழகாய் இருப்பது எப்படி?

[ஆசிரியர்: தமிழ்வாணன்: விலை: ரூ. 1-0-0; கிடைக்குமிடம்: மணிமேகலைப் பிரசுரம், சென்னை—17]

"நூறு வருஷங்கள் வாழ்வது எப்படி?" என்று எடுத்துக் கூறிய தமிழ்வாணன் நூறு வருஷம் வாழ நினைக்கிறவர் அழகாகவும் வாழ வழி சொல்லுகிறார் இந்தப் புத்தகத்தின் வாயிலாக. ஒவ்வொரு அவயவமும் அழகாக இருப்பது எப்படி? அழகில்லாத அவயவத்தை அழகுறச் செய்ய வழி என்ன என்றெல்லாம் இப்புத்தகத்தில் விவரித்திருக்கிறார்.

மணி விளக்கு (ஹஜ் மலர்)

மணி விளக்கு முஸ்லீம் மாதப் பத்திரிகையினர், ஹஜ் பண்டிகையை முன்னிட்டு மலர் ஒன்றை கவர்ச்சிகரமான அட்டையுடன் வெளியிட்டிருக்கிறார்கள்.

சிவாஜி கணேசன் யார்?

சிவாஜி கணேசனது வாழ்க்கைக் குறிப்பை புத்தகமாக வெளியிட்டிருக்கிறார்கள். ஒரு அணா விலையுள்ள இப்புத்தகம் டபிளெஸ்கே பதிப்பகம், 109, சந்தை ரோடு, நாகல் நகர், திண்டுக்கல் என்ற விலாஸத்தில் கிடைக்கும்.

Journal of THE FILM CHAMBER

தென்னிந்திய பிலிம் சேம்பர் சினிமாத் தொழிலுக்காகப் பாடுபட்டு வரும் ஒரு ஸ்தாபனமாக இருந்து வருகிறது, பல வருஷங்களாக! இந்த ஸ்தாபனம் தன் சேவை, தொழிலின் முக்கிய செய்திகள் குறித்து 1951ம் வருஷம் ஜூன் மாதம் முதல் பிரதி மாதமும் துண்டுப் பிரசுரம் ஒன்றை வெளியிட்டு வந்தது. இப்பொழுது அப்பிரசுரத்திற்குப் பதில் மேற்கண்ட பெயரில் மாதப் பத்திரிகை ஒன்றை ஆரம்பித்து நடத்தி வருகிறது. இப்பத்திரிகை சினிமாத் தொழிலில் சம்பந்தப்பட்ட ஒவ்வொருவருக்கும் மிகவும் பயன்படத்தக்கது என்பதில் சந்தேகமேயில்லை. மீண்டும் சென்ஸார் செய்யப்பட வேண்டிய பட முதலாளிகள், தியேட்டர் மின்சார லைசென்ஸ் வாங்க வேண்டியவர்கள் இவர்களை ஞாபகப்படுத்த குறிப்புகள் வெளியிடுகிறார்கள். ஸென்ஸார் விபரங்கள் பற்றிய குறிப்பு, தயாரிப்பிலுள்ள படங்கள் இப்படியாகப் பல விஷயங்கள் இருக்கின்றன. இதன் ஆசிரியர் பத்திரிகை உலகில் 'பழம் பெருச்சாளி' யான வி.ராமராவ் ஆவர். இப்பத்திரிகை, சேம்பர் காரியாலயமான, 19, உட்ஸ் ரோடு, மவுண்ட் ரோட், மதராஸ்—என்ற விலாசத்தில் கிடைக்கும்.

ஆர்.ஆர்.பிக்சர்ஸ்
கூண்டுக் கிளி
டைரெக்ஷன்
ராமண்ணா

சென்ற மாதம் திரையிடப்பட்டுள்ள "கூண்டுக்கிளி"யில் பி. எஸ். சரோஜா, குசலகுமாரி, எம். ஜி. ராமச்சந்திரன், சிவாஜி கணேசன், சாரங்கபாணி, பிரண்ட் ராமசாமி ஆகியோர் நடிக்கின்றனர்.

"சீர்கெட்ட சினிமா உலகம்"

ஸ்நேகப் பிரபாவின் தாக்குதல்

[பதிமூன்றுயிரம் டில்லி தாய்மார்கள், "சினிமா இளைஞர்கள் உள்ளத்தைப் பாழ்படுத்துகின்றது — அதைத் தடை செய்யவேண்டும்" என்று ஒரு மகஜரை இந்தியப் பிரதமர் நேருஜியிடம் சமர்ப்பித்தது, ஒரு பெரிய விவாதத்தைக் கிளப்பி விட்டிருக்கிறது. இதோ ஒரு பிரபல நடிகை டில்லி தாய்மார்களை ஆதரித்து எழுதியுள்ள கட்டுரை.]

சமீபத்தில் பதிமூன்றுயிரம் டில்லி மாதர்கள் பண்டித நேருவுக்கு படத் தொழிலைக் குற்றம் சாட்டி ஒரு மகஜர் அனுப்பியிருந்தார்களல்லவா? சினிமா, வாலிபர்களின் உள்ளத்தைக் கெடுப்பதில்லை என்று அவர்களுக்கு சமாதானம் கூற, இந்திய சலனப்படத் தயாரிப்பாளர் சங்கத் தலைவர் பாஞ்சோலி முயன்றிருக்கிறார். அவர்களது குற்றச் சாட்டுக்கு ஆதாரமான சம்பவங்களைக் கூறும்படி அவர் கேட்டிருக்கிறார். பாஞ்சோலியைவிட பொறுப்பான பிரமுகர்கள் வாயைத் திறக்காது சும்மாயிருக்கும்போது பாஞ்சாலியின் இந்த முயற்சி போற்றத் தக்கதே.

அந்த மகஜரில் உள்ள குற்றச்சாட்டுகளுக்கு ஆதரவு தேட படம் பார்க்கப் போக வேண்டுமென்ற அவசியம்கூட இல்லை. தியேட்டருக்குத் தியேட்டர் போய் வெளியே மாட்டப்பட்டிருக்கும் படத்தின் விளம்பர ஸ்டில்கள், ஒட்டப்பட்டிருக்கும் போஸ்டர்கள் இவைகளைப் பார்த்தாலே போதும், குற்றச் சாட்டின் உண்மை தெரியவரும்.

உதாரணமாக, இங்கு ஒரு தியேட்டரில் ஒட்டப்பட்டிருக்கும் ஒரு நடிகையின் போஸ்டரை எடுத்துக் கொள்வோம். எந்த நிமிஷம் அவர் மார்பகம் ரவிக்கையைக் கிழித்துக்கொண்டு வெடித்து விடுமோ என்ற முறையில் இருக்கிறது அப்படம்.

மற்றொரு தியேட்டரில் இதே நடிகை மேனாட்டு உடையில் காக்ஷியளிக்கிறார். அவளது ஒரு பக்கத்து மார்பகம் பெருமளவு நன்றாகத் தெரியும்படி ஒரு சிறு துணியைத் தான் மேலே போர்த்திக் கொண்டிருக்கிறார்.

மற்றொன்றில், கதாநாயகன் கதாநாயகியின் மார்பகத்திலே உதடுகள் துடிக்க, கண்கள் மூடியபடி தலை சாய்த்தபடி இருக்கிறான். அவனது முக பாவம் காமத்தைக் கிளறுவதாக இருக்கிறது.

இந்தக் காட்சியுள்ள போஸ்டர்கள் எங்கு திரும்பினாலும் இருக்கின்றன. இதுவாலிப உள்ளத்தைக் கிளறுவதாக உள்ளது-அவர்களை இனக்கவர்ச்சிக்கு அடிமையாகும்படி செய்கிறது என்று சொல்வதைத் தவிர வேறு என்ன சொல்வது?

கதாநாயகி கண்களைச் சுழட்டும் விதம், தன் உடலை ஆட்டும் முறை, தன் மேலாடையை அணிந்திருக்கும் அலங்கோலம் இவைகள் இனக்கவர்ச்சியைத் தவிர வேறு என்ன?

வாழ்க்கையில் இனக்கவர்ச்சி ஓரளவுக்கு அவசியம் தேவை என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனால் இம்மாதிரியான மட்டரகமான முறையில் வெளிப்படுத்தும் கீழ்த்தரமான செய்கைக்கு எந்தவிதமான சமாதானமும் கூறமுடியாது.

இன்றைய உலகிலே இது எவ்வளவு தூரம் ஆதிக்கம் செலுத்தியிருக்கிறது என்பது இக்காலத்து நாகரீக யுவதிகளை ஆராய்ந்தாலே தெரியவரும்.

படத்தில் வரும் ஒரு கதாபாத்திரம் போல அவள் நடை உடை பாவனையில் மாறிவிடுகிறாள். மார்பகம் வெளியே தெரியும்படி, மேலேயிருக்கும் தாவணி நழுவி விழ, பார்வையில் காமம் மிளிரக் காட்சியளிக்கிறாள்.

இந்தச் செய்கைக்கு அந்த யுவதியைக் குறை கூறமுடியாது. ஒரு அழகன் அவளைக் காதலிக்க வேண்டுமானால், அவளிடம் காதல் கீதம் பாட வேண்டுமானால், அவளுக்காக ஏங்கிப் பெருமூச்சுவிட வேண்டுமானால் அவள் அப்படித் தான் நடந்து கொள்ள வேண்டுமென்று பேசும் படங்கள் அவளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கின்றன. இந்த மனப்பான்மை விவாகமான சில நாரீமணிகளின் மனதிலும் ஏற்பட்டிருக்கிறது.

இந்த மாதிரியான நடவடிக்கைகள் தாம் சிறந்த வாழ்க்கைத் துணைவனை அடைய வழியென்றால், அடக்கமான

டி. எஸ். துரைராஜ் ஏதோ புது 'ஐடியா'வைத் தேடிச் செல்கிருர் போலிருக்கிறது !—பக்ஷிராஜாவின் "மலைக் கள்ளன்" தமிழ்ப் படத்தில் காணலாம்.



குணம் படைத்த புத்திசாலியான அழகிகளின் நிலை என்ன ?

இந்த மனப்பான்மை சமீப காலத்தில் எவ்வளவு தூரம் அதிகரித்துவிட்டிருக்கிறது என்பது இப்பொழுது ஏராளமாக விற்பனையாகும் மேற்கூறிய முறையில் செயற்கை அழகு படுத்திக் கொள்ளக் கூடிய ஆடம்பரப் பொருள் களிலிருந்து நன்ருகத் தெரிந்து கொள்ளலாம்.

இன்றைய ஒவ்வொரு ஆடவனும் கண்ணில் தென்படும் அழகிகளை சந்தேகத்துடனேயே பார்க்கிருன். "இயற்கை அழகியா, அல்லது எல்லாம் ஹாலிவுட் வேலையா?" என்ற அர்த்தம் தொனிக்க புருவத்தை நெரிக்கிருன்.

இதில் மிகவும் வருந்தத்தக்க விஷயம், புராணப் படங்களில்கூட இந்தஆடை அலங்கார அலங்கோலம் புகுந்து, அவை நமக்கு பய பக்தியை உண்டு பண்ணுவதற்கு பதில் நகைப்பிற்கு இடமளிக்கின்றன.

'இந்தியப் படங்கள் என்ற சொல் நம் படங்களுக்குப் பொருத்தமானதா?' என்று யாரும் ஆச்சரியப்படாமல் இருக்க முடியாது. ஆடை அலங்காரம், கதைப் போக்கு, நடிப்பு அனைத்தும மேனட்டின் வாஸனை எவ்வளவு தூரம் நம்மை ஆட்கொண்டுவிட்டது என்பதைப் பறைசாற்றுகின்றன.

இன்று ஒட்டப்படும் போஸ்டர்களில் படத்தின் பெயரும் நடிகர்களின் பெயரும் மட்டும் இலலாமல் படம் மட்டும் இருந்தால் அந்த விளம்பரம் இந்தியப் படமா? மேனட்டுப் படமா? என்பதைக் கண்டு பிடிப்பதே ஒரு பிரச்னையாக இருக்கும் என்று சொல்லுவேன்.

கடந்த பத்து ஆண்டுகளில் இந்திய படத் தொழில், கலை நுணுக்கம் (டெக்னிக்) சம்பந்தப்பட்டவரை வெகுவாக முன்னேறியிருக்கிறது என்று பெருமைப் படலாம். விசேஷமாக நமது ஒளிப் பதிவு முறை எந்த அமெரிக்கப் படத்திற்கும் தரத்தில் குறைந்தது இல்லை. நமது நக்ஷத்திரங்களில் சிலர் அழகில், கவர்ச்சியில் எந்த மேனட்டு நக்ஷத்திரத்தையும் மிஞ்சக் கூடியவர்கள்.

ஆனல், நமது படங்கள் இந்தியப் பண்பையும் கலாசாரத்தையும் பிரதிபலிப்பவை என்று சொல்வது முழுப் பூசினிக்காயை சோற்றில் மறைக்க முயற்சிக்கும் செய்கையே என்றுதான் கண்டிப்பாகக் கூறவேண்டும்.

வங்காளிப் பட முதலாளிகள் மட்டும்தான் இன்னும் அந்தப் பெருமைக்குப் பாத்திரமாக இருந்துவருகிருர்கள். நடிப்பு, சங்கீதம், கதை இவைகளில் இந்திய கலாசாரம், பண்பு பிரதிபலிக்கும் வெற்றிகரமான படங்களைத் தயாரிக்க முடியும் என்ற நம்பிக்கை அவர்களுக்கு இருக்கிறது. அவர்களை எவ்வளவு பாராட்டினலும் தகும்.

பாஞ்சோலி, கறுப்பை வெள்ளையென்று, கண்ணுக்கு நிதர்சனமாகத் தெரியும் இந்த உண்மையான குற்றச்சாட்டு நியாயமற்றது என்று எப்படி நிரூபிக்கப் போகிருரென்பது ஆவலாக எதிர்பார்க்க வேண்டிய விஷயம்தான்.

['ஸண்டே ஸ்டாண்டர்ட்' பத்திரிகையில் வெளியான கட்டுரையின் மொழிபெயர்ப்பு.]

வாழ்க்கை இதுதான்

[சென்ற மாதத் தொடர்ச்சி]

"யாருமில்லை, நான்தான் பயப்படாதே; உன் தீர்மானத்தை அறியவே இங்கு வந்தேன். அப்பா வீட்டில் இல்லை. உனக்குத் தெரிந்திருக்குமே, என்னை என் பெற்றோர் ஒரு பணக்காரப் பெண்ணின் கணவனைக் போகிறார்கள் என்று! உன் கதியே எனக்கும். இன்னுமா உன் மனம் இரங்கவில்லை? உன்னை நான் நினைந்து உருகி, நீ என்னை நினைந்து உருகி பின்னால் என்ன பயன்?' இன்றும் நீ எனக்கு உன் சம்மதத்தைக் கொடுக்காவிட்டால் இன்றுதான் என் வாழ்க்கையில் கடைசி நாள். என் பேசாமல் இருக்கிறாய்? ஸூலி வாயைத் திறந்து ஏதாவது சொல்லேன்!" என்று கூறிய அந்த உருவம் அந்த டாக்டரின் மகன்தான் என்று நான் சொல்லவும் வேண்டுமா?

"எனக்கு என் பெற்றோரைத் தள்ளிவிட முடியவில்லையே!" என்றேன்.

"எனக்கு மட்டும் முடியுமா? உலகத்திலேயே காதல்—அதுவே சிறந்த இன்பம்! முதலில் பெற்றோர் உன் இஷ்டத்திற்கு மறுக்கலாம். பின்னால் நீ என்னை ரிஜிஸ்டர் மணம் செய்து கொண்டுவிட்டால், அது நியாயமானதல்ல எனப் பெற்றோர் மறுப்பரா? மாட்டார்கள். அதை ஒத்துக்கொண்டு சாஸ்திரிய முறையை ஒத்து, மீண்டும் திருமணம் நடத்துவார்கள். இன்னும் நீ மௌனம் சாதிக்காதே! நான் உன்னை என் உயிரினும் மேலாகக் காதலிக்கிறேன். அப்படியிருந்தும் நீ என்னை நிராகரித்துவிட்டால், என் காதலுக்காக என் உயிரையே பலி கொடுப்பேன். இது நிச்சயம்!" அவனுடைய இந்த ஆவேச மொழிகளைக் கேட்டு நான் இன்புற்றேன். அவன் சொன்னது எல்லாம் உண்மை என்றே நம்பினேன். ஒரே வார்த்தையில் என் சம்மதத்தைத் தெரிவித்து விட்டேன்.

அடுத்த நாள் காலையில் ரிஜிஸ்டர் ஆபீஸில் எங்கள் திருமணம் சிறிதும் ஆடம்பரம் இன்றி நடந்தது. அவருடன் கைகோத்த வண்ணம் வீட்டுக்குள் நுழைந்த என்னைக் கண்டதும் அம்மாவுக்குத் தூக்கிவாரிப் போட்டது. "என்னடி இது?" என்று கத்தினாள்.

"இவர் என் கணவர்! கல்யாணம் ரிஜிஸ்டர் முறையில் நடந்தது." இந்த ரத்னச் சுருக்கமான பதில் அவள் சினத்தை எரிகின்ற நெருப்பில் எண்ணெய் வார்ப்பது போல் அதிகரிக்கச் செய்தது.

"என்ன? இதோ பாருங்கள் உங்கள் அழகான பெண்ணை! அந்தத் தடியனைக் கல்யாணம் பண்ணிண்டு வந்து நிக்கறா, கொஞ்சமும் பயமில்லாமல்." அதற்கு மேல் மிகுதியான கோபத்தால் வார்த்தைகள் அவள் உதடுகளை விட்டு வெளிவர மறுத்தனவோ, நான் பிழைத்தேனே. இல்லாவிட்டால் அவரை என்னவெல்லாம் சொல்லி அவமதித்திருப்பாளோ?

"சரி, அதனால் என்ன? நடந்தது நடந்தாகி விட்டது. வீட்டில் சாஸ்திரப்படி இதே கல்யாணத்தை முடித்து விட்டால் போகிறது!" இது என் தந்தையின் வார்த்தைகள்.

"அதெல்லாம் முடியாது. நீ வீட்டை விட்டுப் போய்விடு! என் முன்னே நில்லாதே; நீ என் பெண் அல்ல! அவள் எப்போதோ இறந்து விட்டாள். எங்கள் மேல் ஆணையாக நீ இனிமேல்

இந்த வீட்டில் காலடி வைக்காதே" என்று இரைந்த என் தாயாரின் சொற்கள் என்னைப் பெரிதும் வருத்தின. அவர் என் கையை அமுக்கினார். அந்த சொற்களை மீண்டும் கேட்க மனமின்றி வீட்டை விட்டு வெளியே நடந்தேன் அவருடன்.

அவர் வீட்டிலோ இதைவிட மோசமான வரவேற்பு எங்களுக்குக் கிடைத்தது. 'ஒருவருக்கு ஒருவர் துணை' என்று எண்ணி இருவரும் எங்கள் பெற்றோர், உற்றார், உறவினர், வீடு, யாவற்றையும் துறந்து கிளம்பி விட்டோம்.

என் கணவருக்கு காந்தி கல்லூரியில் ஆசிரியர் வேலை கிடைத்தது. எனக்கும் கமலா நேரு கலாசாலையில் ஆசிரியை வேலை கிடைத்தது. நாட்கள் ஓடின. எங்கள் அன்யோன்ய வாழ்க்கையைக் கண்டு பொறாமைப்படாதவர் எவரும் இல்லை என்றே சொல்லலாம். பெண்களுக்கு மனமொத்த அன்புக் கணவன், வேண்டிய சௌகரியங்கள் ஆகிய இரண்டும் கிடைத்து விட்டால் அவர்கள் இனிய வாழ்வுக்கு ஈடே கிடையாது என்பதற்கு அத்தாட்சியாக இருந்தது என் தாம்பத்திய வாழ்க்கை. வீட்டைத் துறந்த துக்கத்தை நாளடைவில் மறந்தேன்.

சலனமற்ற எங்கள் வாழ்க்கை நீரோட்டத்தில் ஒரு கல் விழும் என்று நாங்கள் நினைக்கவே இல்லை. அந்தப் புயல் நடுவில் ஏற்படாமல் இருந்திருந்தால் எனக்கு ஈடான பெண் உலகில் யாருமே இருக்க மாட்டாள் என்ற அகங்காரம் நீடித்திருக்கும். எனக்கு திடீரென மலேரியா சுரம் வந்தது. படுத்த படுக்கையாகி விட்டேன். என் கணவரும் இரவு பகல் எனப் பாராமல் எனக்கு சிசுருஷைகள் செய்தார். என் உடல் நிலையைக் கண்டு என்றும் கலங்காத அவர் உள்ளம் கலங்கியது. கண்ணீர் விட்டு அறி

சென்னை நகரத்திற்கு டிஸ்ட்ரிபியூட்டர்கள்: சுராஜ் ஏஜன்ஸீஸ், 37, ஜானிஜான்கான் ரோடு, திருவல்லிக்கேணி, மதராஸ். கோயமுத்தூர், பாலக்காடு, நீலகிரிக்கு சோல் ஏஜண்டுகள்: B. பாலபட்டாபி செட்டியார், (1933-ல் ஸ்தாபிக்கப்பட்டது) கோயமுத்தூர்.

Phone : 41. Grams : MYDEENCO.

யாத அவர் கண்கள் ரத்தத்தைக் கக்குவதைக் கண்டு, "தெய்வமே! எனக்காக இல்லாவிடினும், அவருக்காக வேனும் உயிர்ப் பிச்சை கொடு!" என எனக்குத் தெரிந்த தெய்வங்களை எல்லாம் வேண்டிக் கொண்டேன். என் பிரார்த்தனையின் வலிமையோ, அல்லது என் கணவரின் அன்பான சிசுருஷைகளினலோ சக்தியும் பெற்று விட்டேன்.

அன்றொரு நாள் கண்ணுடியில் பார்த்துக் கொண்டேன். என் பிம்பத்தைக் கண்டு ஆச்சரியத்தால் ஸ்தம்பித்தேன். தாமரை இதழ் போன்ற என் கண்கள் குழி விழுந்து அடி பாதாளத்தில் இருந்தன. அவைகளைச் சுற்றிக் கரு வட்டங்கள். முகத்தில் எலும்பு தூக்கி கிழவியாகக் காட்சியளிக்கும் இந்த ஸீலினிக்கும், அந்த ஸீலினிக்கும் எவ்வளவு வித்தியாசம்! சாட்டை போன்று முழங்கால் வரை தொங்கிய கூந்தலைக் கொண்ட தலை இன்று இங்கும் அங்கும் வழுக்கை விழுந்து கிராப் தலையாகக் காட்சியளித்தது. செக்கச் செவேலென்றிருந்த உதடுகள் கரு நீலமாக மாறிப் போயிருந்தன. அழகு தெய்வம் என்னை விட்டு அகன்றதே என்ற வருத்தம் இருப்பினும், கணவனுகிய அன்பு தெய்வம் என்னை விட்டு நீங்காது என்ற ஆறுதல் அதை அறவே என்னை மறக்கச் செய்தது.

நோயாளியாக இருந்தபோது ஒரு நாள் என்னைப் பார்ப்பதற்காக என் உதவி ஆசிரியை ஒருத்தி வந்திருந்தாள். என் கணவர் வாசலில் நின்று கொண்டிருந்தார். அவளை நான் அவருக்கு அறிமுகம் செய்து வைத்தேன். அவரும் அவளும் சரளமாகப் பழகியது எனக்கு அப்போது ஒன்றும் விகல்பமாகப் படவில்லை.

அன்றே எனக்குப் பிடித்தது சனி! அன்று இரவு வெகு நேரம்கழித்து வந்தார் அவர். அதுவரை என்றுமில்லாத சம்பவம் அது.

"என் இவ்வளவு நேரம்?"

"அதையெல்லாம் கேட்க நீ யார்?"

"என், நான் உங்கள் மனைவியல்லவா?"

"உனக்கு அந்த உரிமை கொண்டாட சிறிதும் அருகதை இல்லை! சீக்கிரத்தில் உன்னை 'டைவர்ஸ்'......."

எனக்கு இந்தச் சொல் புதிதாக இருந்தது. செய்தித் தாள்களில் இத்தகைய செய்திகளைக் கண்டு எத்தனை முறை நகைத்திருக்கிறேன்? இவரே—அதிலும் தான் எல்லாவற்றையும் துறந்து மணந்த பெண்ணையா விவாகரத்து செய்வார்? என் மனம் பதறியது. அதை எப்படி நான் சகிப்பேன்?

"வேண்டாம், தயவு செய்து இந்த மாதிரியெல்லாம் பேசாதீர்கள்" என்று அவர் அருகே சென்று கெஞ்சினேன்.

"அது என் இஷ்டம்!" என்றவாறே நான் சற்றும் எதிர்பார்க்காத சமயம் என் கன்னங்களில் அவர் கைச் சுவடுகள் விழுந்தன. வலி பொறுக்காமல் கீழே விழுந்தேன். அவர் எட்டி என்னை உதைத்தார். பலஹீனமாக இருந்த நான் அங்கேயே மயக்கமாக விழுந்து விட்டேன்.

அடுத்த நாள் காலை. என் உடம்பில் ஒரு நகை கூட இல்லை. அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. ஒன்றே ஒன்று என்னைப் பெரிதும் வாட்டியது. நான் உயிரினும் அதிகமாக மதித்து விரும்பிய என் திருமண மோதிரம் என் விரலில் இல்லாதது என்னை விசாரத்திற்குள்ளாக்கியது. வெளியே என் உணர்ச்சிகளைக் காட்டவில்லை. அவருக்குக் காப்பி கொண்டு போய்க் கொடுக்க அவர் அறைக்குள் காலை வைத்தேன். அவர் தம் கைகளிலிருந்த எதையோ மறைக்கலானார். மேஜை மீது என் மோதிரம் இருந்தது. அதை எடுக்கப் போனேன். அவர் புலிபோல் என் மீது பாய்ந்தார்.

"எடுக்காதே!" என்று கடுமையாக கர்ஜித்தார். 'ஏன்' என்ற பாவனையாக அவரை நிமிர்ந்து நோக்கினேன்.

"உனக்கு அருகதை இல்லை. வாழ்க்கையில் வழுக்கி விழுந்தவள் நீ."

"என்ன, நானா?"

"ஆமாம், சாக்ஷாத் அழகி நீ தான். ஒரு அன்னியனை நம்பி பெற்றோரை ஏமாற்றினாயே, அத்தகைய ராக்ஷஸியான உன்னை ஏமாற்ற எத்தனை நாழிகையாகும்?"

எனக்கு துக்கம் தொண்டையை அழுத்தியது. அவர் வாயில் இத்தகைய சொற்கள் வருமென்று நான் கனவிலும் நினைக்கவில்லை. பெரியதொரு பேரிடி தான் அது. என்றாலும் நான் என் உணர்ச்சிகளை சிரமத்துடன் கட்டுப்படுத்தினேன்.

"உங்களிடம் என் இவ்வளவு மாறுதல்கள் என்று நான் அறியலாமா?"

"நீ ஒன்றும் அதை அறிய வேண்டியதில்லை. நான் சொல்லவும் தயாராக இல்லை!"

"உங்களை நம்பி வீட்டையும் துறந்து உங்களை மணந்ததற்கு இதுதானே பலன்?"

"நான், 'என்னை நம்பு, என்னை மணந்து கொள்' என்று சொல்லவில்லையே!"

"என்ன, நிஜமாகவா! அன்றொரு நாள் பௌர்ணமியன்று அந்தப் பாழும் கிணற்றருகே நின்றுகொண்டு........"

கவர்ச்சி மிகு தோற்றத்திற்கு

"பிரின்ஸஸ் கிளாமர்"

பாடியை அணியுங்கள்

எந்த விதமான உடலமைப்புக்கும் பிரின்ஸஸ் பாடிகள், 16 ரகங்களில் பிரபல ஸ்டோர்களில் கிடைக்கும்.

சித்திர விளக்கத்துடன் கூடிய கேட்லாக், மற்றும் விலை ஜாபிதாவுக்கு எழுதுங்கள்.

தயாரிப்பாளர்:

மாக்கீ அன்ட் கோ

8. டாமரின்ட் லேன் :: பம்பாய்-1.

விற்பனை சம்பந்தமாகவும் எழுதிக் கேளுங்கள்.

"போதும், போதும். உன் பிரசங்கம். நான் சொல்லவே இல்லை. என்னை அப்போது உன் அழகு கவர்ந்தது. அதைக் கொண்டு நீயே.......''

இதற்கு மேலும் என்னால் அங்கு நின்று கொண்டிருக்க முடியவில்லை. இன்னும் பெரிய பேரிடிகளைத் தாங்கும் சக்தியும் எனக்கு அப்போது இல்லை. 'என்ன, இவர் என்னைத் தம்மை மணக்கச் சொல்லவில்லையாமே? எவ்வளவு அபாண்டமான பொய்! இதுமாதிரி எத்தனை பெண்கள் நிலையிலா ஆண்களை நம்பி தம் வாழ்க்கையில் ஏமாற்றமுறுகின்றனரோ?' இவ்வாறெல்லாம் நினைத்துப் பலவாறு புழுங்கினேன். இதனால் பயன்தான் ஏதாவது உண்டா?

அன்றிரவு மணி மூன்று. தள்ளாடித் தடுமாறியவாறே வீட்டுக்கு வந்தார். கண்கள் சிவந்து விகாரமாக இருந்தன. தலை கலைந்திருந்தது. மொத்தத்தில் பயங்கரமாகத் தோற்றமளித்தார். கிட்டே வந்தவுடன் துர்நாற்றம் சகிக்க முடியவில்லை. சாராய நாற்றம் வீடு முழுவதும் பரவியது.

"தயவு செய்து குடிக்காதீர்கள்! நான் உங்களைக் காலில் விழுந்து கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன்'' என்றேன்.

"சரி நீ போ'' என்று ஏதோ தாறுமாறுக மரியாதையின்றிப் பிதற்ற ஆரம்பித்தார். எந்த தெய்வத்தை உயிர்ப் பிச்சைக்கு வேண்டினேனோ, அதே தெய்வத்தை விரைவில் உயிரை எடுத்துக் கொள்ளுமாறு மனமார அன்று இரவு முதல் வேண்டத் தொடங்கினேன்.

மறுநாள் அவர் ஏனோ கல்லூரிக்குச் செல்லவில்லை. நானும் அவரைக் கேட்கவில்லை. காரணம் துணிவு இல்லாததால் தான்! மாலை சற்று தாமதமாகக் கலாசாலையில் இருந்து திரும்பிய போது எனக்குத் திக்கென்றது. வீட்டில் பெட்டிகளெல்லாம் திறந்தபடி இருந்தன; வெள்ளிப் பாத்திரங்கள் நகைகள் யாவையும் காணோம். காட்ரெஜ் ஸேபிலிருந்த என் நல்ல உயர்ந்த புடவைகளைக் கூடக் காணோம்! அவரும் வீட்டில் இல்லை.

அன்றிரவு பூராவும் அவர் வரவில்லை. என் மனதில் ஓயாத வேதனை. இவர் வரவில்லை என்ற வேதனை வேறு. அடுத்த நாள் காலை பாங்கிக்குச் சென்று பணம் வாங்கி வரலாம் என நினைத்து அங்கு சென்றேன். பாங்க் மானேஜர், "அம்மா! நேற்று உங்கள் கணவர் தான் இங்கிருந்து முப்பதினாயிரத்தையும் வாங்கிக் கொண்டு சென்று விட்டார். மற்றும் வெள்ளிப் பாத்திரங்கள், நகைகள் முதலியவற்றையும் இங்கு கொடுத்து விட்டு இன்னும் ஐம்பதினாயிரமும் வாங்கிக் கொண்டு சென்றாரே! உங்களுக்குத் தெரியாதா?'' என்று சொன்னபோது எனக்கு உலகமே இருண்டு விட்டதுபோல் தோன்றியது.

அன்று எங்கும் என்னால் போக முடியவில்லை. மறுநாள் கல்லூரிக்குச் சென்றேன். அங்கிருந்த எல்லாரும் அனுதாபத்துடன் என்னைப் பார்ப்பது எனக்கு வியப்பாக இருந்தது. சிறிது சங்கடமாகக் கூட இருந்தது. சிறிது நேரம் கழிந்ததும் கல்லூரித் தலைவி என்னைக் கூப்பிட்டு அனுப்பினாள்.

"என்ன, திருமதி ஷீலினி! உங்கள் கணவருடன் நம் கல்லூரி ஆசிரியை திருமதி மானவதி இங்கிலாந்திற்கு நேற்றுப் போனாளே. நீங்களும் போகும் எண்ணத்தில் இருக்கிறீர்களா?'' என்றதைக் கேட்டவுடன் எனக்குத் துக்கம் பீறிட்டுக் கொண்டு வந்தது. கன்னத்தில் கையை வைத்துக் கொண்டு உட்கார்ந்து விட்டேன்.

"அப்படி அபிப்பிராயம் இருந்தால் அவளைப் போல் சொல்லாமல் போய் விடாதீர்கள்'' என்று அவள் சொல்லியது என் காதில் விழவே இல்லை.

அன்று நான் அங்கிருக்க முடியாமல் வீடு சென்றேன். தொப்பெனப் படுக்கையில் விழுந்தேன். தலைமை ஆசிரியை கூறிய முதல் வாக்கியம் என் காதுகளில் ஒலித்துக் கொண்டிருந்தது. தற்செயலாகக் கீழே பார்த்தேன். மானவதியோடு கைகோத்தபடி இவர் எடுத்துக் கொண்ட படம் கீழே விழுந்து கிடந்தது. பத்து வருடங்களுக்கு முன் இவருடன் கைகோத்தபடி நான் இருந்த இன்ப நாட்களை நினைவுக்கு வந்து என் மனவேதனை பன்மடங்கு அதிகரித்தது. புரண்டு, புரண்டு நெஞ்சம் வெடிக்கும்படி அழுதேன். ரேடியோவைத் திருப்பினேன். அதிலிருந்து "வாழ்க்கை இதுதான்!'' என்ற பாட்டுக் கிளம்பியது. அதைத் தொடர்ந்து, "ஷீலினி, வாழ்க்கை இதுதான்! ஆமாம் வாழ்க்கை இதுவே தான்'' என்று என் உள்ளமும் கூடச் சேர்ந்து கத்தியது.

பம்பாயில் வசித்து வந்த தம் சகோதரியிடம் சேர்த்துவிட்டு, தேசாந்தரம போகலாமென்றுதான், பாவம், வந்திருக்கிருர். ஆனல் அவர் சகோதரியின் இருப்பிடத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆகவே, அதை இங்குள்ள கௌரிபாயின் அநாதைக் குழந்தைகள் விடுதியில் சேர்த்துவிட முயன்றிருக்கிருர். ஆனல், துரதிர்ஷ்டவசமாக அந்த விடுதியிலும் இடமில்லை. ஆகவே.......''

''ஆகவே, குழந்தையைக் கடவிடம் ஒப்படைத்துவிடத் துணிந்தாராக்கும். நல்ல மனிதர் அவர்! கடவுள ஏன்தான் இப்படிப்பட்ட கல் நெஞ்சர்களுக்குக் குழந்த குட்டிகளைக் கொடுக்கிருரோ! போகட்டும், இவர் எங்கிருந்து வந்தவராம்.''

''அது ஒரு பெரிய கதை, நர்மதா. ரொம்ப விசித்திரமான, ஆனல் துயர் நிறைந்த கதை. ஆரம்பத்திலிருந்து சொல்லுகிறேன், கேள். இப்பொழுது சொன்னேன் பார், 'கௌரிபாய் அநாதைக் குழந்தைகள் விடுதி' என்று; அது இந்த நகரில் மிகவும் பிரசித்திபெற்ற ஒரு தர்ம ஸ்தாபனம். இந்த மாதிரி தர்ம ஸ்தாபனங்கள் புகழுடைய அடையச் சங்கடம்தான்! கௌரிபாயின் விடுதியில் ஒரேயடியாக அநாதைக் குழந்தைகள் வந்து குவிந்து விட்டன. அத்தனை குழந்தைகளையும் சமரக்ஷிப்பது ஒரு புறம் இருக்கட்டும்; முதலில் அங்கே இடவசதியே போதாதபடி ஆகிவிட்டது. ஆகவே, புதிய விடுதி ஒன்று கட்ட வேண்டுமென்று கௌரிபாய் தட்டைத் தூக்கிக்கொண்டு நன்கொடை வசூலிக்கக் கிளம்பினுள்.

''சென்ற வாரத்தில் அந்த அம்மாள் என்னிடம் நன்கொடைக்காக வந்தபோது, நான் அவள் பிரமிப்படையும் பெருந்தொகை ஒன்றை இந்தப் பரோபகார ஸ்தாபனத்துக்குக் கொடுத்து உதவினேன். நான் அவவாறு கொடுக்கக் காரணம் இருந்தது. இந்தத் திவாகரனை ஸ்வீகாரம் செய்துகொண்டு வளர்க்க ஆரம்பித்த பிறகு, காலஞ்சென்ற என் மனைவி—உன் மாமிக்கு மேலும் ஓர் ஆசை ஏற்பட்டது. 'இவனைப் போலவே, பால்மணம் மாருத ஒரு பாலிகையையும் பெற்றுத் தன் கைகளால் வளர்க்க வேண்டும்' என்றுதான்.

''அவளுடைய ஆசைகள் எதையும் நான் நிறைவேற்ருது இருந்தது கிடையாது. அதுபோல இந்த ஆவலையும் நிறைவேற்றிவிடவே முனைந்தேன். மறுபடியும் சொந்த ஊருக்குப் புறப்பட்டுச் சென்று, சொந்தக்காரர்களையே துழாவி ஒரு பெண் குழந்தையையும் ஸ்வீகாரம் செய்து எடுத்து வருவது என்று ஊருக்குப் புறப்பட ஒரு நல்ல நாள்கூடப் பார்த்து நிச்சயித்துவிட்டேன். அதற்கிடையில்தான் உன் மாமி 'மார்வலி' ஏற்பட்டுத் திடீரென்று மரணமடைந்தாள். ஆகவே, அவளுடைய இறுதி ஆசை நிறைவேருமலே போய்விட்டது. உன் மாமியின் ஆவி அந்தக் குறையுடன் அலையக் கூடாது. அவளுக்குக் குழந்தைகளின் மீதுள்ள வாத்சல்யத்துக்கு ஓர் எடுத்துக் காட்டாக ஏதாவது செய்ய வேணடும் என்று நான் நினைத்துக் கொண்டிருக்கையில், இந்த அநாதை விடுதிக்கு உதவும் சந்தர்ப்பம் ஏற்படவே, கட்டடத்துக்கு ஆகும் செலவில் பாதி வரும் அளவு நன்கொடை அளித்து என் மனதைத் திருப்தி செய்து கொண்டேன். அதே சமயம், கௌரிபாயிடம், என் மனைவியின் நிறைவேருத ஆசையைப் பற்றிச் சொல்லி, அதுவே இந்தப் பண ரூபத்தில் நிறைவேறுகிறது என்றும் விளக்கினேன்.

'ஏன்? அப்படியானல் என் விடுதியிலுள்ள பெண் குழந்தைகளில் ஒருத்தியை வேண்டுமானல், உங்களுக்குத் தந்து விடுகிறேனே' என்று என் துயரைக் கேட்ட கௌரிபாய் கூறினுள்.

''எனக்கும் அந்த நைப்பாசை உள்ளூர இருக்கத்தான் இருந்தது. ஆனல், உண்மையைச் சொல்வதென்ருல் ஏற்கெனவே ஒரு குழந்தையை வளர்க்கும் பொறுப்பைச் சுமத்தியுள்ள உன்மீது மற்றொரு குழந்தையின் பாரத்தையும் சுமத்த மனம் வராமல், கௌரிபாயின் ஆலோசனையைத் தட்டிக் கழித்துவிட்டேன்.

''ஆனல், உன் மாமியின் விருப்பம் எப்படியாவது நிறைவேறிவிட வேண்டுமென்று இருந்தது போலும்! நேற்று இவர் கௌரிபாயிடம் குழந்தையை ஒப்படைக்கச் சென்று, அவள் இடமில்லை என்று சொன்னபோது, சட்டென என்

13 4150

நினைவு ஏற்படவே, நம் வியாபார ஸ்தலத்து விலாசத்தைக் கொடுத்து, 'இவரைப் போய்ப் பாருங்கள்; ஒருகால் உங்கள் குழந்தையை ஏற்றுக் கொள்வார்' என்று கையைக் காட்டி அனுப்பிவிட்டாள்.

''இவர் என்னிடம் வந்து, தம் கதை முழுவதையும் சொல்லி அழுதார். 'நான் புண்பட்டுக் கிடக்கிறேன். என் மனம் அமைதிபெறச் சில காலம் தீர்த்த யாத்திரை செய்ய விரும்புகிறேன். அது வரையிலாவது, என் யமுனையை நீங்கள் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்' என்று என் கால்களைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு விட்டார்.''

''அப்படி என்ன துயரம் நேர்ந்து விட்டதாம், அவருக்கு?'' என்று நான் இடைமறித்துக் கேட்டேன்.

''அவர் ஒரு பெண்ணை மணந்து கொள்ள விரும்பினர். ஆனால், பெண்ணின் பெற்றோருக்கு அவள் ஒரே குழந்தை. ஆகவே, மகளைப் பிரிய விரும்பாத அவர்கள், தங்களுக்கு வாய்க்கும் மாப்பிள்ளை தங்கள் வீட்டோடு வசிப்பவராக இருக்க வேண்டும் என்று விரும்பினர்கள்.''

''பேஷ்! ஏது? என் அண்ணாவின் கதையைப்போல் இருக்கிறதே!''

''உனக்கு அண்ணா ஒருவர் இருக்கிறரா, நர்மதா? என்னிடம் சொல்லவேயில்லையே!'' என்று ஆச்சரியப்பட்டார் கோட்ஸே மாமா.

ஆமாம்; என் கதையில் எதைத்தான் நான் அவரிடம் கூறியிருந்தேன்! 'நம்முடைய அவலக் கதைகளைப் பிறர் அறியச் செய்து அவர்களுடைய பரிதாபத்துக்கோ, பரிகாசத்துக்கோ பாத்திரமாக வேண்டாம்' என்று நானும் ஹரிமாயியும்தான் ஆரம்பத்திலிருந்தே தீர்மானித்து விட்டோமே! ஆகவே, கோட்ஸே மாமாவுக்கு 'நான் ஓர் அநாதை கிராமப் பெண், ஹரிமாயிக்கு வேண்டியவள். கணவரையும் குழந்தையையும் இழந்து, கவனிப்பாரற்றுப்போன அநாதை' என்பதற்கு அதிகமாக என்னைப்பற்றி எதுவும் தெரியாது. ஆகையால், எனக்கு ஒரு சகோதரன் இருக்கும் செய்தி அவருக்கு ஆச்சரியத்தை அளித்துத்தானே இருக்கும்?

நான் சொன்னேன் : ''இருக்கிறன் ஒரு பாவி. அவனை 'அண்ணா' என்று சொல்லிக் கொள்ளக்கூட வெட்கமாக இருக்கிறது, மாமா. மாமனர் வீடே கதி என்று கிடக்கிறன். பெற்ற தாய்க்குக் கொள்ளி வைக்கக்கூட வரவில்லை, அந்த மகா பாவி!''

''இவர் கதையும் அப்படியேதான், நர்மதா. இவருடைய மனைவியும் அவள் பெற்றோரும்கூட, தாய் இறந்த செய்தியை இவருக்கு அறிவிக்காமலே இருந்து விட்டனராம். அதனால்தான் அவருக்கு இத்தனை மனச் சங்கடம் ஏற்பட்டிருக்கிறது.''

''அதெல்லாம் சுத்தப் பொய்யாக இருக்கும் மாமா; இந்தப் பெண்டாட்டி தாஸர்களே இப்படித்தான். அவர்களுக்குத் தாய், தந்தை, தங்கை ஒருவருமே பொருட்டில்லை. அது கிடக்கட்டும்; மாமனர்-மாமியாரிடமிருந்து இவர் ஏன் குழந்தையைப் பிரித்து வாங்கி வந்து விட்டாராம்; இப்படிக் கண்ட அநாதை விடுதியில் தள்ளுவதற்காகவா?''

''அப்படியில்லை நர்மதா. இவருடைய மாமனர்-மாமியாருக்கு இவரைக் கட்டோடு பிடிக்காதாம். சாதாரணமாக வேட்டகத்தோடு தங்கிவிடும் மாப்பிள்ளைகள் எவருக்கும் ஏற்படும் அநுபவம்தானே இது! பெண் உயிரோடிருந்த வரையில், முக்கியமாக விவாகமாகிப் பல வருஷங்களாகியும் அவளுக்குக் குழந்தை பிறக்காத காரணத்துக்காக, இவரை வீட்டில் இருக்க அநுமதித்துக் கொண்டிருந்தனராம். கடைசியில், அவர்கள் மகளுக்கு ஒரு மகள் பிறந்தாள்; அதோடு அவளும் பிரசவ அறையிலே செத்தொழிந்தாள். பிறகு இவரை வீட்டில் வைத்துக் கொண்டிருப்பார்களா, அவர்கள். கிடைத்தது கல்தா! ஆனல், இவருக்கு ரோசம் பொத்துக் கொண்டுவிட்டது. 'நான் இல்லாவிட்டால் என் குழந்தைக்கு இங்கே என்ன வேலை?' என்று வழக்கிட்டுக் குழந்தையைப் பெற்றுக்கொண்டு கிளம்பிவிட்டார்.

''குழந்தை கிடைத்துவிட்டாள்; ஆனல் அந்தப் பச்சை மண்ணை வளர்ப்பது யார்? அப்பொழுதுதான் ஊரிலிருக்கும் தாயின் நினைவு இவருக்கு ஏற்பட்டது. பெற்றவளைப் பிள்ளை புறக்கணித்தாலும், தாய் ஒருபோதும் சேயைப் புறக்கணிக்க மாட்டாளென்று குழந்தையுடன் ரத்னகிரியி விருந்து.......''

"எங்கிருந்து!........"

"ரத்னாகிரியிலிருந்து. அதுதான் அவருடைய மாமனாரின் ஊர்."

"மாமா, இவரின் பெயர் காசிநாத்தா!" என்று நான் திடுக்கிட்டுக் கேட்டேன்.

"ஆமாம்; ஏது, உனக்கு இவரை ஏற்கெனவே தெரியும் போலிருக்கிறதே!" என்று சிரித்தார் கோட்ஸே மாமா.

"ஐயோ, அண்ணா நீயா? உன் குழந்தையா இந்த யமுனா!" என்று அலறினேன் நான்.

"காசிநாத் உன் அண்ணாவா? ஆனால் அது எப்படி நீங்கள் ஒருவரை ஒருவர் நேரில் பார்த்தும் அடையாளம் தெரிந்து கொள்ளவில்லை" என்று வியப்போடு வினவினார் மாமா.

"அதுதான் விதி மாமா, விதி" என்று புலம்பினேன் நான். "அண்ணா வேட்டகத்தோடு போனபோது நான் சிறுமியாக இருந்தேன்; அதோடு அப்பொழுது கண் அவிந்த குருடியாகவும் இருந்தேன். பின்னர் கடவுள் எனக்குக் கண்களைக் கொடுத்துவிட்டுக் காப்பாற்றுபவர்களைப் பிடுங்கிக்கொண்டார். அதுதான் நேற்று அவன் என்னை உற்று உற்றுப் பார்த்தான், தன் தங்கையாக இருக்குமோ என்ற சந்தேகத்தில். ஆனால், நான் பார்வையோடு இருப்பதைக் கண்டு தன் சகோதரியல்ல என்று எண்ணிப் பேசாதிருந்துவிட்டான் போலிருக்கிறது. பாவி, நானும், 'தன் குழந்தையை இவள் சீராக வளர்ப்பாளா?' என்று என்னை அளவெடுக்க அப்படிப் பார்க்கிறான் என எண்ணிவிட்டேன்."

"ஆமாம்; நான்கூட அப்படித்தான் நினைத்துக்கொண்டேன். இருந்தாலும் தவறு என்னுடையதுதான், நர்மதா; நேற்று அவர் முன்னிலையில் அவருடைய பெயரையாவது கூறியிருந்தால் நீங்கள் ஒருவரை யொருவர் அறிந்து கொண்டிருப்பீர்கள் அல்லவா" என்று மிகவும் மனம் நொந்து பேசினார் மாமா.

"நீங்கள் வருத்தப்படாதீர்கள், மாமா; விதியின் விளையாட்டுக்கு நீங்கள் எப்படி ஜவாப்தாரியாவீர்கள்? போகட்டும்; அண்ணா என்னை அறியாமலே போய்விட்டாலும், அவனுடைய மகளாவது தன் அத்தையைத் தெரிந்து கொள்ளத்தானே போகிறாள்!" என்று

அவருக்குத் தேறுதல் சொன்னேன் நான்.

விதிதான் எத்தனை கொடியது பாருங்கள். யாரிடம் தன் குழந்தையை ஒப்படைக்க வேண்டுமென்று அண்ணா பம்பாய்க்கு வந்தானே, அவளிடமே அக்குழந்தையை ஒப்படைத்தும், அது தெரியாமலே அவனை விரட்டிவிட்ட விதியின் கொடும் சித்தத்தை என்னவென்று சொல்வது!

இதுகூடப் பெரிதில்லை. அடுத்துவந்த இரண்டு வருஷங்களில் விதி செய்த கொடுமையையும், அதன் நிமித்தமாக எனக்கு ஏற்பட்ட கடும் சோதனைகளையும் நினைக்கும்போது, இந்த இனம் அறியாத சந்திப்பு, ஒரு பெரிய கொடுமையாகவே தென்படவில்லை.

வாழ்க்கையில் நான் ஒருநாள்கூட சந்தோஷமாக இருக்கக்கூடாது என்று அது கங்கணம் கட்டிக்கொண்டிருந்ததோ, என்னவோ? அண்ணாவைக் கண்டும், அறிந்து அளவளாவ முடியாமற் போன துயரத்தை மறப்பதற்கு முன்பே, வேறொரு துயரம் என்னைச் சார்ந்தது.

என்றைக்கோ கடலில் கரைந்திருக்க வேண்டிய என்னைக் காத்து ரட்சித்து, உள்ளப்புண் ஆற, ஒரு தகுதியான வாழ்வையும் வகுத்துக் கொடுத்த ஹரிமாயி அந்த வருஷம் சாவுக்கு இரையானாள்.

அறுபதைத் தாண்டிய மூதாட்டிதான் அவள்; ஆனாலும், என்னை அன்னைக்கு அன்னையாக இருந்து ஆதரித்து வந்தவள் இல்லையா? சிலரைப்போல, 'ஏதோ வழியில் கண்டோம்; வீட்டுக்கு அழைத்து வந்தோம்; சில காலம் காப்பாற்றி, பிறகு தகுந்த இடத்தில் அமர்த்தி விட்டோம்; இனி நம் பொறுப்பு விட்டது' என்று அவர்கள் இருந்து விடவேயில்லை. நாள் தவறினாலும், அவர்கள் என்னைக் காண வரத் தவறியதே யில்லை. குழந்தைகளின் வளர்ப்பு, வீட்டு நிர்வாகம், தந்தை ஸ்தானத்திலிருந்து அன்பு பொழிந்து வந்த கோட்ஸே மாமாவின் மனம் கோணாத சேவை இவை எல்லாவற்றையும் நான் எளிதில் சமாளித்து நல்ல பெயர் எடுத்தேன் என்றால், அது என் சாமர்த்தியத்தால் அல்ல; நாள் தவறாது என்னிடம் வந்து, வழிகாட்டி, புத்திமதிகள் கூறி, என்னைச் சரியான பாதையில் செலுத்தி வந்த ஹரிமாயியைத் தான் அந்தப் பெருமை சாரவேண்டும்.

அப்படிப்பட்ட அன்பின் உருவத்தை விதி மூன்று நாள் விஷ ஜுரத்தில் வாரிக்கொண்டு போய் என்னைத் தனியளாக்கிவிட்டது!

ரஸ்தாவை யாராவது செப்பனிட்டு வைத்திருந்தால், எந்த வண்டியோட்டியும் தன் வாகனத்தைச் சீராகச் செலுத்திவிட முடியும். ஆனால், ரஸ்தாவில் அவ்வப்போது ஏற்படும் மேடு பள்ளங்களைச் செப்பனிட எவரும் இல்லாவிட்டால்........? நன்கு பழக்கப்பட்ட வண்டியோட்டி வேண்டுமானால், லாகவமாகத் தனது வாகனத்தைச் செலுத்திவிடுவார். புதுப் பழக்கக்காரர்கள், அவ்வழியை எளிதில் கடந்துவிட முடியுமா?

குடும்ப வாழ்க்கையில் அடிபட்டு அனுபவம் அடைந்தவளல்ல, நான். எனது வாழ்க்கைப் பிரயாணம்தான் தொடக்கத்திலேயே கடலில் சிதைந்து விட்டதே! எனவே, கோட்ஸே மாமாவின்வளர்ப்புக்குழந்தைகளின்பராமரிப்புக்கும், அவருடைய குடும்ப நிர்வாகத்துக்கும், எனக்கு ஹரிமாயி தான் பாதையைச் செப்பனிட்டுத் தரவேண்டியிருந்தது. இப்பொழுது அவள் போய்விட்டாள். 'இனி, நான் எப்படி இந்தக் குடும்பச் சக்கரத்தைப் பழுதின்றி உருட்டப் போகிறேன்?' என்கிற கவலை என்னை வாட்ட ஆரம்பித்தது.

இந்த சமயத்தில், விதி மற்றொரு பெரிய பாறாங்கல்லையும் தூக்கி என் தலைமீது வீசிற்று. ஆம்; சாவு அரக்கன் அடுத்ததாகத் தன் கரங்களை கோட்ஸே மாமாவின் கழுத்திலே வைத்து விட்டான்!

கோட்ஸே மாமாவுக்கு லேசாக நீரழிவு வியாதியுண்டு. அந்த பயங்கர வியாதியின் பிடிக்கு இலக்காகி விடக்கூடாது என்று அவர் சர்வ ஜாக்கிரதையாக உடம்பையும், ஆரோக்கியத்தையும் பேணி வந்தார். அப்படியிருந்தும், நள மகாராஜாவின் பாதத்தில் கழுவப் படாத துளி இடத்தின் வழியே சனிபகவான் நுழைந்து அவரது வாழ்க்கையை வியாபித்துவிட்டது போல், சாவு, கோட்ஸே மாமாவின் விரல் நுனி வழியே உள்ளே நுழைந்து அவரை நன்கு ஆக்ரமித்துக்கொண்டு விட்டது.

ஒன்றுமில்லை; ஒரு நாள், குழந்தைகளுக்கு விளையாடுவதற்காக அவர் ஆடும் பொம்மைக் குதிரை ஒன்றை வாங்கி வந்தார். அதன் மீது திவாகரனை உட்கார்த்தி ஆடச் செய்து கொண்டிருந்த போது, கவனப் பிசகாக அவருடைய கைவிரல்களுள் ஒன்று பொம்மைக்கும் தரைக்கும் இடையே அகப்பட்டு லேசாக நசுக்குண்டது. காயம் ஒன்றுமே ஏற்படவில்லை; சொட்டு ரத்தம் கூடக் கசியவில்லை. வலிகூட அதிக நேரம் இருக்கவில்லை. ஆகவே, வலி மறைந்ததும், மாமாவும் அதை மறந்துவிட்டார். அதுவே அவர் உயிருக்கு யமனுக வந்தது. பதினைந்து நாட்களுக்குப் பிறகு நசுக்குண்ட விரலில் ரத்தம் கட்டி, பழுப்புண்டாகிவிட்டது. பெரிய டாக்டர் ஒருவர்தான் வந்து ரொம்ப ஜாக்கிரதையாக ஆப்ரேஷன் செய்தார். ஆனல், ரணம் ஆரவில்லை. அது படர்ந்தது. ஒரு மாத காலத்துக்குள் மாமா பிழைப்பது துர்லபம் என்கிற நிலை ஏற்பட்டுவிட்டது.

அவருக்கே தமது இறுதி காலம் நெருங்கிவிட்டது தெரிந்துவிட்டது. அவர் என்னைத் தம் படுக்கை அருகில் அழைத்து, இரு குழந்தைகளின் கைகளையும் பிடித்துத் தந்தார்; பிறகு சொன்னுர்:

"நான் என்ன என்னவெல்லாமோ கற்பனைகள் செய்து கொண்டிருந்தேன் நர்மதா. 'என் திவாகரனைப் பெரிய படிப்புகள் படிக்க வைக்கவேண்டும்; அவனைச் சீமைக்கு அனுப்பி பாரிஸ்டராக்க வேண்டும். பிறகு யமுனவை அவனுக்கு மணமுடித்து வைத்து, அவர்கள் குழந்தை-குட்டிகள் பெற்று இன்ப வாழ்வு வாழ்வதைக் கண்களால் கண்டு களிக்க வேண்டும்' என்று பல பல எண்ணியிருந்தேன். ஆனல், உன் மாமியைப் போலவே நானும் என் ஆசைகள் நிறைவேறு முன்பே இந்த உலகிலிருந்து புறப்பட்டு விட்டேன்.

தமிழ்நாடு ஏஜெண்டுகள் :—சீதாராம ஜெனரல் ஸ்டோர்ஸ், மேலகோபுர வாசல், மதுரை.

"ஆனால், நர்மதா! மனசில் குறையுடனே, கவலையுடனே, நான் புறப்பட்டுவிடவில்லை. ஆழ்ந்த அமைதியோடு ஆனந்தமாகத்தான் கிளம்புகிறேன். என்னைக் காட்டிலும் அதிகப் பாசம் காட்டி அவர்களை வளர்க்க நீ இருக்கும்போது, அக் குழந்தைகளின் எதிர்காலத்தைப் பற்றி நான் ஏன் கவலைப்பட வேண்டும்? ஆயினும் நர்மதா, உலக வழக்கையொட்டி, என் உள்ளத்தில் உறைந்துவிட்ட இரு சஞ்சலங்களுக்கும் இடமளிப்பதில்லையென்று நீ எனக்கு வாக்குறுதி தரவேண்டும். உன் மீது எனக்குப் பரிபூரண நம்பிக்கையுண்டு நர்மதா; எனது நிறைவேறாத ஆசைகளை நீ கட்டாயம் நிறைவேற்றி வைப்பாயென்று. இருந்தாலும், பெருத்த செல்வத்தையும், பச்சிளங் கன்றுகளான இந்த இரு செல்வங்களையும் தனியாக நிர்வகிக்கும் மிகப் பெரிய பொறுப்பை உன் தலைமீது சுமத்த நேர்ந்துள்ள நான், பெண்பாலாகிய உன்னிடம் என் ஆசைகளை ஒன்றுவிடாமல் நிறைவேற்று என்று கேட்டுக் கொள்ள மாட்டேன். நான் உன்னிடம் விரும்புவது இரண்டே இரண்டு வாக்குறுதிகள் தாம். ஒன்று, எந்த நிலையிலும் என் திவாகரனைக் கைவிடலாகாது என்பது. வருங்காலத்தில் அவன் பெயரும் புகழும் எடுத்துப் பிரக்யாதி அடையாவிட்டாலும். நல்ல பிள்ளை என்று பிறர் மெச்சும்படி வளர்க்கப்பட வேண்டும்.

"என் இரண்டாவது கோரிக்கை இது தான்: என்ன இருந்தாலும் திவாகரன் உனக்கு அந்நியன்தான். யமுனா அப்படி யில்லை. ஆகவே, திவாகரனிடம் உனக்கு மாறாப் பாசம் ஏற்பட வேண்டுமானால், யமுனாவை அவனோடு பிணைக்கவேண்டும். ஆகவே, தக்க வயது வந்ததும் அவர்களை எப்படியும் தம்பதியாக்கி விடவேண்டும்.

"நர்மதா நான் இப்படிக் கேட்பது என் மனச் சரிவையே காட்டும். ஆம்; வாழ்வு சரியும்போது, மனிதரின் மனதும் சரிந்துதான் விடுகிறது. ஆகவே, அச் சரிவைச் சரிசெய்ய நீ எனக்கு இவ் வாக்குறுதிகளை அளிக்கத்தான் வேண்டும்."

மேல்மூச்சு, கீழ்மூச்சு வாங்க, இடையிடையே பேச முடியாமல் திணறிக் கொண்டு, கண்களில் கண்ணீர் மல்க, தந்தைக்கு ஒப்பான அப் பெரியவர் என்னிடம் இப்படி இறைஞ்சியபோது, என் கண்களிலும் கண்ணீர் பெருக்கு எடுத்து ஓடியது. "என் உடலில் உயிர் இருந்தால் கட்டாயம் இந்த இரண்டு காரியங்களையும் சிறிதும் குறைவின்றி நிறைவேற்றுவேன் மாமா. இதோ, இன்று என் உறவினள் என்று சொல்லக்கூடிய யமுனா மீது ஆணையிட்டுச் சொல்லுகிறேன்; உங்கள் விருப்பங்களை நிறைவேற்ற, என் உயிரையும் கொடுக்கத் தயங்கமாட்டேன்" என்று அவருக்கு வாக்குறுதி செய்து கொடுத்தேன்.

இந்த உறுதி மொழியைக் கேட்டதும் கோட்ஸே மாமாவின் முகம் மலர்ந்தது; அகமும் மலர்ந்திருக்க வேண்டும். உள்ளும், புறமும் நிறைந்த அந்த மலர்ச்சியுடனே அவர் மறுநாள் விடியற் காலையில் பரமனடி சேர்ந்தார்.

(தொடரும்)

நிச்சயமாக வாங்க வேண்டியது!

ரீஸா ரேடியோ



பாப்புலர் மாடல்

ரூ. 198.

ஏஸி. ஏஸி/டிஸி, மற்றும் பாட்டரியில் இயங்கும். 5, 6, 7 வால்வ் மாடல்களும் உண்டு. 12 மாத உத்தரவாதம்.

ரீஸா கம்பெனி,
20, ஹால்ஸ் ரோட் — கீழ்ப்பாக்கம்
சென்னை—10.
போன்: 55515 தந்தி: ASSEMBLER

புகழும் பரனியும்

சு. ரா.

அந்த ஹாலில் சற்று நேரம் நிசப்தம் நிலவியது. ஆயினும் அங்கே உட்கார்ந்திருந்தவர்களின் மனங்களில் பெரிய போராட்டம் நிகழ்ந்து கொண்டிருந்ததை அவர்களின் முகங்கள் தெளிவு படுத்தின.

மிகவும் அழகாக வைத்துக் கொள்ளப்பட்டிருந்த அந்த ஹால், நான்கைந்து ஸோபாக்கள், ஒரு மேஜை மேல் ரேடியோ, மற்றொரு சிறிய வட்ட மேஜைமீது 'டீ ஸெட்', மின்சாரத்தினால் இயங்கிக் கொண்டிருந்த ஒரு கடிகாரம் முதலிய நவீன நாகரீகச் சாதனங்களுடன் கூடி விளங்கியது. அங்கிருந்த ஸோபாக்களில் நான்கு பேர்கள் அமர்ந்திருந்தனர். வயதான அம்மாள் ஒருத்தி, நடுத்தர வயதினளான ஒரு ஸ்திரீ, பதினாறு பதினேழு வயது மதிப்பிடக் கூடிய அழகிய ஓர் இளம் நங்கை, முப்பது முப்பத்தைந்து வயதான ஒருவர் ஆகியவர்கள் அமர்ந்து, யோசனையில் ஆழ்ந்திருந்தனர்.

''எல்லாம் என்னால் வந்த வினைதான். 'சின்னப் பெண்களுக்கு எல்லோரும் நாட்டியம் சொல்லித் தருகிறார்களே, நாமும்தான் சொல்லி வைப்போமே' என்று ஆசைப்பட்டதற்கு எனக்கு இது வேண்டியதுதான்'' என்று அந்த வயதான அம்மாள் மெல்லிய குரலில் முணுமுணுத்தாள்.

''நீ சும்மா யிரு, அம்மா. நாட்டியம் சொல்லி வைப்பது ஒரு தவறா? பெரிய பெரிய கௌரவமான குடும்பப் பெண்களெல்லாம் செய்யாததையா நாம் செய்துவிட்டோம்? இவள் அவசரப்பட்டுச் செய்த காரியத்தினால் நாம் செய்தது தவறாகிவிடுமோ?'' என்றார் அந்த அம்மாளின் மகனான கிருஷ்ணசாமி.

அந்தப் பெண் தன் ஆசனத்தை விட்டு எழுந்து அவர் அருகே சென்றாள். ''என்ன அப்பா, நீயும் பாட்டியும் இப்படி பயப்படுகிறீர்களே? உயர் குலப் பெண்கள் நாட்டியம் மட்டும் கற்றுக் கொண்டு அரங்கேறலாம், சினிமாவில் சேரக்கூடாதா? ஏற்கெனவே சினிமாவில் நம்மைப் போன்றவர்கள் நடிக்க வில்லையா?'' என்று படபடப்புடன் கேட்டாள்.

''சாந்தி! இதைப்பற்றி உனக்கு அதிகம் தெரியாது. நான் இதே தொழிலில் பல வருஷங்களாக ஈடுபட்டிருக்கிறேன். இதில் உள்ள ஊழல்கள் எனக்குத் தெரியும். அதனால்தான் நீ செய்ததைக் குறித்து வருந்துகிறேன்'' என்றார் அவர்.

''நீ இத்தனை வருஷங்களாகப் படத் தொழிலில் இருந்தும் உனக்கு மாத்திரம் கெட்ட பெயர் வராமல் இருக்கிறதே, அதே போல் நானும் புகழும், பெயரும் எடுக்க முடியாதா?'' என்று கேட்டாள் சாந்தி.

''நானோ வசனகர்த்தா. ஸ்டுடியோவுக்குப் போகவேண்டிய அவசியம் கூடக் கிடையாது. அதுவும் வசனம், பாட்டு எழுதுபவர்களைப் பற்றி பொது ஜனங்களுக்கு அதிகம் அக்கறை இல்லை. அவர்கள் வாயில் விழுந்து புறப்படுவது நட்சத்திரங்கள் தானே! அதனால் தான் நான் சொல்கிறேன்'' என்று கூறிப் பெருமூச்சுவிட்டார் அவர்.

தங்கவேலுவும், ராகவனும் வணக்கம் தெரிவித்துக் கொள்ளுவது "வைரமாலை" தமிழ்ப் படத்தில்.

என்றுமே அவள் அந்த வீட்டில் அதிகம் பேசியதில்லை. "யார் யார் தலையில் எப்படி எப்படி எழுதி யிருக்கிறதோ, அதன்படி நடந்தே தீரும்" என்ற மனோபாவத்துடன் அவள் இருந்து வந்தாள்.

"என்ன காமாட்சி, நீயாவது உன் பெண்ணுக்குச் சொல்லக் கூடாதா?" என்று அவர் அவளைக் கேட்டபோது, பணிவான குரலில், "நான் சொல்ல என்ன இருக்கிறது? நானா அவளுக்கு நாட்டியம் சொல்லி வைத்தேன்? என் இஷ்டப்படியா அவள் நடந்துகொள்கிறாள்?" என்றாள் தாய்.

"அம்மாவைக் கேட்டால் என்னை சமையல் உள்ளுக்குத்தான் அனுப்புவாள்!" என்று முணுமுணுத்தாள் சாந்தி.

சாந்தி அவர் அமர்ந்திருந்த சோபாவின் ஒரு கரத்தில் உட்கார்ந்து கொண்டு கொஞ்சும் குரலில், "அப்பா! நீதான் எனக்கு ஒரு 'சான்ஸ்' கொடுத்துப் பாரேன். நான் உள்ளூரில் பேர் எடுத்து விட்டதைப் பற்றி புகழ்கிறீர்களே, ஒரு சினிமாவில் தோன்றி அகில இந்தியப் புகழ் வாங்குவதில் உங்களுக்குச் சந்தோஷம் இல்லையா?" என்றாள். பிறகு பாட்டியின் அருகே சென்று, "பாட்டி. நீ கொஞ்சம் கூடப் பயப்படாதே! தைரியமாக ஆசீர்வாதம் செய். நான் நாட்டிய உலகில் அடைந்துள்ள புகழுக்கு நீதானே காரணம்? அதேபோல் இதற்கும் நீ ஆசி தரவேண்டும்" என்று கெஞ்சும் குரலில் கூறினாள்.

அவளுடைய தலை மயிரைக் கோதியவாறு, "என்னவோ அம்மா! எனக்கு ஒன்றும் புரியவில்லை. பகவான்தான் உனக்கு நல்ல புத்தியைத் தரவேண்டும்" என்று கூறிப் பெருமூச் செறிந்தாள் சாந்தியின் பாட்டி.

இவ்வளவுக்கும் கிருஷ்ணசாமியின் மனைவி ஒரு வார்த்தையும் பேசவில்லை.

* * *

சாந்தி அந்தக் குடும்பத்தின் ஒரே செல்லப் பெண். அதீத அழகுடன் பிறந்து விட்டாள். அவள் பிறந்த வேளை கிருஷ்ணசாமிக்கு நல்ல கிராக்கி ஏற்பட்டது. பல படங்களுக்கு அவர் வசனம் எழுதி வந்தார். சிறிது சிறிதாக அவர்களின் செல்வ நிலை உயர்ந்து வந்தது.

சொந்த வீடு கட்டி, அதை அலங்கரித்தனர். சாந்தியும் மேன் மேலும் அழகுடன் வளர்ந்தாள். அவளுடைய பாட்டிக்குச் சபலம் தட்டியது. அருமைப் பேத்தியும் ஊரிலுள்ள மற்ற பெண்களைப் போல் நாட்டியம் கற்றுக் கொண்டு பேர் எடுக்கவேண்டும் என்று ஆசைப்பட்டாள். சாந்தியின் தாயார் என்னமோ அதை முழு மனதுடன் ஒப்புக் கொள்ளவில்லை.

கடைசியில் பாட்டியின் விருப்பப்படி ஒரு நாட்டிய வாத்தியார் அமர்த்தப் பட்டார். அவர் வீட்டுக்கு வந்து நாட்டியம் சொல்லிக் கொடுத்து வந்தார்.

இரண்டு வருஷங்கள் ஓடிவிட்டன. தனது பன்னிரண்டாவது வயதில்

சாந்தி அரங்கேறினாள். அரங்கேற்றத்து அன்றே நல்ல பெயரும் எடுத்து விட்டாள் சாந்தி.

பிறகு பல சபைகளிலிருந்து நாட்டிய மாட அழைப்புகள் வந்தன அவளுக்கு. சென்னையிலுள்ள எல்லா முக்கிய சபாக்களிலும் நாட்டியக் கச்சேரிகள் செய்தாள். புகழ் பரவிற்று. வெளியூர்களிலிருந்தும் அழைப்புகள் வரத் தொடங்கின. ஆனால் கிருஷ்ணசாமி அவற்றுக்குச் சம்மதிக்கவில்லை.

சாந்தி ஒரு பக்கம் நாட்டியம் பயின்று கொண்டு, மற்றொரு பக்கம் பள்ளியிலும் படித்து வந்தாள். வெளியூர்களுக்குச் சென்றால் அவள் படிபபுக் கெடும் என்றுதான் வெளியூர் அழைப்புகளை மறுத்து விட்டார் தந்தை. சாந்தியும் அப்பாவின் விருப்பப்படி நடந்து கொண்டாள். கலையும், கல்வியும சேர்ந்தாற்போல் அபிவிருத்தி அடைந்துவந்தன. சாந்தி எஸ். எஸ். எல். ஸி. பரீக்ஷையில் தேறிவிட்டுக் கல்லூரியில் சேர்ந்திருந்தாள்.

* * *

அன்று பட முதலாளி முருகேச முதலியார் அவர்களுடைய வீட்டிற்கு வந்திருந்தார். அவர் அச்சமயம் எடுப்பதாகத் திட்டமிட்டிருந்த படத்திற்குக் கிருஷ்ணசாமிதான் வசனம் எழுதியிருந்தார்.

முதலியார் வந்திருந்த போது கிருஷ்ணசாமி வீட்டில் இல்லை. எனினும் சாந்தி அவரை வரவேற்று ஹாலில் உட்கார வைத்தாள். "கொஞ்ச நேரத்தில் அப்பா வந்துவிடுவார்" என்றும் கூறினாள்.

பிறகு உள்ளே சென்று அவருக்குக் காப்பி கொண்டு வந்தாள். அதற்குள் முதலியார் மனதில் ஒரு எண்ணம் உருவாகி விட்டது.

காப்பியைக் கொண்டு வந்து வைத்த சாந்தியை நோக்கி, "அம்மா குழந்தை, நான் ஒன்று கேட்கிறேன். கோபித்துக் கொள்ளமாட்டாயே" என்று கேட்டார் அவர். முதலியாருக்குச் சுமார் ஐம்பத்தைந்து வயதிருக்கும். எப்பொழுதும் சாந்தியை அவர் 'குழந்தை' என்று தான் கூப்பிடுவார்.

சாந்தி கலகல வென்று நகைத்து

கூந்தல் பெருகினால்
விதவிதக் கொண்டைகளை
ஜோடிப்பது வெகு எளிதே!

கேசவர்த்தினி

கொண்டு கூந்தலைப் பெருக்கிக் கொள்ளுங்கள். இனி பொடுகைத் தலையில் சுமப்பானேன்? தலை அரிப்பை நிறுத்துங்கள். இள நரையைத் தடுங்கள். நரையையும் தள்ளி வையுங்கள்.

மறைந்துள்ள கூந்தலழகைக் **கேசவர்த்தினி** கொண்டு எடுத்துக் காட்டுங்கள்.

ஷாம்புவினால் கூந்தலை சுத்தமாகவும், ஸுகந்தமாகவும் ஆக்குங்கள்

கேசவர்த்தினி அணா 14: ஷாம்பு அணா 14: தபால் செலவு வேறு. எங்கும் கிடைக்கும்.

கேசவர்த்தினி ப்ராடக்ட்ஸ்
கோயமுத்தூர்.

விட்டு, "நான் ஏன் கோபிக்கிறேன். விஷயத்தைச் சொல்லுங்கள்" என்றாள்.

"நாங்கள் எடுக்கப்போகும் அடுத்த படத்தில் உனக்கு ஒரு வேஷம் தருகிறேன். நாட்டியமாடும் பாத்திரம்! அதில் நடிக்க உனக்குச் சம்மதமா?" என்று கேட்டார்.

சாந்திக்கு சினிமாவில் நடிக்கவேண்டும் என்ற ஆசை பல நாட்களாகவே உண்டு. ஆயினும் அவளுடைய தந்தை அதற்கான பேச்சையே எடுக்காதிருந்த போது, அவளாலும் அதைப் பற்றிப் பேச இயலவில்லை. இப்பொழுது முதலியார் ஒரு 'சான்ஸ்' தருவதாகச் சொன்னதும், அவளுக்கு அதை நழுவ விட இஷ்டமில்லை.

உடனே, "அதற்கென்ன? நான் தயார். அப்பாவிடம் சொல்லுங்கள். ஆனால் என் படிப்பு மட்டும் இதனால் கெடக் கூடாது" என்றாள்.

"அதை நான் பார்த்துக் கொள்ளுகிறேன்" என்றார் முதலியார். அதற்குள் கிருஷ்ணசாமி வந்து விட்டார். முதலியாருக்கு ஒரு கும்பிடு போட்டு விட்டு, "என்ன சுவாரஸ்யமாகப் பேசிக்கொண்டிருக்கிறீர்கள்?" என்று சிரித்தவாறு கேட்டார்.

முதலியார், "நம்ம குழந்தையையும் நம்முடைய அடுத்த படத்தில் நடிக்க ஏற்பாடு செய்து விட்டேன். ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போடவேண்டியதுதான் பாக்கி" என்றார்.

கிருஷ்ணசாமி திடுக்கிட்டுப் போனார். உடனே சமாளித்துக் கொண்டு, "முதலியார்! நான் சொல்கிறேனே என்று வருத்தப்படக் கூடாது. சாந்தி சினிமாவில் நடிப்பது என்பது நடக்காது. அதில் எனக்கு இஷ்டமில்லை" என்றார்.

முதலியார் பதில் சொல்லுமுன் சாந்தி குறுக்கிட்டாள். "அப்பா! ஒரே ஒரு படம் தானே. என் படிப்புக் கெடாத வகையில படம் பிடிக்க ஏற்பாடு செய்கிறாராம்" என்று கூறினாள். கிருஷ்ணசாமிக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை.

முதலியாரும் சமயத்தைக் கைவிடாமல், "என்ன ஸார்! குழந்தையும் ஆசைப்படுது. ஒரு படத்துக்கு மட்டும் அனுமதி தாருங்கள். அகில இந்தியப் புகழ் கிடைக்கிறதா, இல்லையா என்று பாருங்கள்" என்றார்.

கிருஷ்ணசாமி ஒன்றும் பதில் கூறவில்லை. அதற்குள் முதலியார், "எனக்கு நேரமாகிறது. பிறகு வருகிறேன்" என்று விடைபெற்றுக் கொண்டார்.

அன்றிரவு அந்த வீட்டில் நடந்த விவாதத்தைத்தான் ஆரம்பத்தில் பார்த்தோம்.

* * *

முதலியார் தாம் சொன்ன சொல் தவறவில்லை. சாந்தியின் சௌகரியத்துக்காக, அவளுடைய கல்லூரிப் படிப்புக்குக் குந்தகம் விளையாமலிருக்க, அவள் தோன்றும் கட்டங்களை இரவு நேரங்களிலோ, ஞாயிற்றுக் கிழமைகளிலோ படமாக்கி வந்தார். மற்ற நாட்களில் கல்லூரிக்குச் சென்றவாறு, விடுமுறை நாட்களில் ஸ்டுடியோவுக்குச் செல்வது சாந்திக்கு முதலில் சௌகரியமாய் இருந்தது.

நாளாக ஆக, அவளுக்கு அதிலிருந்த சிரமம் தெரியத் தொடங்கியது. ஓய்வு என்பது இல்லாமல் கல்லூரிக்கும் போய்க்கொண்டு, ஸ்டுடியோவிலும் வேலை செய்வது சிரமமாக இருந்தது. புகழ் சும்மாக் கிடைக்குமா?

சாந்தி சினிமாவில் நடித்து வருவது கல்லூரி மாணவர், மாணவிகளுக்குத் தெரிந்துபோனது அவளுக்கு மேலும் சங்கடத்தை உண்டாக்கிற்று. அவளைக் கண்ட மாணவர்கள் 'குசு குசு'வென்று பேசத் தொடங்கினார்கள். 'சினிமா ராணி' என்றும் கேலியாக அழைக்கத் தொடங்கினர். சக மாணவிகளோ தங்களைப் படப் பிடிப்புக்கு அழைத்துப் போகுமாறு தொந்தரவு செய்தனர். சில ஏழை மாணவிகள் தங்களுக்கும் ஏதாவது சின்ன வேஷம் வாங்கித் தருமாறு கேட்டுக்கொண்டனர்.

வகுப்பில் ஓரிரு ஆசிரியர்கள் கூட சாந்தியின் சினிமா நடிப்பைப்பற்றி விசாரித்தது அவளுடைய நிலைமையை மோசமாக்கிற்று. அவளுடைய படங்கள் பத்திரிகைகளில் வரத் தொடங்கிய பின் அவள் பாடு மேலும் திண்டாட்டமாகிவிட்டது.

தன் தந்தை கூறியவை அவள் நினைவுக்கு வந்தன. என்றாலும் முன் வைத்த

காலேப் பின் வைப்பது எப்படி? பாதியில் நடிப்பதை விட்டால் கல்லூரியில் கேலிப் பேச்சு அதிகரிக்க அல்லவா செய்யும்? கல்லூரியில் மட்டுமல்லாது வேற்றிடங்களிலும் அவளைப் பற்றிப் பேச மாட்டார்களா?

ஆகவே, கல்லூரிக்குப் போவதை நிறுத்த முடிவு செய்தாள். 'படம் முடியும்வரை கல்லூரிக்குப் போகக்கூடாது. இந்த ஒரு படத்தை எப்படியாவது முடித்துவிட்டு, பிறகு தன் படிப்பை முழு மூச்சுடன் தொடர நிச்சயித்தாள்.

கிருஷ்ணசாமியும் இந்த ஏற்பாட்டுக்கு ஒப்புக்கொண்டார். நாட்கள் ஓடின.

* * *

அன்று சாந்தியின் மனம் மிகவும் புண்பட்டிருந்தது. ஒன்றும் செய்யத் தோன்றாமல் மாடி வராந்தாவில் உலாவிக் கொண்டிருந்தாள். அவளுடைய கண்களின் ஓரங்களில் நீர்த்துளிகள் தேங்கி இருந்தன.

அப்பொழுது கிருஷ்ணசாமி, "சாந்தி!" என்று கூப்பிட்டுக் கொண்டே மாடிப் படிகள் ஏறி அவள் இருக்குமிடம் வந்தார். மகள் தனியே இருப்பதையும், அவள் முகம் வாடியிருப்பதையும் கண்டு திடுக்கிட்டார்.

"ஏனம்மா, என்ன நடந்தது? ஏன் இங்கே தனியாக உலாவிக் கொண்டிருக்கிறாய்?" என்று பரபரப்புடன் கேட்டார் அவர்.

சாந்தி பதில் ஒன்றும் கூறவில்லை. "அப்பா!" என்று அலறிக் கொண்டே அவரை அணைத்துக் கொண்டாள். அவள் தலைமயிரைக் கோதியபடியே, "விஷயத்தைச் சொல்லம்மா. ஏன் அழுகிறாய்?" என்று பரிவுடன் கேட்டார் தந்தை.

மகள் விசித்துக் கொண்டே, "நீங்கள் முதலில் சொன்னதைக் கேட்காமல் போனேனே என்று வருத்தமாயிருக்கிறது அப்பா. எல்லோரும் என்னைப் பற்றி என்ன வெல்லாமோ பேசுகிறார்கள். காது கொடுத்துக் கேட்க முடியவில்லை. அதை நினைத்து வருந்திக் கொண்டிருக்கிறேன் அப்பா" என்றாள்.

மாதவிடாய் நின்றுபோனதா?

நிகரற்ற மருந்து (தேவி பில்ஸ்) Regd. by the Central Drugs Laboratory of Govt. of India, Under No. CDL/688

எக்காரணத்தினாலும் எத்தனை மாதமானாலும் நின்றுபோன மாதவிடாய் அதிசுலபமாகவும் அதிசீக்கிரமாகவும் தவறாமல் உடனே வெளியாகும். அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம் உத்திரவாதமுள்ளது. போலி மருந்துகளை வாங்கி ஏமாறுதீர்கள். சாதாரண கேஸ்களுக்கு (Ordinary) விலை ரூ. 6-8-0 மாறங்களான கேஸ்களுக்கு (Special) ரூ. 10-8-0 (தபால் செலவு தனி)

கர்ப்பத்தடை

நிகரற்ற மருந்து (ஸ்பெக் பில்ஸ்)
Government Registered No. 266.

12 நாட்கள் சாப்பிட்டால் 6 வருஷத்திற்கு சாஸ்வதமாக கருவைத்தடுக்கும். மாதவிடாய் தவறாது. அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம். போலி மருந்துகளை வாங்கி ஏமாறாதீர்கள். பில்ஸ் விலை. ரூ. 12-0-0 (தபால் செலவு தனி)

Mlors: SEENU & CO., Post Box, 1638, ( ) MADRAS-1.
பிராஞ்ச்: 134. SERANGOON ROAD. சிங்கப்பூர்.
சிலோன் ஏஜண்ட்: NEW COLOMBO MEDICAL STORES. 82. MAIN ST., கொழும்பு-11.

அசோகா பிக்சர்ஸ் தயாரித்து வரும் ''என் மகள்'' தமிழ்ப் படத்தில் நடிக்கும் டி. பாலசுப்ரமண்யமும், ஆர். ரஞ்சனும்.

'யார், என்ன பேசுகிறார்கள்' என்று கிருஷ்ணசாமி மகளைக் கேட்கவில்லை. அவருக்குத் தெரியாதா, ஜனங்கள் சினிமா நக்ஷத்திரங்களைப்பற்றிப் பேசும் பேச்சு?

''அதைப்பற்றி நீ வருத்தப்படாதே, சாந்தி. நாலு பேர் பொறுப்பில்லாமல் ஏதேதோ பேசத்தான் பேசுவார்கள். பல புரளிகள் கிளம்பிக் கொண்டுதானிருக்கும். அதையெல்லாம் பொருட்படுத்தினால் நீ விரும்பிய புகழ் கிடைக்குமா? புகழ் வேண்டுமானால் இந்தப் புரளிக்கும் ஆளாகத்தான் வேண்டும்'' என்றார் அழுத்தமாக.

''முன்பெல்லாம் நிச்சிந்தையாகக் கல்லூரிக்குப் போய்க் கொண்டிருந்தேனே. இப்பொழுது வெளியே தலை காட்டவே முடியவில்லையே, அப்பா. என் தலை தெரிந்தால் ஜனங்கள் கூடி விடுகிறார்களே, நான் இனிமேல் எப்படிக் கல்லூரிக்குப் போய், படிக்கப் போகிறேனோ, தெரியவில்லை'' என்று நடுங்கும் குரலில் கூறினாள்.

கிருஷ்ணசாமி வரண்ட ஒரு சிரிப்புச் சிரித்தார். ''ஹூம்! நீ அந்த ஆசையை இன்னும் வைத்திருக்கிறாயா? அப்படியானால் விட்டுவிடு. இல்லாவிட்டால் நாம் இந்த ஊரைவிட்டு, இந்த ராஜ்யத்தை விட்டே, புரளி நம்மைப் பின் தொடர்ந்து வர முடியாத இடத்திற்குப் போய் விட வேண்டும். அப்பொழுது தான் நீ படிக்கலாம். குடும்பப் பெண்ணாக நீ வாழலாம். இங்கேயே இருந்தால் உன்னைச் சமூகம் ஒரு குடும்பப் பெண்ணாக ஒப்புக் கொள்ளாது. தமிழ் நாட்டு சினிமா நக்ஷத்திரங்களின் ஜாதக விசேஷம் அப்படிப்பட்டது'' என்று கூறி முடித்தார்.

சாந்தி அவருக்கு ஒரு பதிலும் கூறவில்லை. அவருடைய மடியில் தன் முகத்தைப் புதைத்துக் கொண்டு வெகு நேரம் விசித்துக் கொண்டிருந்தாள்.

* * *

காலம் நல்ல 'டெம்போ'வுடன் சென்றது. சாந்தி பிறகு என்ன செய்தாள் என்று கேட்கிறீர்களா?

அவள் நடித்த முதல் படமே அவளைப் புகழேணியின் உச்சாணியில் ஏற்றி வைத்தது. தமிழ், தெலுங்கு, கன்னடம், ஹிந்தி ஆகிய நாலு பாஷைகளில் அப்படம் எடுக்கப் பட்டிருக்கவே, சாந்தியின் பெயர் இந்தியாவெங்கும் 'அடிபட்டது'. அவள் வீட்டு வாசலில் 'அட்வான்ஸ்' பணத்துடன் பல படத் தயாரிப்பாளர்கள் தவம் கிடந்தனர்.

வந்த சந்தர்ப்பங்களை நழுவ விட்டு, கண் காணா இடத்துக்கு ஓட அவளுக்குப் பைத்தியமா என்ன? எல்லா ஒப்பந்தங்களிலும் கையெழுத்திட்டாள். அதே மூச்சில் கல்வி, விவாகம், ஒழுங்கான குடும்ப வாழ்க்கை முதலியவற்றுக்கும் ஒரு முழுக்குப் போட்டு விட்டாள்.

இன்று சினிமா உலகில் பிரபல நாட்டிய நட்சத்திரமாகப் பிரகாசிக்கும் 'சித்திராங்கி' வேறு யாருமல்ல; சாக்ஷாத் சாந்தியின் சினிமாப் பெயர்தான் அது!

என். டி. ராமராவ்



அசோகா பிக்சர்ஸின் "என் மகள்" தமிழ்ப் படத்தில் எஸ். வரலக்ஷ்மி.

இது செய்தி

"மாங்கல்யம்" 50-வது நாள்

எம். ஏ. வி. பிக்சர்ஸாரின் "மாங்கல்யம்" 50-வது தினக் கொண்டாட்டம் சென்ற மாதம் 6-ந் தேதி மாலை சித்ரா டாக்கீஸில் நடைபெற்றது. கதை, வசனம் எழுதி கதாநாயகனை நடித்துள்ள நாகராஜன், ஏழுமலை, கருணாநிதி ஆகியோர் மேடை மீது தோன்றினர். படத்தின் விநியோகஸ்தர்களான ராஜா பிலிம்ஸ், பாரத் ஸ்டுடியோ நமசிவாயம், மேற்படி நடிகர்கள் ஆகியோருக்குப் பரிசுகள் வழங்கப் பட்டன. ஏழுமலையும், கருணாநிதியும். 'கூஜா' பாட்டுப் பாடி மேடையில் நடித்தனர். வைபவத்திற்கு நாரதர் ஆசிரியர் ஸ்ரீநிவாஸராவ் தலைமை வகித்தார்.

ஆண்களே இல்லாத படம்

ஆண்களே இல்லாத படம், பார்ப்பதற்கு சுவாரஸ்யமாயிருக்குமா, இராதா என்ற உண்மையை ஆர். கே. பிலிம்ஸாரின் "ராட் பாலி" என்ற ஹிந்திப் படம் வந்தவுடன் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம். இந்தப் படத்தில் ஆண் வாடையே கிடையாதாம்! நர்கிஸ் முக்கிய பாத்திரமாக நடிக்கிறார். பேபி நாஸூம் அவருடன் நடிக்கிறார். ராஜ்கபூர் தயாரிக்கும் படமாகும் இது.

"மலைக் கள்ளன்"—வெற்றி

பக்ஷிராஜாவின் "மலைக் கள்ளன்" தமிழ்ப் படமும், "அக்கி ராமுடு" தெலுங்குப் படமும் முறையே தமிழ் நாட்டிலும் ஆந்திராவிலும் அமோகமான ஆதரவு பெற்று வருகிறது. இப் படத் தயாரிப்பாளர் ஸ்ரீராமுலு நாயுடு, இதே கதையை ஹிந்தியிலும், சிங்களத்திலும் தயாரிக்கத் திட்டமிட்டு வேலை தொடங்கி விட்டாராம். மேற்படி படங்களில் வடநாட்டு, சிங்கள தேசத்து நக்ஷத்திரங்கள் பலர் நடிப்பார்களாம்.

புதிய ஸ்டுடியோ

மைசூரில் சென்ற மாதம் புதிதாக ஒரு ஸ்டுடியோ ஆரம்பமாகியுள்ளது. பிரீமியர் ஸ்டுடியோஸ் என்ற இந்த ஸ்டுடியோவை, மைசூர் அரசாங்க முதல் மந்திரி, கே. ஹனுமந்தய்யா சென்ற மாதம் 6-ம் தேதி ஆரம்பித்து வைத்தார். டைரெக்டர் கே. சுப்ரமண்யம் இந்த ஸ்டுடியோவின் வளர்ச்சியில் அக்கறை காட்டுவாரென்று தெரிகிறது. இவர்கள் முதலில் தயாரிக்கப் போவது ஒரு கன்னடப் படம். அதை கே. சுப்ரமண்யம் டைரெக்டர் செய்வாரென்றும், வித்யாவும், சந்தியாவும், அதில் நடிப்பார்களென்றும் தெரிகிறது.

பிலிம் லைப்ரரி

கல்கத்தாவில், பிலிம் லைப்ரரி ஒன்றை, இந்திய சர்க்கார் வைக்கத் திட்டமிட்டிருப்பதாகத் தெரிகிறது. இதுபோன்ற லைப்ரரி வைப்பது இதுவே முதல் தடவையாகும். இந்த லைப்ரரி 1956-57ல் இயங்க ஆரம்பிக்கும். இந்த லைப்ரரியில் எல்லா வகைப் படங்களும் கிடைக்கும். சுமார் 930 வர்ணப் படங்கள், 2,000 செய்திப் படங்கள் வைக்கப்படும்!

கட்டணக் குறைப்பு

சென்னை வெலிங்டன் தியேட்டரில் சென்ற மாதம் 15-ம் தேதி முதல், முதல் இரண்டு வகுப்புகளுக்கு டிக்கட் கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளன. இதுவரை இரண்டரை ரூபாயாக இருந்து வந்த முதல் வகுப்பு ரூ. 1-14-0 ஆகவும். ரூ. 1-14-0 வகுப்பு இனி ரூ. 1-9-0 ஆகவும் குறைக்கப்பட்டன. மக்களின் பொருளாதாரக் கஷ்டம் காரணமாக இவ்வாறு குறைத்துள்ளதாக தியேட்டர் நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.

"இம்பா" முடிவு

இந்திய சினிமா படப் பாட்டுகளை ஒலிபரப்புவது சம்பந்தமாக இந்திய சலனப் படத் தயாரிப்பாளர் சங்கத்துக்கும் (இம்பா) கோவா ரேடியோவுக்கு மிடையே இருந்து வந்த ஒப்பந்தத்தை சங்கம் ரத்து செய்துள்ளது. தனிப்பட்ட முறையில் கோவா ரேடியோவுடன் ஒப்பந்தங்கள் செய்து கொண்டுள்ள தன் அங்கத்தினர்களையும் ஒப்பந்தங்களை ரத்து செய்யுமாறு சங்கம் கேட்டுள்ளது. இலங்கை ரேடியோவுக்கும் சங்கத்துக்கு மிடையே தற்போதுள்ள ஒப்பந்த ஷரத்துகள் குறித்தும் சங்கம் அதிருப்தி அடைந்துள்ளதால் அதை ரத்து செய்யப் போவதாக

வும் 6 மாத நோட்டீஸ் கொடுத்துள்ளது. கோவா விடுதலை இயக்கத்தை ஆதரித்தே சங்கம் தன் ஒப்பந்தத்தை ரத்து செய்துவிட்டதாக பிலிம் வட்டாரங்களில் கூறுகின்றனர்.

நடிகை காலமானர்

சினிமா உலகின் பழைய நடிகையான நளினி தர்கட் சென்ற மாதம் 7-ம் தேதி பம்பாயில் காலமானர். அவருக்கு வயது 48. புற்று நோயால் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார். அவர் கதாசிரியரும்கூட. படத் தயாரிப்பாளரும், டைரெக்டருமான கேசவ் ராவ் தப்பாரின் மனைவி. குடும்பப் பெண்ணை அவர் முதன் முதலில் துணிந்து சினிமாவில் நடித்த பெருமைக்கும் பாத்திரமானவர். "வஸந்தசேனை" என்ற பேசாப் படத்தில் 1926-ல் அவர் நடித்துப் புகழ் பெற்றார். அவர் நடித்த முதல் பேசும் படம் "பார்வதி கங்கா." "அமிர்த மந்தன்" "சந்திரசேனு" "ரஜ்புத்ர ரமணி" என்ற பேசும் படங்கள் அவர் நடித்தவற்றில் பிரபலமானவை. அவர் ஸீனியர் கேம்பிரிட்ஜ் தேறியவர். ஆங்கிலத்தில் நல்ல எழுத்தாளர். பல நாவல்கள் எழுதியுள்ளார். அவர் எழுதிய "தீன்ரத்தேன்" என்ற கதையை அவரது கணவர் டைரெக்டர் கேசவ ராவ் தற்போது படமெடுத்து வருகிருர்.

படங்களில் நடிக்க

புது முகங்கள் தேவை

திறமையுள்ள ஆண், பெண்கள் நடிகர்களாகச் சேரலாம்.

உங்கள் திறமையை வெளிப்படுத்துங்கள்.

உங்களுக்கு ஒரு அரிய சந்தர்ப்பம்.

உங்களுக்கு நல்ல எதிர்காலம் காத்திருக்கிறது

பின்னணிப் பாடகர் பாடகிகளும் தேவை.

சமீபத்தில் எடுத்த போட்டோவுடன் விண்ணப்பிக்கவும் :

SURENDER FILM SERVICE,
127, Abdul Rehman Street,
BOMBAY-3. *Phone :* **27774.**

சினிமா வாரம்

வருகிற நவம்பர் மாதம் 7-ம் தேதி முதல் 13-ம் தேதி முடிய பம்பாயில் சினிமா வாரம் ஒன்று கொண்டாட ஏற்பாடாகியுள்ளது. இதற்கென ஏற்படுத்தியுள்ள கமிட்டியில் டைரெக்டர் வி. சாந்தாராம் முக்கிய பொறுப்பு வகிக்கிருர். ஒரு பொருட்காட்சி மூலம், இத் தொழில் என்ன சாதித்திருக்கிறது என்பதைப் பொது மக்கள் அறிய வழி செய்யப் போகிருர்கள். முதல் நாள் நன்ருக அலங்கரிக்கப்பட்ட கார்களில் பிரபல நக்ஷத்திரங்கள் ஊர்வலம் வருவார்களாம். மாணவர், மாணவிகள் ஸ்டுடியோக்களைச் சுற்றிப் பார்க்க வசதி செய்யப் போகிருர்கள். ஒருநாள் இத்தொழில் பற்றிப் பல பிரசங்கங்கள் நடைபெறும். தொழிலில் சம்பந்தப்பட்டவர்களின் மகாநாடு ஒருநாள் நடைபெறும். கடைசி தினம் கதம்ப நிகழ்ச்சி ஒன்றும் ஏற்பாடாகியுள்ளது.

ரங்கோன்—ராதா

மேகலா பிக்சர்ஸார் அடுத்தபடி "ரங்கோன் ராதா" என்ற படத்தைத் தயாரிக்கப் போவதாக அறிவித்துள்ளனர். இப்படத்தின் கதையை ஸி. என். அண்ணுத்துரையும், வசனத்தை மு. கருணுநிதியும் எழுதியுள்ளனர்.

ஓய்வு பெறுகின்றனர்

லலிதா-பத்மினி-ராகினி சகோதரியர் இனிமேல் புதிதாக எந்தப் படத்திலும் நடிக்கமாட்டார்களாம். இதுவரை ஒப்பந்தமாகியுள்ள படங்களில் நடித்து முடித்தவுடன் அவர்கள் ஓய்வு எடுத்துக் கொள்ளப் போகிருர்களாம். நடனக் கச்சேரிகளுக்குக் கூட போகப் போவதில்லையாம். இப்படியாக அவர்களே ஒரு அறிவிப்பு வெளியிட்டிருக்கிருர்கள்.

இந்தியா—ஜாப் கூட்டுத் தயாரிப்பு

இந்தியா, ஜப்பான் கூட்டு படத் தயாரிப்பு ஏற்பாட்டின்படி, முதலில் தயாரிக்கப்பட இருக்கும் "கேவா

அசோகா பிக்சர்ஸார் தயாரிக்
கும் " என் மகள் " தமிழ்ப்
படத்தில் நடிக்கும் மைனாவதி

கலர்'' படம் சம்பந்தமான விவரங்களைத் தீர்மானிப்பதற்காக பம்பாய் படத் தயாரிப்பாளர் ஏ. ஜே. பட்டேலின் காமிராமேன் சி. எம். மார்க்கோனி சமீபத்தில் ஜப்பானுக்கு விஜயம் செய்தார். கதையை சரித்திர நிபுணர்களும், அறிஞர்களும் கொண்ட ஒரு கமிட்டி தேர்ந்தெடுக்கும் என்றும், "டோய்" என்ற ஜாப் ஸ்தாபனம் செலவில் 70 சத விகிதத்தையும் ஏற்றுக்கொள்ளும் என்றும் சென்ற மாதம் பம்பாய் திரும்பிய மார்க்கோனி கூறியிருக்கிறார்.

சென்ற மாத வெளியீடுகள்

சென்ற மாதம் நான்கு தமிழ்ப் படங்கள தமிழ் நாட்டில் திரையிடப்பட்டுள்ளன. 5-ம் தேதி அன்று "கனவு" திரையிடப்பட்டது. 14-ம் தேதி அன்று அவ்வை புரொடக்ஷன்ஸின் "ரத்த பாசம்" திரையிடப்பட்டது. டி. கே. எஸ். சகோதரர்களால் நாடகமாக நடிக்கப்பட்டு வரும் கதை இது. படத்தில் டி. கே. ஷண்முகம், டி. கே. பகவதி, டி. எஸ். பாலய்யா, அஞ்சலிதேவி, வித்யாவதி, எம். எஸ். திரௌபதி ஆகியோர் நடித்திருக்கின்றனர். 26-ம் தேதி அருணாவின் "தூக்கு தூக்கி" திரையிடப்பட்டுள்ளது. லலிதா-பத்மினி-ராகினி, பாலய்யா, சிவாஜி கணேசன், முக்கிய பாத்திரங்களில் நடித்துள்ள படம் இது. 26-ம் தேதி முதல், ஆர். ஆர். பிக்சர்ஸின் "கூண்டுக்கிளி"யும் திரையிடப்பட்டுள்ளது. சிவாஜி கணேசன், எம். ஜி. ராமச்சந்திரன், கே. சாரங்கபாணி, பி. எஸ். சரோஜா, குசலகுமாரி முதலியோர் பிரதம பாகங்களில் நடித்துள்ள இப்படத்தை ராமண்ணா டைரெக்ட் செய்திருக்கிறார்.

'நிராசை'

மாம்பலம் தியாகப்ரும்ம கான ஸபை அமெச்சூர் நடிகர்கள் சேர்ந்து வாணீ மஹாலில், ஆனந்தவிகடன் எஸ். வி. சௌந்தரராஜன் எழுதிய 'நிராசை' என்ற நாடகத்தை "கல்கி" தலைமையில் சென்ற மாதம் 22-ம் தேதி திறம்பட நடித்தார்கள். நாடகம் முழுதும் அடுக்குச் சொற்களும் ஹாஸ்யச் சம்பாஷணைகளும் நிறைந்திருந்தன. கதைக் கட்டுக்கோப்புடன் நன்றாய் இருந்தது. ஹாஸ்ய நடிகராக வந்த மாலியும், வேலைக்காரராக வந்த முனியனும் தமாஷாகப் பேசி ஸபையோரை மகிழ்வித்தார்கள். பெண்கள் மனது வைத்தால் நடக்காத காரியம் ஒன்றில்லை என்பதை விளக்கி, துர்க்காவாக நடித்த தஞ்சை சகோதரிகளில் இளையவரான ப்ரஹதா, பாத்திரத்தின் குணம் அறிந்து முகபாவத்தை தகுந்தபடி மாற்றி நடித்தது விசேஷமாய் இருந்தது. மச்சினராக நடித்த எஸ். வி. ஜகந்நாதன், அடுக்கு மொழிகளை அள்ளி வீசி அநாயாசமாய் நடித்தார். ஹேமா வேஷம் போட்டவருக்கு நல்ல வேஷப் பொருத்தமும், சோகக் கட்டங்களில் மனமுருகும்படி நடிக்கும் திறமையும் இருக்கின்றன. இந்த நாடகத்திற்கு ராஜாஜி வந்து கடைசி வரை இருந்து நாடகத்தை ரஸித்தார்.

உதவினார்கள்

சென்ற மாதம் 8-ம் தேதி, சென்னை செயிண்ட் மேரிஸ் ஹாலில், ராதா ராணி கோஷ்டியாரின் ஒரியண்டல் நடனக் கச்சேரி நடைபெற்றது. அன்று வசூலான தொகை மயிலையில் நடைபெற்று வரும் ஸாயி இலவச மருத்துவ விடுதிக்கு அளிக்கப்பட்டது.

ஆண்டு விழா

சென்னை, கார்ப்பரேஷன் ஊழியர்கள் சங்கம், வாசகசாலை இவைகளின் பதிமூன்றாவது ஆண்டு விழா, சென்ற மாதம் 7-ம் தேதி நடைபெற்றது. முன்னாள் மேயர் எம். ராதாகிருஷ்ணபிள்ளை தலைமை வகித்த இந்த விழாவில் மேயர் ஆர். முனுசாமி அவர்கள் கலந்து கொண்டார்.

பரிசளிப்பு விழா

சென்னையில், லோடஸ் போட்டியை நடத்தி வருகிறவர்கள், தங்களது பொன் விழாவை சென்ற மாதம் 15-ம் தேதி கொண்டாடினார்கள். இந்த விழா சிறப்பாக அமைக்கப்பட்ட ஒரு பந்தலில் நடைபெற்றது. வி. எல். எதிராஜ் தலைமையில் இக்கொண்டாட்டம் வெகு கோலாகலமாக நடைபெற்றது.

பத்திரிகைக் காட்சிகள்

அவ்வை புரொடக்ஷன்ஸின் "ரத்த பாசம்" தமிழ்ப் படத்தின் பத்திரிகைக் காட்சி சென்ற மாதம் 13-ம் தேதி, சென்னை சித்ரா டாக்கீஸில் நடைபெற்

தமிழ்நாடெங்கும் வெற்றிகரமாய் ஓடிக்
கொண்டிருக்கும் "மலைக்கள்ளன்"
தமிழ்ப் படத்தில் பானுமதி நடிக்கிறார்.

றது. இப்படம் சென்ற மாதம் 14-ம் தேதி முதல் தமிழ் நாட்டில் திரையிடப்பட்டுள்ளது.

சென்ற மாதம் 23-ம் தேதி சென்னை வெல்லிங்டன் தியேட்டரில் அருணை பில்ம்ஸாரின் "தூக்குத் தூக்கி" தமிழ்ப் படத்தின் பத்திரிகைக் காட்சி நடைபெற்றது. இப்படம் சென்ற மாதம் 26-ம் தேதி முதல் தமிழ் நாடெங்கும் திரையிடப்பட்டுள்ளது.

ஸோவியத்தில் இந்திய சினிமா விழா

அடுத்த சில வாரங்களில் சோவியத் ரஷ்யாவின் முக்கிய நகரங்களில் இந்திய சினிமா விழா ஆரம்பமாக இருக்கிறது. முதல் தடவையாக ஒரு வெளி நாட்டில் இந்தியப் பட விழா நடைபெறுவது இதுவே முதல் தடவை. மாஸ்கோ உள்பட 19 ரஷ்ய நகரங்களில் 4 வார காலத்துக்கு விழா நடைபெறும். "அவாரா" "அந்தியான்" "பைஜுபாவரா" "தோ-பிகா-ஜமீன்" "ராஹி" ஆகிய கதைப் படங்களும், "கூட்டுறவுப்பண்ணை," "மணிப்புரி டமாரங்கள்" "அஸ்ஸாமின் சில காட்சிகள்", "தொழில் வளமை" (இரு பிரிவுகள்) "ராஜஸ்தான்" (இரு பிரிவுகள், ஆகிய 7 வர்ணனைப் படங்களும் தேர்ந்தெடுக்கப்பட்டு ரஷ்ய மொழிகளில் "டப்" செய்யப்பட்டுள்ளன. விழாவின்போது இந்திய சினிமாப் பிரமுகர்கள் கோஷ்டி ஒன்றும் ரஷ்யா செல்லும். ரஷ்ய சர்க்காரின் கலாசார இலாகா, இந்திய கோஷ்டியை அழைத்துள்ளது. கோஷ்டியில் செல்லுவோரை இந்திய சர்க்கார் தீர்மானிக்கும். கீழ்க்காணபோர் செல்லக்கூடுமென்றுபலத்த பேச்சு அடிபடுகிறது. நர்கிஸ், நளினி ஜயவந்த், ராஜகபூர், நவுஷத்அலி, விஜய் பட், பிமல்ராம், பால்ராஜ் ஸஹானி, கே. அப்பாஸ், தேவ் ஆனந்த், சேட்டன் ஆனந்த். ரஷ்யாவிலுள்ள ஸ்டுடியோக்களுக்கும், படத் தொழில் சம்பந்தமான ஸ்தாபனங்களுக்கும் இந்திய சினிமா கோஷ்டி விஜயம் செய்யும். விழாவில் திரையிடப்பட இருக்கும் இந்தியப் படங்களனைத்தையும் ரஷ்ய சர்க்கார் ரூ. 5 லக்ஷம் விலை கொடுத்து வாங்கி விட்டனர். இந்திய சர்க்கார் உள்பட, பட அதிபர்கள் பலருக்கும் ஏற்கெனவே பணம் வழங்கப்பட்டு விட்டது.

ஜாப் சினிமாவுக்கு சர்க்கார் உதவி

ஜப்பானில் சினிமாப் படத் தொழிலுக்கு சர்க்கார் மிகவும் ஒத்தாசை புரிவதாக ஜப்பானிய சலனப்பட சங்கத் தலைவர் ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளார்: அதில் பின்கண்ட விஷயங்களை வெளியிட்டுள்ளார். ஜப்பானியப் படங்களை சர்க்கார் தணிக்கை செய்வதில்லை. சினிமாப்பட தயாரிப்பாளரே எது நல்லது எது கெட்டது எனத் தீர்மானித்து சுய கட்டுப்பாடு ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்! இந்தியாவில் இருப்பதுபோல் அங்கு நக்ஷத்திரங்களுககு ஏராளமான சம்பளமும் கிடையாது. நாலே காலணா ஸீட்களுக்கு தமாஷா வரி இல்லை. 10 அணா ஸீட்களுக்கு 10 சத வீதம் வரி, ரூ. 1-4-0 ஸீட்களுக்கு 20 சத வீதம், ரூ. 1-4-0க்கு மேல் 30 சத வீதம் தமாஷா வரி விதிக்கப்படுவதாகத் தெரிகிறது. சர்க்கார் அங்கீகரிக்கும் கல்விப் படங்களுக்கு தமாஷா வரியே கிடையாது.

வரப்பெற்றோம்

சுலேகா பேனா மை

கல்கத்தாவிலுள்ள 'சுலேகா' மை தயாரிப்புக் கம்பெனியாரிடமிருந்து ஒரு புட்டி பௌண்டன் பேனா மை வரப் பெற்றோம். இதை நாம் பரீட்சித்ததில் பூரண திருப்தி ஏற்படுகிறது. இது மேனாட்டிலிருந்து வரும் சிறந்த மைகளுக்கு எவ்விதத்திலும் குறைந்த தாயில்லை. இதில் அடங்கியுள்ள "சால்வெள்ட் எஸ். 100" என்ற சத்து மையை உலராமலும், நிப்பின் மீது கறை படியாமலும் பேனாவுக்குள் அழுக்குத் தங்காமலும் தடுக்கிறது. சுதேசி மையான "சுலேகா"வுக்கு நாம் மிக சலுகை காட்ட வேண்டியது அவசியமாகும். இந்த மை எங்கும் கிடைக்குமாம்.

கணேஷ் ஆர்ட் படம்

பிரபல ஹிக்கின்பாதம்ஸ் புஸ்தக வியாபாரிகள் ஒரு அருமையான கணேஷ் ஆர்ட் படத்தை வெளியிட்டிருக்கின்றனர். இதன் விலை மூன்றே அணாதான். பளபளவென்று காட்சியளிக்கும் இந்த "பிரணவ கணபதி" படம் எஸ். மணியம் அவர்களால் பாராட்டும் முறையில் வரையப் பட்டிருக்கிறது.

பொதுஜனம் பேசுகிறார்

★ வட இந்தியாவில் தயாரிக்கப்பட்டு திரைக்கு வந்த "தோ பிகா ஜமீன்", "ராகி", "சுரங்" ஆகிய மூன்று படங்களிலும் மூவகைத் தொழில்களையும், அத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தையும் நன்கு சித்தரித்திருந்தனர். "தோ பிகா ஜமினி"ல் விவசாய மக்களின் அவல வாழ்வினை அப்பட்டமாக எடுத்துக் காட்டியிருந்தார், கலைஞர் பிமல் ராய். "ராகி" படத்தில் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு விளைக்கப்படும் தொல்லைகளைத் தொகுத்துக் காட்டியிருந்தார் மறுமலர்ச்சி எழுத்தாளரான முகம்மது அப்பாஸ். 'சுரங்'படத்திலே அதல பாதாளத்தில் கல்லுடைக்கும் கடும் உழைப்பாளிகளின் உழைப்புக்கு உருவம் கொடுத்திருந்தார் கலைஞர் சாந்தாராம். மேற்கண்ட மூன்று படங்களிலும் இந் நாட்டின் மூவகைத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை எடுத்துக் காட்டி தொழிலாளர்களின் நைந்த வாழ்விற்கு விமோசனம் காணவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி யிருந்தார்கள். தொழிலாளர்கள் "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" என்ற கருத்தைத் தவிர வேறு அரசியல் கட்சிகளின் சம்பந்தத்தை அதில் புகுத்தாதது பாராட்டப்பட வேண்டிய விஷயம். தென்னிந்திய திரைப்படக் கதாசிரியர்களும், தயாரிப்பாளர்களும் தென்னாட்டின் சிறந்த தொழில்களையும், தொழிலாளரின் வாழ்க்கைத் தரத்தைச் சித்தரிக்கும் கதைகளையும் படமாக்க முன்வரவேண்டும். பாட்டாளியின் வாழ்க்கை சம்பந்தப்பட்ட கதைகளில் அரசியல் கட்சியைப் புகுத்திக் குழப்பாது, தொழிலாளர்களின் ஒற்றுமையையும், தொழில் சிறப்பையும், நாட்டின் தொழில் பெருக்கதிற்கு உழைக்கவேண்டிய அவசியத்தையும், தொழிலாளர்களின் நல்வாழ்வுக்கு அளிக்கப்பட வேண்டிய வசதிகளையும் சித்தரித்துக் காட்ட வேண்டும். இந்த அடிப்படையில் திரைப் படக் கதைகள் அமையப் பெறுமானால் திரைப் படத் தொழிலுக்கு நன் மதிப்பும், ஆதரவும் பெருகு மென்பது உறுதி. மேலும், நம் நாட்டில் தொழிலாளர்கள் படம் பார்ப்பதால் தான் ஓரளவு நல்ல வசூல் காண முடிகிறது. ஆகவே, பாட்டாளியின் வாழ்க்கைத் தரம் உயர வேண்டியதன் கருத்துப் பொதிந்த கதைகள் திரைப் படங்களாகத் தயாரிக்கப்பட வேண்டியது அவசியம்.

எம். கே. சொர்ணப்பா, மதுரை.

எழுச்சிக் குரல்

ஜன்னி கண்டு பிதற்றும் நிலையில் இன்றைய சினிமா உலகம் தத்தளித்துக் கொண்டிருக்கிறது. இந்த நிலை மேலும் நீடித்தால் வருங்காலத்தில் பட உலகத்தின் கதி எங்கு சென்று முடியுமோ என்றுதான் ஐயுறவேண்டி யிருக்கிறது. ஆழக் கடல் நடுவே, நீந்தத் தெரியாத ஒருவனை நீரில் முக்கி எடுத்து அவன் படும் பாட்டைக் கண்டு ஏளனச் சிரிப்புச் சிரிக்கும் மாந்தர் நிலைக்கு சினிமாக் கம்பெனிக்காரர்கள் மாறிவிட்டார்களே என்பதை எண்ணும்போது மனம் வருந்தாது என்ன செய்வது? இந்திய நாட்டுக் கலை, கலாசாரம், பண்பாடு இவையனைத்தும் சினிமா என்ற நடுக் கடலிலே சிக்கித் தடுமாறும் நிலை ஒரு பக்கம்! அதே சமயம், எதிர்க் கரையில் உட்கார்ந்து கொண்டு, "ஆகா! எங்கள் கலைவாணி 'ஜலக்கிரீடை' செய்து மகிழ்வதைக் காண வாருங்கள் மக்களே!" என்று பரமானந்தப்படும் படமுதலாளிகள் ஒரு பக்கம்! இமயம் முதல் குமரி வரை கற்பின் வீரக் கொடி உயர்த்தி, கற்பின் சிறப்பை உலகிற்கு எடுத்துக் காட்டிய கண்ணகி தோன்றிய நாட்டிலே, — கற்பிழந்த வழியிலே — கதறியழும் நிலையிலே—கணக்கற்ற கதாநாய

☆ **பரிசு பெற்ற கடிதம்**

எழுதியவர் :

எம். கே. சொர்ணப்பா,

32, நாயக்கர் புதுத் தெரு,

மதுரை.

கிகள் தோன்ற ஆரம்பித்து விட்டார்கள் காட்சிப் படங்களிலே!—இது ஒரு பக்கம். மறுமுனையில், "சீர்திருத்தம் சிந்து பாட ஆரம்பித்து விட்டதைக் காணீர்" என்று சிந்தை மகிழும் சினிமா சிருஷ்டி கர்த்தாக்கள் ஒரு பக்கம்! அந்தோ! சினிமா போகிற போக்கைப் பார்த்தால் நமக்கு ஒன்றும் புரியவில்லை. சுருக்கமாகச் சொன்னால், "சரக்கெல்லாம் ஒன்று, ஆனால் லேபிள் தான் மாறி விட்டதுங்க ஸார்" என்பதை அப்பட்டமாக எடுத்துக் காட்டுகிற அளவுக்குப் பேசும் படங்கள் உருவாக ஆரம்பித்து விட்டனவே! திரும்பத் திரும்ப பித்தளைக்கு "கில்ட்" கொடுத்த மாதிரி ஒரே கதைக்கு மாறி மாறி வெவ்வேறு பெயர்கள்! இந்த நிலை எதற்கு?........அரும் பெரும் அறிஞர்கள் தோன்றிய நாட்டிலே எண்ணற்ற எழுத்தாளர்கள் இல்லையா? இருந்தென்ன செய்வது? இந்தக் காலத்திலேதான் கலை அறிந்தவன் ஆடிக் காற்றிலே துரும்பு பறப்பது போல ஆலாய்ப் பறக்கிறான். ஆனால், அதே சமயத்தில் "காக்கா பிடிக்கிறவன் காரிலே போகிறான்"—இப்படி இருக்கும்பொழுது உண்மை உழைப்பாளிக்கு எங்கே இடம்? கம்பெனி முதலாளிகளின் கவனத்திற்கு இதைக் கொண்டு வர விரும்புகின்றேன். முதலாளிகள் தங்களுக்குள் பணம் ஒன்றையே இலட்சியக் குறியாக வைத்திராமல், மக்களின் (ஜீவிய) வாழ்க்கையின் கைகாட்டியாக இருந்து பாடுபட முன்வரவேண்டும்.

துரை. முருகேசன், காரமடை.

உணர்வார்களா?

தற்பொழுது வெளிவரும் படங்களில் பெரும்பாலானவை, காமத்தைத் தூண்டும் காட்சிகள் நிறைந்தவைகளாயிருக்கின்றன. இவைகளைக் காணும் போது நாம் வெட்கித் தலை குனிகிறோம். இவற்றைப் பார்ப்பதால் இளைஞர்களும், யுவதிகளும் எவ்வளவு தூரம் பாதிக்கப்படுகின்றனர் என்பதை சம்பந்தப்பட்டவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஒன்று, கலையினால் மக்களுக்கு நன்மை ஏற்பட வேண்டும், அல்லது அதனால் தீமையாவது விளையாதிருக்க வேண்டும். அவ்வாறு இன்றி-கலையின் பெயரால் காமத்தைக் கிளறும் காட்சிகளைப் படம் பிடித்து மக்களின் பண்பைக் கெடுப்பது பெரும் துரோகமாகும்! பணத்திற்காக மக்களின் தூய்மையைக் கெடுப்பது எவ்வளவு பெரிய கொடுமை யென்பதை, பட உலகினர் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஒரு சுதந்திர நாட்டில், வருங்காலப் பிரஜைகளுக்கு இழைக்கப்படும் இத்தீமை, உடனடியாக ஒழிக்கப்பட வேண்டு மன்றோ? இதை நம் படத் தயாரிப்பாளர்கள் சீக்கிரமே உணர்வார்களா?

"சினிமா ஸ்கோப்", இரவாஞ்சேரி.

சீர்திருத்தமா?

தற்போது சிறிது காலமாக வெளி வரும் சமூக சித்திரங்களில் கீழ்க் கண்டவாறு கதாநாயகனைச் சித்தரிக்கின்றார்கள். கதாநாயகன் சிறந்த கல்வியும் அறிவும் பெற்றவனா யிருப்பான். செல்வவந்தனா யிருப்பான். நற்குணவானா யிருப்பான். சீர்திருத்தவாதியாய் ஒரு மங்கையைக் காதலித்தும் இருப்பான். ஆனால், ஒரு சிறு சந்தர்ப்பத்தாலோ அல்லது தங்களுக்கு சம்பந்தமே யில்லாத யாராவது ஒருவரது பேச்சினாலோ, உடனே உள்ளம் மாறி தன் உயிரினும் இனிய காதலியை உதறி, அவளைக் கலங்கச் செய்து, கதையைக் கலங்கச் செய்து நம் சிந்தையையும் கலங்கச் செய்து விடுவான். சமீபத்திய வெற்றிகரமான வெளியீடாகிய "பெண்"ணிலும் இவ்வாறே. தாழ்ந்த ஜாதி என்று எல்லோராலும் புறக்கணிக்கப்பட்டு, மணமாகாமல் மனம் வருந்தும் கண்மணியை, தாய் தந்தையரின் அனுமதியுமின்றி, காதலித்துக் கடி மணம் புரிந்து கொள்ளுகிறான் சீர்திருத்தவாதியான ராஜா. அவனுக்குத் தெரியும் சுந்தர் அவளுடைய அத்தான் என்று. கண்மணி உத்தம குணங்களே உருவான பெண்மணி என்றும் தெரியும், அவள் உயர் குணங்களை எண்ணித்தான் பெற்ற தாய் தந்தையரின் சொற்களையும் காதில் போட்டுக் கொள்ளாமல் அவளுக்கு வாழ்வளிக்க இரவோடு இரவாக ஓடி வருகிறான். வந்தவன் கண்மணியும் சுந்தரும் தனிமையில் பேசுவதைக் கேட்டு, கண்மணியைத் தூய்மை அற்றவள் என்று தீர்மானித்து வெளியேறுகிறான். கண்மணி மீது அவ்வளவு உறுதியான அன்பு கொண்டவன் தூரத்திலிருந்தே அவர்களைக்

[தொடர்ச்சி 79-ம் பக்கத்தில்]

நகைப் பைத்தியம்

புஷ்பத்துறை சுப்ரமண்யம்

அதற்கு மேலும் அந்தப் பிரச்னையை ஒத்திப்போடுவது இயலாத காரியம் என்ற முடிவுக்குக் கமலநாதன் வர வேண்டியதாகி விட்டது! எத்தனை நாளைக்குத்தான் தள்ளிப்போட்டு சால்ஜாப்பு சொல்ல முடியும்? அதுவும் அன்பின் அணிகலமாய் விளங்கும் மனைவியின் பேச்சுக்கு? அன்று நடந்ததெல்லாம் பிரச்னையை உச்ச நிலையில் கொண்டு வைத்து, 'அதைப் பார்த்து விட்டு மறு காரியத்தைக் கவனி' என்று உத்தரவிட்டு கமலநாதனை பயமுறுத்திற்று. அந்த யோசனையில் உள்ளம் ஊசலாடி, தேகமும் அங்கு மிங்கும் அலைந்து—அந்த பயங்கர பிரச்னையைத் தீர்க்க வழி தேடலாயிற்று. அன்று நடந்த விஷயம் இது தான் :—

"கல்யாணம் கட்டி பத்து வருஷத்துக்கு மேலாச்சு. உருப்படியாக பெயர் சொல்லிக்கொள்ள எனக்கு ஒரு நகை யாவது செய்து போட்டீர்களா?" தன் மனைவி விமலாவின் அங்கலாய்ப்பில் மகத்தான உண்மை இருப்பதைக் கமலநாதன் எந்தச் சமயத்திலும் ஒப்புக் கொள்ளத் தயார். அருமை மனைவிக்கென இதுவரை ஏதேதோ சில்லறைச் சாமான்கள் வாங்கித் தந்திருக்கிறானே தவிர, குறிப்பிட்டுச் சொல்லத் தக்கதான வகையில் அவன் எதுவும் செய்யவில்லை, செய்யவும் முடியவில்லை. அவனுக்கு மட்டும் ஆசை இருக்காதா என்ன? எண்பது ரூபாய் மாதச் சம்பளத்தில் அவன் என்னதான் செய்ய முடியும்? மனைவியை சாந்தப்படுத்த அவன் சொன்னான், "கேவலம் இந்த நகைகள் எதற்கு? உன் அழகான புன்னகை ஒன்றே போதாதா? அதன் முன்னே...." என்று.

விமலா குறுக்கிட்டாள்: "அது தானே வேண்டாமென்கிறேன். இது போலச் சொல்லி தட்டிக் கழிக்கத்தானே பார்க்கிறீர்கள்?" அவள் குரலிலே விசும்பலும் கலந்து வந்தது. "அதற்குச் சொல்லவில்லை விமலா. இதோ பார். நகை வாங்கி விடுகிறேம். அதைக் காப்பாற்றுவதுதானே கடினம்! ஒரு வேளை திருட்டுப் போய் விட்டால் திரும்பவும் அதுபோல் வாங்க நமக்கு சக்தியிருக்கிறதா ?" என்று கமலநாதன் தான் வாங்காததற்கு மனைவியிடம் விளக்கம் கூறினன்.

"அது என் பொறுப்பு. உங்களுக்கேன் அந்தக் கவலை? நான் பார்த்துக் கொள்கிறேன். அதனலே நீங்கள் வாங்குவது தடைப்பட வேண்டாம்...." இதற்கு மேல் தர்க்கம் செய்ய முடியவில்லை கமலநாதனல். மனைவி சொல்வதும் நியாயமென்றே அவனுக்குத் தோன்றியது. ஆனல், நகை வாங்கப் பணம், அதற்கு எங்கே போவது?

* * *

மனைவிக்கு நல்ல வார்த்தை சொல்லி விட்டு, கமலநாதன் ஆபீஸுக்குப் புறப்பட்டான். அவன் வேலை பார்ப்பது 'செல்வ நிதி' பாங்கியில். பணம் அதிகம் புழக்கமுடைய இடத்திலே அவன் இருந்தான். அவன்தான் அந்தப் பாங்க் 'கேஷியர்!' ஆயிரக் கணக்கில் பணம் அவன் முன் குவியும். கை நோட்டு நோட்டாக எண்ணும். அவ்வளவும் பிறர் பணம். அதைத் தொடுவதைத் தவிர அவனுக்கு வேறு உரிமை உண்டா? வீட்டிலே செலவை வைத்து, கையிலே பணத்தையும் காட்டினல் சபலம் சாதாரணமாக மனிதனுக்கு ஏற்படுவது இயற்கைதானே? ஆனல், மனச்சாட்சி என்கிற காவல்காரனுக்கு பதில் சொல்லியாக வேண்டுமே! இந்த நிலைமையில்தான் தத்தளித்தான் கமலநாதன். பணத்திற்குப் பஞ்சமில்லை. இஷ்

டப்பட்டால் எத்தனை வேண்டுமென்றாலும் எடுத்துப் போகலாம். ஆனால் மன சாட்சியைச் சுட்டுத்தள்ளி, தண்டனையை ஏற்கத் தயாராக இருக்க வேண்டும்? அதற்கு—நியாயமற்ற அச்செயலுக்கு பயங்கரத் துணிவு அல்லவா வேண்டும்? அத்தகைய துணிச்சல் கமலநாதனுக்குக் கிடையாது.

அன்று அவன் எண்ணிய ஒவ்வொரு ரூபாய் வட்டத்திலேயும் விமலாவின் முகம் தெரிந்தது. நகைக்காக ஏங்கும் முகமே காட்சி தந்தது. அன்பு பெரிதா, ஆசை பெரிதா என்கிற கேள்வி அவன் உள்ளத்தில் எழுந்து பதிலைக் காணக் காத்து நின்றது. 'அன்புதான் பெரிது. ஆனால், அதை வளர்க்க ஆசையைப் பூர்த்தி செய்ய வேண்டும். இல்லாமற் போனால் பெண் மனம் திருப்தி அடைவதில்லை' என்ற தீர்மானத்திற்கே வந்தான். விமலா தன்னிடம் நிரம்பிய அன்பு கொண்டவள், நிலைமை தெரிந்தவள். இருந்தும் நகை மோகம் கொண்டு ஏன் பிடிவாதம் செய்கிறாள் என்பது கமலநாதனுக்குப் புரியவில்லை. பொய்யான பொன் மானுக்காக சீதை பிடிவாதம் செய்யவில்லையா? எல்லாம் அறிந்த ராமனும் அந்தப் பொன் மான் மனப்பான்மைக்கு இடம் தரவேண்டியதாயிற்றல்லவா?



*   *   *

அன்று மாலை விமலாவின் வாழ்க்கையில் என்றும் மறக்க முடியாத மகிழ்ச்சிக்குரிய காலமாயிற்று. அவள் உள்ளத்திலே இன்ப அலைகள் மோதி மோதி வழிந்தன. அவள் அழகின் எல்லைக் கோடுகளாக செவிகளில் வைரத் தோடுகள் புத்தொளி வீசி ஜ்வலித்தன. அதையே கண் கொட்டாமல் பார்த்து மெய்ம் மறந்திருந்தான் கமலநாதன். அவன் எண்ணத்தின் ஓட்டம் இது: "அழகான பொருளும் அதற்கேற்ற இடத்தில் இருந்தால்தான் பரிமளிக்கிறது. அந்த ஏற்ற இடத்திலே அழகான பொருளை வைக்காமலிருப்பதும் அழகல்ல; பெருந்தவறேதான்."

பூரிப்பிைல் பொங்கும் இதய்த்தோடு—அவலோடு விமலா தன் புருஷனை அணுகினள். மயங்கிய விழிகளால் அவனைப் பார்த்து, "எப்படி இருக்கிறதென்று சொல்லவே இல்லையே?" என்று கேட்டாள், கொஞ்சியவாறே.

"அபாரம்! என்ன சொல்வதென்றே எனக்குத் தெரியவில்லை" என்று விழித்தான் கமலநாதன் ஆடு திருடிய கள்ளன் போல. விமலா அவன் கரங்களை அன்போடு பற்றினள். "நான் கேட்கிறேன், ஒளிக்காமல் சொல்கிறீர்களா? எப்படித் தோடு வாங்கினீர்கள்? கடன் வாங்கியா?" என்றுள். ஒரு நிமிஷம் தயங்கினன் கமலநாதன். பின்னர், "சே! கடனா? கையில் பணம் வைத்திருந்தேன். அதைக் கொண்டு வாங்கினேன். வேறொன்றுமில்லை."

"இத்தனை நாள் அதைச் சொல்லாமல் மறைத்துத்தானே வைத்திருந் தீர்கள்? இவ்வளவு தாமதம் செய்யாமல் அப்போதே வாங்கித் தந்திருந்தால் வீணை வார்த்தை வளராமல் இருந்திருக்குமல்லவா...."

"எதற்கும் வேளை வர வேண்டாமா? இன்றுதான் நான் அந்தக் காரியம் செய்யவேண்டும் என்கிற எழுத்துப் போலிருக்கிறது!"

"மிகவும் பொல்லாதவர் நீங்கள்! இன்றுவது வெளிப்பட்டதே உங்கள் ரகசியம். என்மீதுள்ள அன்பு."

"எப்போதும் எனக்கு அன்பு உண்டு. ஆனல், இப்போதுதான் அது உனக்குத் தெரிகிறது. நான் என்ன செய்வது?"

புது மணப் பெண் போல நாணம் கவிழ வார்த்தை குளரப் பேசினள் விமலா. அந்த ஆகர்ஷன சக்தி வசப்பட்டிருந்தான் கமலநாதன். அந்த இரவு மிக இன்பமயமாகக் கழிந்தது.

* * *

அடுத்த நாள் 'செல்வ நிதி' பாங்கியில் அல்லோல கல்லோலம். எங்கும் ஒரே பரபரப்பு. பாங்கி புத்தகத்தில் வரவு கண்டிருந்த ரூபாயை எண்ணிப் பார்த்ததில் மூவாயிரம் கணக்கிற்கு வரவில்லை. எந்த 'பார்ட்டி'யிடம் பணம் வாங்கவில்லையோ, யார் எடுத்துவிட்டார்களோ—என்று திட்டமாகச் சொல்ல முடியவில்லை. ஒவ்வொருவரும் மற்றவரைச் சந்தேகக் கண் கொண்டு பார்த்தார்கள். பின்னர் போலீசுக்கு ஆள் விடலாம் என்று பாங்க் ஏஜண்ட் பரோபகாரம் சொல்லி விட்டார். 'இன்றைய வேலைகள் அமைதியாக நடக்கட்டும்' என்றும் உத்தரவிட்டார். நாள் பொழுது கழிந்தது, மெதுவாக.

அன்று மாலை பரோபகாரம் கமலநாதனை அழைத்து தனிமையில் தன் அறையில் வெகு நேரம் பேசிக்கொண்டிருந்தார். "கமலநாதன், மூவாயிரம் ரூபாய் எப்படி எங்கே போயிற்று என்பது தெரியவில்லை. பணம் உங்கள் மூலம்தான் போய் வருவதால் அதற்கு விதிப்படி நீங்கள் தான் பொறுப்பு. அந்தப் பணத்தை நீங்கள் தான், கட்டியாக வேண்டும். ஒரு வாரம் 'டைம்' தருகிறேன்.

எப்படியாவது கட்டி விடுங்கள். இல்லாது போனால் வேலை போகும். அசிங்கமான நடவடிக்கைகளைத் தவிர்க்கவே இந்த வழி சொல்கிறேன்........" என்றார் பரோபகாரம், கமலநாதன் உள்ளத்தை ஊடுருவிப் பார்ப்பவர் போல்.

கமலநாதனுல் எதுவும் தெளிவாகச் சொல்ல முடியவில்லை. தொண்டை கரகரத்தது. "இல்லை, ஸார்........இல்லை" என்று முணகினான். அதைக் கவனித்த பரோபகாரம், "உம் மீது குற்றம் சுமத்துவதாக எண்ணுதீர்; நிச்சயமாக நீங்கள் எடுத்திருக்கமாட்டீரென்பது எனக்குத் தெரியும். வெளியில் இருப்போர்—போலீஸ்காரர்களில் ஒரு சிலர் நம்பமாட்டார்கள். சட்டமும்..........." என்று தன் பரோபகாரத் தன்மையும் விஷய ஞானமும் வெளிப்படப் பேசினார். "சரி, ஸார்" என்று இயந்திரம் போல் தலையசைத்துவிட்டு வெளியேறினான் கமலநாதன்.

மூவாயிரம் ரூபாய்க்கு எங்கே போவது? அவமானம் வேறு. அதை அவனால் தாங்க முடியவில்லை. தானே திருடாது போனாலும் சந்தேகம் ஒருவனை அந்தப் பட்டத்திற்கு ஆளாக்கவா மல்லவா? தன் விஷயத்தில் பரோபகாரம் மிகவும் கருணை காட்டினார் என்று தான் எண்ணினான் கமலநாதன். ஆனாலும், பணம் கட்ட வேண்டுமே........ஒரேயடியாக உயிரைப் போக்கினால் யார் தான் அவனைப் பணத்திற்குக் கட்டுப்படுத்த முடியும்? அதனால் குற்றம் உறுதிப்படுவதாகும். அவன் மறைந்தால் வைரம் பாய்ந்து மின்வெட்டும் தோடுகள் விமலாவின் காதுகளை எப்படி அலங்கரிக்க முடியும்?'—ஆகவே, நிலைமையை எப்படியும் முழு மூச்சோடு சமாளித்து விடுவது என்று கமலநாதன் திட்டமிட்டான். திட்டம், தானே பணம் கொண்டு வந்து கொட்டுமா? அதுவே அவன மனக் கலக்கம்.

அந்த மனக் கலக்கத்தை மனைவிக்கு முகத்தில் காட்டினானே தவிர வாயால் சொல்லவில்லை, மூன்று நாட்கள் வரை. அந்த நிலைமை தாளமுடியாமல் விமலா அவன் உள்ளம் வாடியிருக்கும் காரணத்தைச் சொல்ல வற்புறுத்தினாள். "பாங்கியில் பணம் களவு போயிற்று. அதை நான் கட்டியாக வேண்டுமாம். இல்லாது போனால், பயங்கரமான விளைவுகள் நேரலாம்" என்று நடந்ததைச் சொன்னான்.

'பயங்கரமான விளைவுகள் நேரலாம்' என்ற சொல் விமலாவை சொல்லொணா வேதனைக்கு ஆளாக்கியது. ஆபத்தோ துன்பமோ வந்துவிட்டால் கூட சமயத்திற்கு ஏற்ப மனசு ஏப்படியோ சமாளிக்கிறது, இல்லை மடிகிறது. ஆனால், வரப் போகிறது என்கிற பீதியோடு எதிர் காலத்தை எண்ண அஞ்சுகிறது. தத்தளிக்கிறது. சித்திரவதைப்படுகிறது. தாங்கமுடியாமல் திணறித் துடிக்கிறது. இந்த அவஸ்தைதான் விமலாவிற்கு. எப்படியும் கணவனைக் காப்பாற்ற வேண்டும் என்று ஏங்கினாள்.

கவலையினால் தலை தொங்கிய புருஷனைப் பார்த்து, "நான் ஒரு வழி சொல்கிறேன் கேட்கிறீர்களா?" என்று ஆத்திரத்துடன் கேட்ட விமலாவைக் குறுக்கிட்டு, "வைரத் தோடுகளை விற்று ஈடு செய்யச் சொல்கிறாய். அப்படி நான் செய்யமாட்டேன்........" என்று அவளைப் பார்த்தான் கமலநாதன். அவள் செவிகளில் வைரத் தோடுகள் காணவில்லை! பழைய சிவப்புக் கல் தோடுகளே தம்மிடத்தை மீண்டும் தமதாக்கிக் கொண்டிருந்தன. கமலநாதன் கேட்டான்: "காதில் ஏன் புதுத் தோடுகளைக் காணவில்லை?"

"அதுவா?" விமலா சொன்னாள்: "நேற்று எண்ணெய் தேய்த்துக் கொண்டேன். எண்ணெய் இறங்கிவிடும் என்று கழற்றி பத்திரமாகப் பெட்டியில் வைத்தேன். கலகலப்பில்லாத உங்கள் நடத்தையைப் பார்த்ததும், மறுபடியும் அவற்றைப் போட்டுக்கொள்ள மனம் வரவில்லை. அதற்குப் பதில் பழைய தோடுகளே!"—அவள் பேச்சு அன்பிற்கும் இரக்கத்திற்கும் ஏங்குவதாக இருந்தது. கமலநாதன் ஒன்றும் விளங்காத வகையில் அவளை நோக்கி ஏளனமாகச் சிரித்தான்.

விமலா பிடிவாதம் செய்தாள். அந்தப் பிடிவாதம் நகைக்குச் செய்த பிடிவாதத்திற்குப் பன்மடங்கு அதிகமாக இருந்ததே தவிர சற்றேனும் குறைந்ததாக இல்லை. நீண்ட கண்களில் நீர் ததும்ப கல்லும் உருகும்படி சொன்னாள்: "நீங்கள் அவதிப்படும் போது எனக்கு ஏன் அலங்காரம்? உங்கள் கரங்களில் விலங்கு பூட்டும் சமயம் என்

காதுகளில்வைரத்தோடுகள் மின்னவா? இல்லை, ஒருபோதும் இல்லை! ஆசைப் பட்டேன்; இரண்டு நாள் போட்டுக் கொண்டு விட்டேன். போதும்; என் ஆசை நிறைவேறி விட்டது. அவற்றை விற்று என் மானத்தைக் காப்பேன்......'' என்று ஆவேசம் பிடித்தவள் போல வைரத்தோடு வைத்திருந்த பெட்டியின் பக்கம் ஓடினாள்.

பெட்டியைத் திறந்தாள்; தோடுகளைத் தேடினாள். வைத்த இடத்திலே அவை தென்படவில்லை. நினைவுப் பிசகாய் இருக்குமெனப் பெட்டியைத் துளாவினாள். சாமான்களைத் தட்டிக் கொட்டிப் பார்த்தாள். மற்ற இடங்களிலும் காணவில்லை. இடிமேல் இடி விழுந்தது போலிருந்தது. என்ன செய்வதென்று அவளே புழுவாய்த் துடித்தாள். நகையும் களவு போய் விட்டது! கணவனை எப்படிக் காப்பாற்றுவது? அவனிடம் எப்படிச் சொல்வது? கோரப் புயலின் அட்டகாசத்தில் சிக்கிச் சிதைந்த தனி மரம் போல் தவித்தாள்.

எப்படியோ கமலநாதனிடம் சமாசாரத்தைச் சொல்லி, போலீசுக்குத் தெரிவித்து பண்டத்தைக் கண்டுபிடித்து விடலாம் என்றாள் விமலா. கமலநாதனுக்கு அந்த யோசனை பிடித்ததாகத் தெரியவில்லை. "நமது போதாத காலம்! மேலும் வம்பை எதற்கு விலைக்கு வாங்கிக் கொள்ள வேண்டும்? போலீஸ் வந்தால் நமக்குத் தான் தொல்லை. இல்லாததெல்லாம் கேட்பார்கள். கோர்ட்டுச் சந்தியில் நிற்கவேண்டும்........'' என்று அதன் சிரமத்தை எடுத்துச் சொன்னான் அவன்.

இந்த விஷயத்தில் கணவன் சொல்லை ஏற்க விரும்பினாள் விமலா. நகை பறிபோனது கூட அவளுக்குப் பெரிதாகப் படவில்லை. 'கணவன் அவச்சொல்லில் இருந்து விடுதலை பெற வேண்டுமே! பிறர் செய்ததற்காக அவன் தண்டனை அனுபவிக்காமல் இருக்க வேண்டுமே' என்று மன்றாடி கடவுளை வேண்டினாள். அவள் உண்மை உள்ளத்தை அறிந்து–தனக்காக அவள் பாடுபடுவதை உணர்ந்து–தனக்கு என்ன தீங்கு வந்து அவளை வதைக்குமோ என்று எண்ணி எண்ணி மனம் விம்மினான், பெருமூச்செறிந்தான் கமலநாதன்.

செக்கிழுப்பது போல சில நாட்கள் மெதுவாக ஊர்ந்து நகர்ந்தன. கமலநாதனும் விமலாவும் விமோசனத்திற்கு வழி தெரியாமல், வந்தது வரட்டும் என்கிற முடிவுக்கு வந்து விட்டார்கள் 'வறண்ட இதயத்தோடு.

அந்த வார முடிவில் — கடைசி நாளில் கதையின் சிகரமாக விளங்கும் ஒரு நிகழ்ச்சி நடந்தது. அன்று மாலை கமலநாதன் விமலாவிற்கு ஒரு நல்ல செய்தி கொண்டு வந்தான். "பாங்கியில் பணம் கட்டி விட்டேன். விட்டது சனியன்'' என்றான் அவன் விடுதலை பெற்றவன் போல. அந்த சமாசாரம் விமலாவிற்கு விவரிக்க இயலாத சந்தோஷத்தையும் துன்பத்திலிருந்து விடுபட்ட சுகத்தையும் தந்தது. இனித் தன் கணவனைத் தன்னிடமிருந்து எதுவும் பிரிக்க முடியாதென்கிற பெருமிதத்தில் பூரித்துப் போனாள். வைரத் தோடுகளைப் பற்றிய சிந்தனையே இல்லை. இருந்தும் புருஷன் தான் பெற்ற நிம்மதியைப் பெறவில்லையே? ஏன்?

"எப்படிப் பணம் கட்டினீர்கள் ?'' என்று வினவினாள் விமலா. " திருடினேன் !'' என்று வந்த பயங்கரமான

ஸெப்டம்பர் இதழ்

இப்பொழுது விற்பனையாகிறது!

LIGHT

(லைட்)

அனைவருக்குமான

ஒரே சினிமாப் பத்திரிகை!

தனிப் பிரதி 10 அணா.

ஆசிரியர்: வஜூ கோடக்

ஏஜண்டுகள் இல்லாத இடங்களுக்கு ஏஜண்டுகள் தேவை.

LIGHT

62, KARWAR STREET

BOMBAY—1.

அசோகா பிக்சர்ஸார் தயாரித்து வரும் "என் மகள்" தமிழ்ப் படத்தில் ரஞ்சனும், எஸ். வரலக்ஷ்மியும் சேர்ந்து நடிக்கின்றனர்.

பதில் அவளைத் துணுக்குறச் செய்தது. அந்த அதிர்ச்சியில் தூக்கி வாரிப் போடப்பட்டாள். "திருடினீர்களா? நீங்களா?...." என்று அவள் படபடக்கக் கூறினாள். "ஆமாம்...." அழுத்தமாகச் சொன்னான் கமலநாதன்.

"கண்டு பிடித்தால்..?" விமலாவின் துடிப்பு இது.

"கம்பி எண்ண வேண்டியதுதான்!"

"அப்புறம் என் கதி? தங்கள் நிலமை?"

"கவலைப் படாதே. பறி கொடுத்தவர்கள் புகார் செய்தால் தானே....?"

"எல்லோரும் நம்மைப்போல் களவு கொடுத்து விட்டு சும்மா இருப்பார்களா? நினைக்கக்கூட பயமாயிருக்கிறது. நீங்கள் சாதாரணமாகச் சொல்கிறீர்களே."

"திருடன் நான். திருட்டுக் கொடுத்தவள் நீ. நீதான் புகார் கொடுக்கவில்லையே?" கமலநாதன் சொன்ன வார்த்தையின் பொருள் புலப்பட வெகு நாழியாயிற்று விமலாவிற்கு. துயர் அலைகள் ஓய்ந்து அவள் மனக் கடலில் நிம்மதி பிறந்தது.

"அப்படியானால் தாங்கள் திருடவில்லை!" என்றாள் விமலா பரிவோடு அவனைப் பற்றிக் கொண்டு. "தெரியாமல் எடுத்தால் திருட்டுதானே? சில சமயம் நமது பொருளை எடுப்பதே திருட்டாகும், மோசடி செய்யும் எண்ணம் இருக்கும்போது உனக்குத் தெரியாமல் நகையை எடுத்தது குற்றமே" என்றான் கமலநாதன் உணர்ச்சியோடு. விமலா சிரித்தாள்:—"எனக்குத் தெரியாமல் என் மனதை எடுத்துக்கொண்டு விட்டீர்கள். அதுவும் குற்றம்தானே?"

"மனதும் நகையும் ஒன்றாகுமா?" என்பது கமலநாதனின் தர்க்கம். "மனசு தானே நகை கேட்டது. அதற்கு வேண்டிய தண்டனை அனுபவித்து விட்டது. போதும். எனக்கு நகையே வேண்டாம். முன் போல் என்றும் தங்கள் சிரித்த முகத்தைப் பார்க்கவே நான் ஆசைப்படுகிறேன். அதுவே எனக்கு ஆபரணம்...." என்று விமலா சொல்லி புருஷனை அன்பு முழுக் காட்டத்தில் திளைக்க வைத்தாள்.

கமலநாதன் சிரித்தான்! விமலாவின் முகம் சிவந்தது அதிக நாணத்தினால்!

[72-ம் பக்கத் தொடர்ச்சி]

கவனித்து தவருன அபிப்பிராயம் கொள்வது நமது சிந்தனையைத் தூண்டுகிறது. அது சரியாகத் தோன்றவில்லை. இவ்வாறே, ''மனம்போல் மாங்கல்யம்'' சுந்தர், ''ஓர் இரவு'' தேவர் ஆகியோரும். சீர்திருத்த மனப்பான்மையும், உயர்ந்த குணங்களும், ஆழ்ந்த காதலும் கொண்ட இம்மாதிரிக் கதாநாயகர்களுக்கு உண்மை நிலையை விசாரிக்கப் பொறுமையே இருப்பதில்லையோ? (அப்படி இருப்பினும் கதை வளரவோ கதாநாயகி அழவோ, தற்கொலை பண்ணிக்கொள்ள முயற்சி செய்யவோ இடமிராதென்ற காரணமோ?) அல்லது ஆண்களே சந்தேகப் பிராணிகளோ? என்றெல்லாம் தோன்றுகிறது.

குமாரி டி. என். லக்ஷ்மி,
சென்னை-1.

வருந்துகிறேன்

தற்பொழுது எங்கும் வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கும் ஏவி. எம். மின் ''பெண்'' பிரம்மாண்டமான காட்சி ஜோடனைகளைக் கொண்ட ஓர் அற்புதமான நடனப் படம்தான்! அதில் புதுமைப் பெண்ணாக வருகிருள் ராணி. பிற பெண்கள் படும் துன்பத்தைக் கண்டு சகியாதவள் என்பதற்காக, ஒருவன் தன் மனைவியை அடித்துத் துன்புறுத்தியதனல் அவனை ராணி தன் சாட்டையினல் அடிப்பது போல் காட்டியிருப்பது மிகவும் வருந்தத்தக்க விஷயமல்லவா? நம் பாரத நாட்டின் கலையின் சிறப்பை பிறர் அறியச் செய்த —நற்பண்புகளை உடைய-நாகரிகமான ராணி வயதில் தன்னை விடப் பெரியவர் ஒருவரை அடிப்பது அவள் நற்பண்புகளுக்கு முற்றிலும் முரண்பாடாக வன்றோ இருக்கின்றது? அக்காட்சியை பார்ப்பவர் மனம், முக்கியமாகப் பெண்களாகிய எங்கள் மனம் வருந்துகிறது.

கே. தாக்ஷாயனி, பெங்களூர்.

நியாயமா!

சமீபத்தில் வெளி வந்துள்ள படங்களில், சிறந்த பொழுது போக்கு அம்சங்கள் நிறைந்த படம் ''பெண்''. ராணி சிறந்த நவநாகரீக மங்கை. அவள், வழக்கம் போல் ஒரு நாள் குதிரை சவாரி செல்லும்போது, ஒரு வீட்டினுள் சென்று, தன் மனைவியை அடிக்கும் ஒரு ஆண்மகனை, குதிரைச் சவுக்கால் அடிக்கிருள். முன் பின் தெரியாத ஒரு வீட்டினுள் சென்று ஒரு ஆண்மகனைச் சவுக்கால் அடிப்பது நாகரீகம் அல்ல.

உமா, சென்னை-17.

அந்த நாள்

சமீபத்தில் ''அந்த நாள்'' படம் பார்த்தேன். படம் ரொம்ப நன்ருய் இருக்கிறது. ஆனல், 'பாட்டு இல்லை' என்று சொல்லிவிட்டு, சில பின்னணி இசைகளைக் கேட்டவுடன் எனக்கு ஆச்சரியமாகி விட்டது. சோக கட்டம் வரும் இடத்தில், ''சுப்பு சுப்பு கரி அவர் கோயி பாத்கோ'' என்ற 'பாரி பென்'' என்ற வடநாட்டுப் படத்தின் ஹிந்திப் பாட்டைக் காப்பி அடித்து பின்னணியில் ஒட்டி இருக்கிருர்கள். என்னுடன் கூட வந்த ஒருவட இந்தியன் அதைப் பார்த்தவுடன், ''உங்கள் தென்னிந்தியாவிற்கெனத் தனி சங்கீதம் தெரியாதா?'' என்று கேட்டபோது நான் தலை குனிய வேண்டியதாயிற்று. இம்மாதிரி இடம், பொருள், தெரியாமல் ஏதாவது இடத்தில் எந்த சங்கீத மெட்டையும் ஒட்டி விடுகிருர்கள். இனிமேலாவது நல்ல கர்நாடக சங்கீத ராக லக்ஷணங்களையும், வர்ணம், ஜதி, சிட்ட ஸ்வரங்களை கையாண்டால் படம் நன்மடங்கு பேர் எடுக்கும்.

இ. ராஜாமணி, பம்பாய்-19.

நல்ல முயற்சி

''மாங்கல்யம்'' இன்று நம் நாட்டிற்குத் தேவையான படம். முக்கியமாக மாதர்கள் அவசியம் பார்க்க வேண்டிய படம். செல்லம், குமாரிடம் தோட்டத்தில் சந்திக்கும் பொழுது மாதர்களுக்கு ''மாங்கல்யம்'' கட்டுவது எவ்வளவு அவசியம் என்பதை எடுத்துச்சொல்வது மிகவும் அழகாக இருக்கிறது. இன்றைய சமூகத்தில், காதலிப்பதும் கற்பைப் பறிகொடுத்துக் கலங்கி நிற்பதும் சர்வ சாதாரணமான சம்பவங்களாக உள்ளன. அத்தகைய சகோதரிகளுக்குப் பாடம் கற்பிப்பதாக இருக்கிறது படத்தின் கருத்து. மேலும், கணவனேடு வாழாவிட்டாலும் ''மாங்கல்யம்'' கட்டிய திருப்தியோடு இறப்பதாகச் சித்தரித்திருப்பது மாங்கல்யத்திற்கு உள்ள பெருமையை விளக்குகிறது.

எம். என். ரத்தினம், மதுரை.

இதோ உங்களுக்கொரு லாபகரமான முதலீடுத் திட்டம்

பதினைந்து வருடங்களுக்கு மாதாமாதமும் வருமானவரி கழிவின்றி நல்ல வருமானம் பெறுவதற்கு

ஒரு அன்னியுடி சர்டிபிகேட் வாங்கிவிடுங்கள்

வெளியீடு விலை	மாத வருமானம்	தவறாமல்
ரூ. 3,500/-	பிரதி மாதமும் ரூ. 25/-	15 வருட காலத்திற்கு ஒவ்வொரு மாதமும், முதலீடு தேதியிலிருந்து ஒருமாதம் பூர்த்தியான தேதி முதல் ஆரம்பித்து வழங்கப்படும். திருப்பிக் கொடுக்கப்படும் மூலதனத்தின் ஒரு பகுதியும், சுமார் 3½ சத விகிதம் தொடர் வட்டியும் சேர்ந்ததே இந்த மாதாந்தரத் தொகையாகும்.
ரூ. 7,000/-	பிரதி மாதமும் ரூ. 50/-	
ரூ. 14,000/-	பிரதி மாதமும் ரூ. 100/-	
ரூ. 28,000/-	பிரதி மாதமும் ரூ. 200/-	

இந்த சர்டிபிகேட்டுகளில் முதலீடு செய்யக்கூடிய உயர்ந்த பக்ஷத் தொகை—

வயது வந்த நபர் ஒருவருக்கு: ரூ. 28,000

வயது வந்த இரு நபர்கள் கூட்டாக வாங்கினால்: ரூ. 56,000

ஒவ்வொரு மைனரின் சார்பிலும் ஒரு கார்டியன் வாங்கக்கூடியது: ரூ. 28,000

விண்ணப்பங்கள், பம்பாய், கல்கத்தா, டில்லி, சென்னை மற்றும் பெங்களூரிலுள்ள ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியா ஆபீஸ்களிலும், ஹைதராபாத் ராஜ்யத்திற்குள் இருக்கும் ஹைதராபாத் ஸ்டேட் பாங்கின் கிளைகளிலும், மைசூர், மாண்டியா, சித்தல் துர்க்கம், சிக்மகளூர், ஷிமோகா, டும்கூர், மற்றும் ஹாஸனிலிருக்கும், பாங்க் ஆப் மைசூர் லிமிடெட் கிளை ஆபீஸ்களிலும், இந்தியாவில் இதர ஊர்களிலுள்ள இம்பீரியல் பாங்க் ஆப் இந்தியா கிளை ஆபீஸ்களிலும், சர்க்கார் கஜானா அலுவல்களை நடத்தும் மேற்குறித்த எந்த பாங்கின் கிளை ஆபீஸும் இல்லாத ஊர்களானால் அங்குள்ள சர்க்கார் ட்ரெஷரி அல்லது சப்-டிரெஷரிகளிலும் கிடைக்கும்.

இந்திய அரசாங்கம்

15 வருட அன்னியுடி சர்டிபிகேட்டுகள்

நாட்டிற்கு சுபிட்சம்; உங்களுக்கும் லாபம்

இதர விவரங்களுக்கு மேற்குறித்தபடி விண்ணப்பங்களை வாங்கும் ஆபீஸ்களில் ஏதாவதொன்றுக்கு மனுச் செய்க. அல்லது உங்கள் இராஜ்யத்தைச் சேர்ந்த ரீஜனல் நேஷனல் சேவிங்ஸ் ஆபீஸரிடம் விசாரிக்கவும். அல்லது நேஷனல் சேவிங்ஸ் கமிஷனர், ரயில்வே போர்டு பில்டிங், ஸிம்லா—3. விலாசத்திற்கு எழுதவும்.

வாழ்க்கை வர்ணனை

[12ம் பக்கத் தொடர்ச்சி]

அவர் பங்கெடுத்துக் கொள்ளலானார். அந்த சமயத்தில் காங்கிரஸ்காரர்கள் தேசியப் பிரசாரத்திற்காக "டில்லி சலோ" என்ற நாடகத்தைத் தயாரித்து நடத்தினார்கள். அந்த நாடகத்தில் ஜமுனா பங்கெடுத்துக் கொண்டார்.

பிறகு, அவர்களுக்குப் போட்டியாக கம்யூனிஸ்டுகள் "மா பூமி" என்ற நாடகத்தை நடத்தினார்கள். அதிலும் ஜமுனா நடித்தார். இந்த நாடகத்தில் அவரது நடிப்பை மக்கள் மிகமிகப் பாராட்டினார்களாம்.

காங்கிரஸ், கம்யூனிஸ்ட் நாடகங்களில் ஜமுனா திறம்பட நடித்ததைப் பார்த்த சில நண்பர்கள் அவரை "சினிமாப் படங்களில் நடிக்கச் செய்தால் எளிதில் ஒரு பிரபல நக்ஷத்திரம் ஆகி விடுவார்" என்று ஸ்ரீநிவாஸராவிடம் யோசனை கூறினார்கள். ஸ்ரீநிவாச ராவ், அவர்களுக்குத் திட்டமான பதில் அளிக்கவில்லை யென்றாலும், அவர் மனதிற்குள்ளாக 'ஜமுனாவை ஒரு சினிமா நக்ஷத்திரம் ஆக்கி வைக்க வேண்டும்' என்று திட்டம் போட்டே வைத்திருந்தார். அவர் சும்மா இருந்ததெல்லாம் ஒரு தகுந்த சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துத் தான்.

அவர் ஆவலோடு எதிர்பார்த்திருந்த அந்த நல்ல சந்தர்ப்பம் 1952ம் வருஷம் பிப்ரவரி மாதத்தில் அவரை நாடி வந்தது. பட முதலாளி—டைரெக்டரான பி. வி. ராமானந்தம் என்பவர் ஸ்ரீநிவாஸராவைத் தேடி வந்தார்; தம் படத்திற்கு ஜமுனாவை ஒப்பந்தம் செய்து கொள்ள விரும்புவதாகக் கூறினார். ஸ்ரீநிவாஸ ராவ் இதற்குச் சந்தோஷத்துடன் சம்மதித்தார். எழுநூற்றைம்பது ரூபாய் மாதச் சம்பளத்தில் ஜமுனா "ஜேய் வீர பாதாளா" என்ற தெலுங்குப் படத்தில் நடிப்பதற்கு ஒப்பந்தம் செய்து கொள்ளப் பட்டார்.

சுமார் ஒரு மாத காலத்திற்குப் பிறகு ஜமுனா சென்னைக்கு வந்து மேற்கூறிய படத்தின் முதல் ஷூட்டிங்கில் கலந்து கொண்டார். இந்த ஷூட்டிங் இரண்டே தினங்கள் தான் நடைபெற்றது. அதன் பின் இப்படத் தயாரிப்பே அடியோடு நின்று விட்டது.

முதல் படத்தில் நடித்து வந்த போதே ஜமுனா வேறு படங்களில் நடிப்பதற்கும் முயன்று வந்தார். அந்த சமயத்தில் டைரெக்டர் ராஜாராவ் என்பவர் தம் முதல் படமான "புட்டில்லு" படத்திற்கு நடிக, நடிகைகளைப் பொறுக்கிக் கொண்டிருந்தார். தம்முடைய கேமிரா நிபுணர் வி. என். ரெட்டியிடம் சமர்ப்பிப்பதற்காக அவர் பல நடிக நடிகைகளின் போட்டோக்களை சேகரித்திருந்தார். அவைகளுள் ஜமுனாவின் போட்டோவும் இருந்தது. பல பிரபல முகங்களினிடையே காட்சியளித்த புது முகம் ஜமுனாவின் போட்டோவை வி. என். ரெட்டி கதாநாயகி வேஷத்திற்குப் பொறுக்கி எடுத்தது குறிப்பிடத்தக்கது. 'புதிய நடிகையை வைத்துக் கொண்டு படம் எடுத்தால் வெற்றி பெறுமா?'—என்று பட முதலாளி சந்தேகித்தார். ஆனல் 'ஜமுனாவின்-காமிராவுக்கு மிக ஏற்ற முகம் வெற்றியளிக்கும்' என்று ஸ்ரீ. ரெட்டி வற்புறுத்தினர். முடிவில் ஜமுனாவே கதாநாயகி வேஷத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஜமுனா சிறு பெண்ணாயிருந்தபோது.

"புட்டில்லு" படம் தோல்வியாக முடிந்தது. ஆனால், அதற்கு ஜமுனா காரணம் அல்ல. அப்படத்தில் அவரது நடிப்பு கூடிய வரையில் நன்றாகவே இருந்தது. அதன் பலனாகவே ஏ. சங்கர ரெட்டி அவரைத் தமது "வெள்ளி சூப்புலு" என்ற படத்திற்கு ஒப்பந்தம் செய்து கொண்டார். இப்படம் ஐந்தாறு ரீல்கள் தயாரிக்கப்பட்ட பின் நின்று போய் விட்டது.

தமிழில், "மூன்று குளம் வெட்டினேன்; ஒன்றில் தண்ணீரே வரவில்லை; இன்னொன்றில் தண்ணீர் வந்து வரண்டு விட்டது: மூன்றும் குளம் முடியவே யில்லை" என்றொரு பழமொழி உண்டு. அதுபோல் ஜமுனா முதன் முதலாக முற்பட்ட மூனறு படங்களில் ஒன்று தோல்வியுற்றது: மற்ற இரண்டும் பாதியில் நிறுத்தப்பட்டு விட்டன—என்றானதும் ஜமுனா மனம் உடைந்துபோனார். இந்த நிலைமையில் அவரை அநுபவமிக்க டைரெக்டர் பட முதலாளி எச். எம். ரெட்டி தைரியமாக ஒப்பந்தம் செய்து கொண்டு "பணம் படுத்தும் பாடு" தமிழ்—தெலுங்குப் படங்களில் நடிக்கச் செய்தார். தமிழ் நடிகை டி. ஆர். ராஜகுமாரியைப் போல ஜமுனாவுக்கும் அவரது நான்காவது படம் முதல் அதிர்ஷ்டம் அவர் பக்கம் திரும்பி யிருக்கிறது.

முதன் முதலாக, ஜமுனா நடித்த தமிழ்ப் படம் "பணம் படுத்தும் பாடு" தான். இப்படம் வெற்றி பெற்றதால் ஜமுனாவுக்கு நல்ல பெயர் கிடைத்தது. இதைத் தொடர்ந்து அவர் "அந்தே மனவாள்ளே", "நிருபேதலு" ஆகிய இரண்டு படங்களில் நடித்தார். இப்படங்களும் வெற்றி பெற்று, "ஜமுனா ஒரு முன்னுக்கு வரக்கூடிய நடிகை" என்பதை நிரூபித்தன. படவுலகில் அவருக்கு மிகுந்த மௌஸ் ஏற்பட்டிருக்கிறது.

ஜமுனா தற்போது ஆனந்தாவின் "மேலு கொலுப்பு", வாஹினியின் "பங்காரு பாப்பா", நாகூரின் தமிழ், தெலுங்கு "சந்தேகி", அன்னபூர்ணாவின் "தொங்க ராமுடு", விக்ரமின் "மா கோபி", விஜயாவின் தமிழ், தெலுங்கு "மிஸ் அம்மா" ஆகிய படங்களுக்கு ஒப்பந்தமாகி, நடித்து வருகிறார்.

தாம் ஒரு முன்னணி நக்ஷத்திரமாக விளங்க வேண்டும் என்பதே ஜமுனாவின் இடைவிடாத எண்ணம்; முயற்சி. அதிகம் பேசாமல் அடக்கமாகத் தம் வேலையைக் கவனித்துக் கொண்டு போகும் சுபாவமுடைய ஜமுனாவுக்கு "அனார்க்கலி" வேஷத்தில் தோன்றி நடிக்க வேண்டும் என்ற அவா உண்டு. தம் தாய்பாஷையான தெலுங்கு தவிர அவருக்கு ஆங்கிலம், ஹிந்தி, கன்னடம், தமிழ் ஆகிய பாஷைகள் ஓரளவு தெரியும்.

மெலிந்து உயர்ந்த சரீரமும், விசாலமான கண்களும், மா நிறமும் உடைய ஜமுனா தம் ஓய்வு நேரத்தை புஸ்தகப் படிப்பிலும், சங்கீத சாதகத்திலும், தம்பி கிரிதருடன் வீட்டிலேயே விளையாடுவதிலும் கழிக்கிறார்.

இனி வரவிருக்கும் படங்கள் மூலம் ஜமுனா சீக்கிரமே தமிழ், தெலுங்குப் பட உலகில் ஒரு முன்னணி நக்ஷத்திரமாக ஆகிவிடுவார் என்பதற்கான திறமைகளும், அறிகுறிகளும் அவரிடம் காணப்படுகின்றன.

[30-ம் பக்கத் தொடர்ச்சி]

கம் எந்தப் படத்திலும் இல்லையெனலாம்; அக்காட்சியில் நடிகர் உணர்ச்சியற்று வார்த்தைகளை மட்டும் பொரிந்து தள்ளுகிறார்; நடிப்பு சூன்யம் அந்தக் காட்சியில். இது போன்ற கட்டங்கள் (வசன ஆர்ப்பாட்டம்) தியேட்டரில் இருக்கும் போது ஒருகால் சுவாரஸ்யமாக இருக்கக் கூடும். ரஸிகர்கள் மனதில் அழியா இடம்பெற வேண்டுமானால் நடிப்புக் கலையில் முன்னேற வேண்டும் நம் நட்சத்திரங்கள். ஆகவே, "அவசியம் நேர்ந்தாலன்றி நீண்ட நேர வசனங்களைப் பேசமாட்டோம்" என நடிகர்கள் மறுத்துக் கூறவேண்டும். இல்லையேல், நம் நடிகர்கள் பள்ளிப் பிள்ளைகளைப் போல—பாடங்களை பாராமல் படித்துவிட்டு ஒப்புவிக்கும் 'மாணவர்களாக' இருப்பார்களே அல்லாமல் 'நடிப்புக் கலை மன்னர்களாக' மாறவே முடியாது. தமிழ்ப் படங்களில் பேச்சு 'விரிந்து' நடிப்பு 'சுருங்கி' வருவதைத் தடுக்கவேண்டும். வசனகர்த்தாக்கள் இதை உணர்ந்து கனல் கக்கும் தங்கள் பேனாவின் 'வேகத்தை' சற்று தளர்த்திக் கொண்டால் தமிழ் நாட்டு நட்சத்திரங்கள் நடிப்புக் கலையில் முன்னேற்றம் காண நிச்சயம் வழி பிறக்கும்.

பிரம்ம லோகம்

மேரி வீட்டில் மேரியும் அவள் வயோதிகத் தந்தையும் உட்கார்ந்திருக்கின்றனர். மேரியிடம் பணம் வசூலிக்க மிகவும் ஆக்ரோஷத்துடன் வந்த வாலிபன் அவளைக்கண்டதும் பல்லை இளிக்கிறான். "பணத்திற்கு அவசரமில்லை, நான் வேண்டுமானல் தருகிறேன்" என்று அசடு வழிகிறான். அவ்வளவு தான் காளியாக மாறி விடுகிறாள் மேரி. "நீயுமாச்சு உன் பணமும் ஆச்சு, போ வெளியே" என்று விரட்டுகிறாள், அந்த வாலிபனை. இது, விஜயா புரொடக்ஷன்ஸின் "மிஸ் அம்மா" தமிழ்-தெலுங்குப் படத்தில் வரும் ஒரு சம்பவமாகும். இது சென்ற மாத இறுதியில் வாஹினி ஸ்டுடியோவில் படமாகியது. வாலிபனை நம்பியாரும், மேரியாக சாவித்திரியும், அவள் தந்தையாக துரைஸ்வாமியும் அன்று நடித்தார்கள். இப்படத்தில் மற்றும் ஜெமினி கணேசன், கே. சாரங்கபாணி தங்கவேலு, ஜமுனா ஆகியோரும் நடித்து வருகின்றனர். படம் பிரஸாத் டைரெக்ஷனில் உருப்பெற்று வருகிறது.

என் மகள்

இம்மாதம் திரைக்கு வரக்கூடிய படங்களின் ஜாபிதாவில் "என் மகள்" ஒன்ருகும். அசோகா பிக்சர்ஸாரின் இரண்டாவது தயாரிப்பாகும் இது. படப் பிடிப்பு பின் இறுதிக் கட்ட வேலைகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. கே. வி. ஆசாரியா எழுதியுள்ள இப்படக் கதை புதிய முறையில் இருக்குமாம். நீண்ட நாட்களுக்குப் பிறகு ரஞ்சன் நடித்துள்ள தமிழ்ப் படமாகும் இது. இதில் அவர் தவிர, எம். என். நம்பியார், எம். ஜி. சக்ரபாணி, டி. பாலசுப்ரமண்யம், எஸ்.வரலக்ஷ்மி, மைனவதி, மீனுக்ஷி, கருணநிதி, ஸ்டன்ட சோமு ஆகப் பலர் நடித்துள்ளனர். இப்படத்தை ராஜா சந்திரசேகர் இப்பொழுது படத்தை டைரெக்ட செய்து வருகிறார்.

அம்மையப்பன்

நேஷனல் புரொடக்ஷன்ஸின் "அம்மையப்பன்" நியூடோன் ஸ்டுடியோவில் அதி ஜரூராகத் தயாராகி வருகிறது. வி. கே. ராமசாமி சம்பந்தப்பட்ட சில காட்சிகள் இப்படத்திற்கென சென்ற மாதம் நியூடோன் ஸ்டுடியோவில் படமாக்கப்பட்டன. மற்றும் எஸ். எஸ். ராஜேந்திரன். பி. எஸ்.வீரப்பா, டி.வி. நாராயணசாமி, எம். ஆர்.சாமிநாதன், எம். என். கிருஷ்ணன், எஸ். வரலக்ஷ்மி, ஜி. சகுந்தலா இவர்கள் தவிர ராஜேந்திரன் நாடக மன்றத்தாரும் படத்தில் நடித்து வருகின்றனர். பீம்ஸிங் டைரெக்ஷனில் உருப்பெற்று வரும் இப்படத்தின் கதை, வசனம், மு. கருணநிதியால் எழுதப்பெற்றுள்ளது.

செந்தாமரை

மதராஸ் பிக்சர்ஸாரின் தயாரிப்பான "செந்தாமரை" நியூடோனில் படமாக்கப்பட்டு வருகி

நீங்கள் ஆச்சரியப்படத்தக்க வகையில் தயாராகிறது

குண்டூசி

தீபாவளி மலர்

விலை ரூ. 3 தான். (தபால் செலவு அணு 10)

உங்கள் மலருக்கு இப்பொழுதே உங்கள் ஊர் ஏஜண்டிடம் முன் பணம் கொடுத்துப் பதிவு செய்து கொள்ளுங்கள்

நடன அரங்கில் புகழ் பெற்று வரும் சாயி சுப்புலட்சுமியை "மலைக் கள்ளன்" ரஸிகர்களுக்கு அறிமுகப்படுத்திவைக்கிறது.

றது. இப்படத்தின் வசனங்களை அரங்கண்ணல் எழுதியிருக்கிருர். பழைய கால நக்ஷத்திரம் எம். கே. ராதாவும், முன்னணி நக்ஷத்திரம் சிவாஜி கணேசனும் சேர்ந்து நடிக்கும் முதல் படமாகும் இது. இவ்விருவர் தவிர ராஜேந்திரன், தங்கவேலு, லலிதா, பத்மினி, விமலா, ஆகியோரும் நடித்து வருகின்றனர். இப்படத்திற்கென லலிதாவின் நடனம் ஒன்றுசென்ற மாதம் படமாக்கப்பட்டது. படத்தை பீம்ஸிங் டைரெக்ட செய்து வருகிருர்.

வைரமாலை

வைத்யா பில்ம்ஸாரின் "வைரமாலை" இம்மாதம் இரண்டாவது வாரத்தில் திரையிடப்பட இருக்கிறது. "தோட்டக்கார" விஸ்வநாதன் எழுதி, பல முறைகள் நாடகமாக நடிக்கப்பட்டது இது. பத்மினி, ராகினி, கே. ஆர். செல்லம், மனேஹர், தங்கவேலு, பிர

ண்ட் ராமஸ்வாமி, போன்ற நக்ஷத்திர நடிகர்களுடன், மாலி, வாதிராஜ், விஸ்வநாதன் ஆகிய புது முகங்களும் நடித்துள்ள ஹாஸ்யப் படமாகும் இது. படத்தை ஜகன்னதன் டைரெக்ட் செய்துள்ளார்.

சந்தேஹி

விரைவில் எதிர்பார்க்கக் கூடிய படங்களில் நாகூர் ஸினி புரொடக்ஷன்ஸின் "சந்தேஹி" ஒன்ருகும். இது தமிழ்-தெலுங்கு-மலையாளம் ஆகிய மூன்று பாஷைகளிலும் தயாரிக்கப்பட்டு வருகிறது. மூன்று படங்களையும் தயாரிப்பாளர் எப். நாகூரே டைரெக்ட் செய்து வருகிருர். நரசிம்ம பாரதி, டி. எஸ். துரைராஜ், எம். ஜி. சக்ரபாணி, எம. வி. ராஜம்மா, ஜமுன ஆகியோர் முக்கிய பாகங்களில் நடித்து வருகின்றனர்.

பத்மினி

வருகிற விஜயதசமி தினத்தன்றுதிரைக்குவருமெனத்தெரிகிறது, அசோகா ப்ரொடக்ஷன்ஸாரின் "பத்மினி" திரைப் படம். கோவை சென்டிரல் ஸ்டூடியோவில் தயாராகி மெருகு கொடுக்கப்பட்டு வருகிறது இப்படம். பி. எஸ். கோவிந்தன், டி. எஸ். பாலையா, ஏ. கருணநிதி, ஸ்டண்ட் சோமு, எம். ஏ. சின்னப்பா, எம். எஸ். திரௌபதி, டி. பி. முத்துலெக்ஷிமி, எஸ். ஆர். ஜானகி, பி. ஆர். மங்களம், ஏ. ஆர். சகுந்தலா ஆகப் பலர் நடித்துள்ள படம் இது. வேல்சாமி கவி இப்படத்தை டைரக்ட் செய்துள்ளார்.

Edited and Published by P. R. S. Gopal (Gundoosi) at 26, Godown St., Madras—1. Printed by S. Sriraman at the Commercial Printing and Publishing House, 46, Armenian Street, Madras—1.

சென்னை
சித்ரா
பாரத்
காமதேனு
மற்றும் தென்னாடெங்கும்....
ஆகஸ்ட்
14 உ
முதல்
அவ்வை புரடக்ஷன்ஸ்
ரத்த-
பாசம்
டைரக்ஷன்
R.S. மணி
கதை, வசனம்
ஸ்ரீதர்
ஸ்டுடியோ
நெப்ட்யூன்

GUNDOOSI Regd. No. M. 4924 September 1954
Registered as a News Paper in Ceylon.